# தமிழ் வள்ளல் பாண்டித்துரையார்

முனைவர் மு. வளர்மதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# தமிழ் வள்ளல் பாண்டித்துரையார்

முனைவர் மு. வளர்மதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி வளாகம், தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Tamizh Vallal Pandithuraiyar |
| Author | : | **M. Valarmathi** |
| Publisher | : | International Institute of Tamil Studies,<br>C.I.T. Campus, Tharamani,<br>Chennai - 600 113. |
| Publication No. | : | 307 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | First |
| Paper used | : | TNPL 16 Kg Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 Points |
| No. of pages | : | IV + 104 = 108 |
| Price | : | Rs. 25/- |
| No. of Copies | : | 1000 |
| Printed by | : | Shri Vignesh Printers |
| Subject | : | Contribution of Pandithuraiyar to Tamil |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# அணிந்துரை

பாண்டித்துரையார் பொன்னுச்சாமித் தேவரின் மூன்றாவது மகனாக 21.03.1867 அன்று பிறந்தார். உக்கிரப்பாண்டியன் என்ற பெயரும் அவருக்கு உண்டு. பாலவநத்தம் சமீன்தாராக விளங்கிய பாண்டித்துரையார் தமிழுக்கு ஆற்றிய பணிகள் என்றும் நெஞ்சில் நினைந்து போற்றத்தக்கன.

தமிழ் மொழியை வளர்க்கப் பாண்டிய மன்னர்கள் மூன்று சங்கங்களை உருவாக்கினர். முதல் சங்கத்தைக் காய்சினவழுதியும், இடைச்சங்கத்தை வெண்டேர்ச் செழியனும், கடைச்சங்கத்தை முடத்திருமாறனும் தோற்றுவித்தனர் என்பர்.

பாண்டித்துரையார் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை 14.9.1901-இல் உருவாக்கினார். இச்சங்கத்தில் 10-ஆம் ஆண்டு விழாவினைத் தஞ்சையில் 1910-இல் நடத்தினார்.

ரா. இராகவையங்கார் அவர்களை ஆசிரியராகவும் மு. ராகவையங்கார் அவர்களைத் துணையாசிரியராகவும் கொண்டு 'செந்தமிழ்' எனும் சீரிய இலக்கிய இதழை நடத்தினார். மேலும் கிடைத்தற்கரிய அரிய தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்தார்.

சிங்காரவேலு முதலியார் அபிதான சிந்தாமணி என்ற நூலினைப் போதுமான நிதி வசதி இல்லாததால் வெளியிடாமல் இருந்தார். அவருக்கு நூல் வெளியிட உதவி செய்தார். (ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப. 1076).

ஈழத்தைச் சேர்ந்த நீதியரசர் கு.கதிரைவேற்பிள்ளை அவர்கள் எழுதிய 'தமிழ்ச் சொல் அகராதி' என்ற நூலின் மூன்று தொகுதிகளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வழி வெளியிட்டார். தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களின் பதிப்புப் பணிக்கு உதவி செய்தார்.

மேலும் தமிழ்ச் சான்றோர்கள் பலருடைய நூல்களை மதுரைத் தமிழ்ச் சங்கம் வாயிலாக வெளியிட்டார். பாண்டித்துரையார் நல்ல கவிஞராகவும் விளங்கினார். இசைக் கலையிலும் ஈடுபாடு கொண்டவர்.

அந்நாளில் 'ஸ்காட்துரை' எனும் ஆங்கிலோ இந்தியர் திருக்குறளை மனம்போன போக்கில் திருத்தி வெளியிட்டு இருப்பதை அறிந்து பாண்டித்துரையார் கொதித்தெழுந்தார். அவரிடம் எஞ்சி இருந்த திருக்குறள் படிகளை விலைக்கு வாங்கி நெருப்பிட்டுக் கொளுத்திய தமிழ்ப் பற்றாளர் இவர். சைவத்தையும், தமிழையும் தம்மிரு கண்களாகக் கருதிய பாண்டித்துரையார், 'சைவமும் தமிழும் தழைத்தோங்க வழி செய்வோம்' என்ற கோட்பாட்டின்படி வாழ்ந்தார்.

தமிழ்ப்பணியைத் தலையான பணியாகக் கருதிச் செயல்பட்ட பாண்டித்துரையார் தேசிய இயக்கத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். அதன் விளைவாக வ.உ.சி. அவர்களுடன் நட்புப் பூண்டார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாண்டித்துரையார் ஆற்றிய அரும்பெரும் செயல்களைக் குறித்து,

'வியந்தது வையம் சென்றநாள் சிலவே
விரிந்தது மதுரைத் தமிழ்ச்சங்க நிலவே
அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்
அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே இனியுமே
புலவர் வகுப்பு மூன்று படைத்தான்
புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்
பலதமி ழிலக்கிய மாசு துடைத்தான்'

(பாரதிதாசன் கவிதை பக். 1079)

என்று போற்றியுள்ளார்.

இந்நிலையில் இவர்

'இருளினை வறுமை நோயை
இடறுவேன்; என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன்றை நான்
ஒருவனே உதிர்ப்பேன்; நீயோ
கருமான்செய் படையின்வீடு!
நான் அங்கோர் மறவன்! கன்னற்
பொருள்தரும் தமிழே நீஓர்
பூக்காடு: நானோர் தும்பி!'

(பாரதிதாசன் கவிதை பக். 448)

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடலுக்கு எடுத்துக்காட்டாகக் கூறும் வகையில் தமிழ்த் தும்பியாகவும், தமிழ் இலக்கியத்தைக் காக்கும் படை மறவராகவும் விளங்கினார் எனல் பொருத்தமானதாகும்.

புதுநெறி காட்டிய புலவன் பாரதியாரைப் போன்று பாண்டித்துரையாரும் இளமையில் தன்னுடைய 44-ஆவது வயதில் மறைந்தார். 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாக்கு. பாண்டித்துரையார் மறைந்துவிட்டாலும் அவர் செய்த தமிழ்த் தொண்டுகள் நிலைத்து நிற்கும் தன்மை உடையன.

நிறுவனத்தில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணிபுரிகின்ற முனைவர் மு. வளர்மதி அவர்கள் எழுதிய 'தமிழ் வள்ளல் பாண்டித்துரையார்' என்ற இந்த நூலினை வெளியிடுவதில் நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது. 'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்பது பழமொழி. அது போன்று இந்நூல் சிறியதாக இருந்தாலும் நூலாசிரியர் செய்திகளைச் செறிவுபட ஆராய்ந்துள்ளார்.

நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலினை வனப்புற அச்சிட்டுத் தந்த அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

3.8.1998

இயக்குநர்

# தமிழ் வள்ளல் பாண்டித்துரையார்



தோற்றம்
21-03-1867

மறைவு
02-12-1911

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | பாண்டித்துரையார் | 5 |
| 2 | சோமசுந்தரவிலாசம் | 14 |
| 3 | வீரர்க்குள் வீரனிவன் | 21 |
| 4 | பாண்டித்துரையார் இயற்றிய நூல்கள் | 26 |
| 5 | தமிழ் நூற்பதிப்பு | 31 |
| 6 | மதுரைத் தமிழ்ச் சங்கம் | 44 |
| 7 | பாண்டித்துரையாருடன் மறைமலையடிகளும் வ.உ. சிதம்பரனாரும் | 63 |
| 9 | வேண்டும் ஒரு தமிழ்ப்படை | 76 |
| | பின்னிணைப்பு | 86 |

# முன்னுரை

தமிழின் நலமே தமிழர் நலம் என்ற இலட்சியத்துடன் தமிழ்ப் பணியாற்றிய அறிஞர் பெருமக்கள் பலர். இவர்கள் காலந்தோறும் தமிழுக்கு நேரிட்ட கேடுகளைக் களைந்தெறிய அரும்பாடுபட்டு வந்துள்ளனர். தமிழைப் பிற மொழிகளின் ஆதிக்கப்பிடியிலிருந்து மீட்கும் முயற்சி அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆகையால்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

கடல்போலும் எழுக! கடல்
முழக்கம்போல் கழறிடுக,
'தமிழ் வாழ்' கென்று!
கெடல் எங்கே தமிழின் நலம்
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

என்று போர்க்குரல் எழுப்பினார். கடந்த பல நூற்றாண்டுகளாக வடமொழியே தெய்வமொழி, தமிழ் நீசமொழி என்று பேசி வந்தவர்களிடமிருந்து தமிழை மீட்கும் வகையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர் பாண்டித்துரையார். இச்சங்கத்தின் மூலம் அரிய தமிழ்ச் சுவடிகள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இன்று நாம் முன்வைக்கும் தனித்தமிழின் சிறப்பை அன்றே உணர்ந்து அதற்கு விதையிட்டவர் பாண்டித்துரையார்.

பாலவநத்தம் சமீன்தாராக இருந்த அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டு பலரையும் வியக்க வைத்தது. மதுரையில் அவர் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவியதும், வறுமையில் வாடிய தமிழ்ப் புலவர்களையும், அறிஞர்களையும் ஆதரித்ததும், செந்தமிழ் இதழைத் தொடங்கி நடத்தியதும், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. யின் பணிகளுக்கு உற்ற தோழராய் இருந்து உதவியதும், தமிழுக்கு வந்த இடையூறுகளைக் களைய அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் என்றும் அழியாத

தமிழ்ப்பணிகளாகும். இத்தகைய தமிழ்த் தொண்டாற்றிய தமிழ் வள்ளல் பாண்டித்துரையாரை நினைவூட்டும் வகையில் இந்நூல் வெளியிடப்படுகிறது. பாண்டித்துரையாரைப் பற்றி விரிவான ஆய்வு மேற்கொள்ள இந்நூல் அடித்தளமாக அமையும் என்று நம்புகிறேன்.

இந்நூலை எழுத எனக்கு ஊக்கமளித்த மதிப்பிற்குரிய குருவிக் கரம்பை வேலு அவர்களுக்கும் 'மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம்' எனும் தமது நூலைக் கொடுத்து உதவிய புலவர் இரா. இளங்குமரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் எழுதும் வாய்ப்பை நல்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. வளர்மதி

# 1. பாண்டித்துரையார்

“ வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்”[1]

(தொல். பொருள், 1336: 78.)

எனும் தொல்காப்பியனார் கூற்றுப்படி வேங்கடம் முதல் குமரிவரை உள்ள நிலப்பகுதியை ஆண்ட மூவேந்தர்களாலும், அவர்கள் ஆதரித்த புலவர் பெருமக்களாலும், தமிழ்மொழி பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டதென்பது வரலாறு. இந்த வரலாற்றின் தொடர்ச்சியாகக் குறுநில மன்னர்களும், வேளிரும், சைன, பௌத்தர்களும், சைவ, வைணவர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் பின் வந்த சேதுபதிகளும், சமீன்தார்களும், ஆதீன கர்த்தாக்களும் இலக்கண, இலக்கியச் சுவையுடன் தமிழைக் கையாண்டு தமிழின் சிறப்பை மேலோங்கச் செய்தனர்.

இந்த நீண்ட நெடிய வரலாற்றுக்கு நடுவே ஆரியரின் சூழ்ச்சியும், ஆங்கிலேயர் வருகையும், அவர்களின் ஆட்சியும் தமிழின் மாட்சியை, தமிழரின் மாண்பைச் சீர்குலையச் செய்த வரலாறுதான் நாம் கவனிக்கக் கூடியது.

“ வடபாங்கில் முன்னாளில் தமிழரை வென்றார்
வந்திட்ட ஆரியர் உடும்பையும் தின்றார்
இடம்பெற்றபின் சைவம் மிக நல்லதென்றார்
இன்று தேவைப்படல் கொலைப்படை அன்றோ
எண்ணாயிரம் தமிழ் மக்களைக் கழுவால்
கிழித்த குருதியைத் தேனென்றான் விழியால்
பண்ணப் பழகடா பச்சைப் படுகொலை
பைந்தமிழர்க்கெல்லாம் உயிரடா விடுதலை”[1]

எனச் சூறைக்காற்றாய் சுழன்று வந்த பாவேந்தரின் சொற்கள் இந்த ஆரியச் சூழ்ச்சி வரலாற்றை எடுத்துக்காட்டும். ஆங்கிலமொழிக் கல்வியால் மேலும், மேலும் தமிழ்மொழி பல இடையூறுகளைச் சந்தித்தது.

"ஐந்தெழுத் தாலொரு பாடையு மாமென்று
அறையவும் நாணுவர் அறிவுடை யோரே"[2]

எனத் தமிழை எள்ளி நகையாடிய போலித் தமிழ்ப் புலவர்களாலும், தமிழ் நூல்களில் சொல்லப்பட்ட உயர்ந்த கருத்துக்கள், வடமொழி நூல்களிலிருந்து வந்தவை என்று கூறிய வடமொழி வாணர்களாலும் பல இன்னல்களைத் தமிழ்மொழி சந்தித்தது என்பது பல தமிழறிஞர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

'தமிழில் பேசுவதே இழிவு எனக் கருதிய காலம். தமிழில் பேசினால் புரியுமா எனக் கேலி செய்த காலம். யாரேனும் பேசினால் அவருக்கு ஒன்றும் தெரியாது எனத் தூற்றிய காலம்'.[3]

'எனக்கு டமிலில் பேச வராது' என்று இறுமாப்புடன் பேசிய காலம். ஆங்கிலம் என்னும் செவிலித்தாய் நுழைந்தபின் அதன் அரவணைப்பிலே தமிழ்த்தாயை மறந்த காலம்.'[4]

'தமிழ்நாட்டில் பிறந்து, தமிழே வீட்டில் பேசித் தமிழராகவே வாழ்ந்த வடமொழி அறிஞர்கள், தேவாரம், திருவாசகம் முதலான தமிழ் நூல்களையும் படிக்காமல் புறக்கணித்தார்கள். தமிழ் மட்டும் கற்றவர்களை மதிக்காமல் நடந்தார்கள். சோழமன்னர்கள் பலவும் தந்து பெருமைப்படுத்திப் போற்றி வந்த தேவாரப் பாடல்களுக்குக் கோயில்களில் சிறப்பிடம் இல்லாமல் செய்து வந்தார்கள். தமிழை நீசபாஷை என்று ஒதுக்கி, வடமொழி மட்டுமே தேவபாஷை என்று உயர்த்திப் பேசினார்கள்.'[5]

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழின் நிலை இப்படித்தான் இருந்தது. தமிழைப் பேசிக் கொண்டே தமிழ் மொழியைக் குழிதோண்டிப் புதைக்க முயன்ற பண்டிதர்களும் உண்டு. இத்தகைய காலச் சூழலில் மூன்று சங்கம் கண்ட தமிழை நான்காவது தமிழ்ச்சங்கம் காணும் பெருமை பெறச் செய்தவர், இராமநாதபுரம் மாவட்டத்தில் பாலவனத்தம் ஜமீன்தாராக இருந்த பாண்டித்துரைத் தேவராவார்.

## செந்தமிழ் வள்ளல்கள் சேதுபதி மரபினர்

பத்தொன்பதாம் நூற்றாண்டில், இராமநாதபுரம் சேதுபதி மரபினர் பெருஞ் செல்வந்தர்களாகவும், தமிழ் வள்ளல்களாகவும் நாடு போற்ற வாழ்ந்துள்ளனர். சேதுபதிகளுள் குறிப்பிடத்தக்க தமிழ்ப்பணியாற்றிய

பொன்னுச்சாமித் தேவர், முத்துராமலிங்க சேதுபதி ஆகியோரும் இவர்களுடைய புதல்வர்களான பாண்டித்துரைத் தேவர், பாஸ்கர சேதுபதி ஆகியோரும் தமிழ் வள்ளல்கள் என்று சிறப்பிக்கப்பட்டனர். இவர்கள் ஆற்றிய அருந்தமிழ்த் தொண்டின் தொடர்ச்சியாகத்தான் பிற்காலத்தில் தனித்தமிழியக்கம் காணும் வாய்ப்பு ஏற்பட்டது என்பதை வரலாறு அறிந்தோர் ஒப்புக்கொள்வர். பொன்னுசாமித் தேவரும் அவருடைய இளவல் முத்துராமலிங்க சேதுபதியும் கல்வியறிவில், அரசியல் துறையில், தமிழ்ப் புலமையில், ஆராய்ச்சித் திறனில், கொடையில் சிறந்து விளங்கினர். அரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதில் நாட்டம் செலுத்தினர். "தமிழ் நூல் வெளியீட்டுக்குத் தேவர் செய்த உதவிகள் பலவாகும். தில்லையம்பூர் சந்திரசேகர கவிராயரைக் கொண்டு தனிப்பாடல் திரட்டு வெளியிட்டார். திருக்குறள், பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, சேதுபுராணம் முதலிய இலக்கியங்களும், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தருக்க சங்கிரகம் முதலிய இலக்கண நூல்களும் ஆறுமுக நாவலரைக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளார். இவர்தம் இசைத் தமிழ்ப் புலமை பொன்னுசாமித் தேவரவர்கள் பாடிய "ஸ்வரகீர்த்தனை" என்று "ரசிக ரஞ்சனம்" என்னும் இசைநூலில் வரும் பகுதியால் விளங்குகிறது. இவர்தம் மருத்துவத்திறமும் அதனைப் பரப்பும் நோக்கமும் தம் அரண்மனை எழுத்தர் முத்துக்கருப்பப்பிள்ளையைக் கொண்டு வெளியிட்ட "வைத்திய சார சங்கிரகம்" என்னும் நூலால் விளங்கும்."[6] தமிழ்ப் பணியாற்றும் தமிழறிஞர்களை, புலவர்களை ஆதரித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதும் தமிழுக்குச் செய்யும் தொண்டாகக் கருதினர்.

"தாய்மொழிப் பற்றிலும் இவ்வரச மரபினர் தலை சிறந்திருந்தனர். வீரத்தோடு தமிழறிவும், பரம்பரையாக வந்த இவரது குலதனங்களாகும். அதனால் செந்தமிழ்வாணர் பலரை ஆதரித்தும், அவர்கட்கு முற்றூட்டு நிலங்களும் மகிமைகளும் (உபகார வேதனம்) உதவியும் தமிழ்வளர்ச்சி புரிந்து வரலாயினர் சேதுபதிகள். ஒரு துறைக்கோவை பாடிய அமிர்த கவிராயர், சர்க்கரைப் புலவர், மிதிலைப்பட்டிக் கவிராயர் முதலிய தமிழ்ப் புலவர்களெல்லாம் இவ்வாறு ஆதரவு பெற்றவர்களே. 'சேதுநாடும் தமிழும்' (ரா. இராகவையங்கார்) என்ற அரிய ஆராய்ச்சி நூலால் இன்னோர் தமிழ் வளர்ச்சி புரிந்த திறம் மிகத் தெளிவாகக் கூடியது"[7] என்ற மு. இராகவையங்காரின் குறிப்பு தமிழறிவும், தமிழர் என்ற தன்மான உணர்வும் மிக்கவர்களாகத் திகழ்ந்தவர்கள் சேதுபதி வள்ளல்கள் என்பதைக் காட்டுகிறது.

இவர்களுள்ளும் பாண்டித்துரையாருக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. தாய்மொழிக் காப்பு தலைமுறைக் கடமை என உணர்ந்து அன்றைய வடமொழி, ஆங்கில ஆதிக்கத்திலிருந்து தமிழை விடுபடச் செய்வது என, தமது பணியைத் தொடர்ந்தார். தமிழகமெங்கிலும் உள்ள தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள், புலவர் பெருமக்களை ஒன்று திரட்டி, அரிய பல இலக்கியங்களை வெளியிட்டு, அடுத்த தலைமுறையினரும் இப்பணியைத் தொடருமாறு செய்தார். இதற்கென மதுரையில் **நான்காம் தமிழ்ச்சங்கம்** நிறுவியவர் என்ற சிறப்பினால் பாண்டித்துரையார் தனித்துவம் வாய்ந்தவராகத் திகழ்கிறார்.

## பாண்டித்துரை - இளமைப்பருவம் - கல்வி

சேதுநாட்டின் அமைச்சர் பொன்னுச்சாமி தேவரவர்களுக்கும் சேதுநாட்டு அரசியார் பர்வதவர்த்தினி நாச்சியாரின் தமக்கையான முத்துவீராயி நாச்சியார் என்ற பெரிய நாச்சியார் அவர்களுக்கும் மூன்றாவது மகனாக பாண்டித்துரைத் தேவர் 21.3.1867 ஆம் நாளன்று பிறந்தார். பொன்னுச்சாமித் தேவருக்கு மூன்று ஆண்மக்கள். மூத்தவரான கோட்டைச்சாமி என்ற பெரியசாமி உலகியலறிவும் ஆங்கிலப் பயிற்சியும் மிக்கவர். அவருக்கடுத்த இரண்டாமவர் சிவஞானம் என்ற சீமைச்சாமி நீதிமானாக, இசைப்பயிற்சி உடையவராகத் திகழ்ந்தவர். மூன்றாமவர் பாண்டித்துரை, தியாக உணர்வும், பன்மொழித் திறமும், அழியாத தமிழ்ப் பற்றும் மிக்கவராக இருந்தவர்.

“ பேச்சிலே பெரியசாமி
பெருமையிலே சீமைச்சாமி
அழகிலே பாண்டித்துரை
அமைந்தார் பொன்னுச்சாமி மக்கள்”[8]

என்ற நாட்டுப்பாடல் இவர்களின் தனிச்சிறப்புப் பற்றி குறிப்பிடுகின்றது.

ஆனால் இம்மூவரும் தமது குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்தனர். தந்தை இறந்தபோது பாண்டித்துரையாருக்கு வயது மூன்றுதான். இவருடைய சிறிய தந்தையார் முத்துராமலிங்கச் சேதுபதியின் மகன் பாஸ்கர சேதுபதி (3.11.1868) இவருக்கு இளவலாவார். தமையனாரின் குழந்தையான பாண்டித்துரையாரிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். பொன்னுச்சாமித் தேவர், முத்துராமலிங்க சேதுபதி ஆகிய இருவரைப் போலப் பாண்டித்துரையும், பாஸ்கர சேதுபதியும் இணைபிரியா உடன்பிறப்பாக விளங்கினர்.

பாண்டித்துரையாருக்குத் தந்தையார் இட்ட பெயர் உக்கிர பாண்டியன். கடைச்சங்கக் காலத்தில் இறுதியாக இடம்பெற்ற மன்னன் உக்கிரப் பெருவழுதிப் பாண்டியன். நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர் பெயரும் உக்கிரப் பாண்டியன் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இலக்கிய உலகில் பாண்டித்துரைத் தேவர் என்று சிறப்புப் பெயர் பெற்றார். இவரைப் பாண்டித்துரைச்சாமி என்றும் குறிப்பிடுவர். தந்தையை இழந்த மூன்று புதல்வர்களும் 'ஏஜண்டு சேஷாத்திரி ஐயங்கார்' என்பவரின் பொறுப்பில் வளர்ந்தனர். இவர் பொன்னுச்சாமித் தேவரின் நன்னம்பிக்கைக்கு உரியவர். அவருடைய சமீன் சொத்துக்கள் முழுவதும் இவருடைய பராமரிப்பில் இருந்து வந்தன.

சேஷாத்திரி ஐயங்கார் பாண்டித்துரைத் தேவருக்குத் தகுந்த கல்விப் பயிற்சி அளிப்பதில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டார். பாண்டித் துரையாரின் இளம்பருவம் முதல் உடனிருந்து இவருக்குத் தமிழறிவை ஊட்டியவர் 'அழகர் ராசு' என்ற புலவர். சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்த வேங்கடேசுவர சாஸ்திரி என்பவர் இவருக்கு ஆங்கிலமொழி ஆசிரியராக இருந்தார்.

சிறந்த ஆசிரியர்களிடம் தனிப் பயிற்சி பெற்று மொழிப் புலமையை வளர்த்துக் கொண்ட பாண்டித்துரையார் உயர்கல்வி நிறுவனத்திலும் பயின்றுள்ளார். "இராமநாதபுரத்தில் ஸ்வார்ட்ஸ் துரை மகனாரால் நெடுங்காலத்துக்கு முன் ஸ்தாபிக்கப்பெற்று நடைபெறும் உயர்தர கலாசாலையிற் சேர்ந்து இவர் ஆங்கிலப் பயிற்சி பெற்று வந்தார். அக்காலத்தில், அக்கலாசாலைத் தலைவராயிருந்த 'ஷுட்டி துரை' என்பார், தேவரின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வந்தார். தேவருடன் கலாசாலைத் தோழராக இருந்தவர்களிலே, பூச்சி - ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் ஒருவர்".[9]

### பாலவனத்தம் சமீன்தாராகப் பாண்டித்துரைத் தேவர்

பாண்டித்துரைத்தேவர் தமது பதினெட்டாவது வயதில் 1884 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ஆம் நாள் பாலவனத்தம் சமீன்தாராகப் பொறுப்பேற்றார். இராமநாதபுர எல்லைக்குள் இருந்த பாலவனத்தம் என்ற சமீனும் வேறு பல கிராமங்களும் நிலங்களும் இவருக்கு உரிமையாயின. அதுவரை இப்பொறுப்பு முழுவதையும் ஏஜண்டு சேஷாத்திரி ஐயங்கார் கவனித்து வந்தார். "தாம் பல்லாண்டுகளாகக் கவலையுடன் வகித்து வந்த நிர்வாகப் பொறுப்பை உரியவரிடம் சேர்ப்பித்த போது ஏஜண்டு ஐயங்கார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. தம்

பெருஞ் செல்வங்களையும், குடும்பத்தையும் பிறரை நம்பாமல் ஏழைப் பிராமணரான தம்மையே முற்றும் நம்பிப் பொன்னுசாமித் தேவரவர்கள் ஆதியில் ஒப்படைத்த முறைப்படியே, அவற்றை நன்கு பரிபாலித்தும், முடிவில் உரியவர்களிடம் சேர்ப்பித்தும் தம் கடமையைப் பூர்த்தி செய்து கொண்ட சேஷாத்திரி ஐயங்காரின் உண்மை, உறுதி முதலிய குணங்களை நாடு முழுவதும் போற்றியது."[10] பாண்டித்துரைத்தேவர் இந்த சமீன் பொறுப்பைக் கவனித்துக் கொண்டே தொடர்ந்து கல்வி, கலைப் பயிற்சியில் ஈடுபட்டார். அக்காலத்தில் 'ஆஸ்தான வித்வான்' என்ற சிறப்புப் பெற்ற சதாவதானம் முத்துசாமி ஐயங்காரிடம் பாண்டித்துரையார் கம்பராமாயணத்திற்கெனத் தனிப்பயிற்சி பெற்றார். சைவநூல்களில் தேர்ச்சி பெற்ற மதுரைவாசி இராமசாமிப் பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளை, திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த திரு. பழனிக்குமாரத் தம்பிரான் ஆகியோரிடம் சைவ தத்துவத்தைக் கற்று சமயக் கொள்கைகளை, அறிந்ததுடன் வாழ்விலும் கடைபிடித்து வந்தார். கவியறிவும், இசையறிவும் கொண்ட பாண்டித்துரைத் தேவர் தமது தந்தையாரைப் போலவே எப்பொழுதும் புலவர் பெருமக்கள் புடைசூழ இருந்துவந்தார். "கற்பாரும் கற்பிப்பாரும் இன்றி, அதன் வளர்ச்சியும் வாழ்வும் பற்றிக் கருதாரும், புறக்கணிப்பாரும் மல்கித் தமிழ், தன் உயிர்க்குப் போராடிக் கொண்டிருந்த நாளிலே, 'வெம்பாலையிடைப்பட்ட தண் சோலை' போல முகவை பெரிதும் போற்றிப் பேணிக் காத்து வந்தது.

"மூவேந்தரு மற்றுச் சங்கமும் போய்ப்பதின்
மூன்றோடெட்டுக்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன்
கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப்
பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத
செயதுங்கனே"

என்னும் தனிப்பாடல் சேதுபதிகளின் பணியைச் செவ்விதில் தெரிவிக்கும்.[11]

## பாஸ்கர சேதுபதியும் பாண்டித்துரைத் தேவரும்

இசைவாணர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும், ஆதரித்து, அவர்களுடைய திறமைகளைப் போற்றிப் பரிசளித்து மகிழ்ந்தவர் பாஸ்கரசேதுபதி. இராமநாதபுர மாவட்டத்தில் பாண்டித்துரைத் தேவரும்,

பாஸ்கர சேதுபதியும் ஆற்றியுள்ள பணிகளைப் பல புலவர் பெருமக்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். சிகாகோ நகரில் நடந்த உலகசமயப் பேரவைக்கு வீரத்துறவி விவேகானந்தரை அனுப்பி அவருடைய உயரிய அறிவாற்றலை உலகோர் அறியும்படி செய்த பெருமை பாஸ்கர சேதுபதியைச் சார்ந்தது என்பது தமிழகத்தில் மிகப் பலருக்கு தெரியாது. பாஸ்கர சேதுபதியைப் பற்றிய மு. இராகவையங்காரின் குறிப்பு பாஸ்கர சேதுபதியும் பாண்டித்துரையாரும் எவ்வாறு இணைந்து தமிழ்த் தொண்டு புரிந்துள்ளனர் என்பதற்கு இது ஒரு சான்று.

"பாண்டித்துரைத் தேவரவர்களின் சிறிய தந்தை திருமகனாராய் பட்டம் பெற்ற சேதுபதியவர்கள், இக்காலத்தில் அடைந்து வந்த சீரும் சிறப்பும் குறிப்பிடத்தக்கவை. பல துறைகளில் வல்ல கலைவாணர்களின் இதயக் கமலங்களை மலர்விக்கும் பாஸ்கரோதயம் போல இவர் தோற்றம் அமைந்தது. பாவாணரும் இசைவாணரும் பல திசைகளிலிருந்தும் சேதுவேந்தர் சமூகத்தை நாடி வந்து, தத்தம் திறமைகளைக் காட்டிப் பரிசுகள் பெற்றுச் செல்வாராயினர். இவரது வள்ளன்மையைச் சிறப்பித்தற்கு வலக்கை போன்று உதவியவர் நம் தேவரேயாவர். கலைவாணர்கள் சேதுமன்னரைக் காண்பதற்கு முன்பு, நம் தேவரின் சமூகத்தையடைந்து தத்தம் திறமையைக் காட்டிச் சிறப்புப் பெறுவதும், பின்பு சேதுபதியவர்கள் அவையை அடைந்து, அவர் மதிப்புக்கும் உரியவராகி வரிசைகள் பெறுவதும் வழக்கமாயிருந்தன. ஆகவே, தமிழ் வள்ளல்களான இவ்விருவரது இரட்டைப் பரிசுகளையும் ஏற்று மகிழ்ந்து செல்வர், கலைஞர்கள். நவராத்திரி போன்ற பெருந்திருவிழாக் காலங்களில், புலவர் குழாங்களையும் இசை முதலிய கலைவாணர் கூட்டங்களையும் ஒருங்கே காணும் காட்சிக் களங்களாக இவ்விருவர் சமூகங்களும் திகழ்ந்தன"[12] என்று குறிப்பிட்டுள்ளார் மு. இராகவையங்கார்.

தாயில்லாச் சேய்போல தமிழ்மொழி ஆதரிப்பாரின்றிக் கிடந்த காலத்தில் இவ்விருவரும் செய்த அருந்தமிழ்ப் பணியால் தமிழ் மக்களும், மற்றவர்களும் இவர்கள் மீது பேரன்பு கொண்டனர்.

## பாண்டித்துரைப் பெயர் படைத்த கோமான்

எடுப்பான தோற்றம், மிடுக்கான மீசை, காதிலே கடுக்கன், நெற்றியிலே திருநீறு, அதன் நடுவே சந்தனப் பொட்டு, தலையில் சரிகைக் குல்லாய், நீண்ட அங்கி, நிறைந்த உள்ளம், குன்றாத வள்ளல் தன்மை, அழியாத, அழிக்கமுடியாத தமிழ்ப் பற்று, எவரையும் அணைத்துப் போற்றும் உளப்பாங்கு, அஞ்சாத நெஞ்சத்தவர் - இவரே பாண்டித்துரையார்.

பாண்டித்துரையாரின் எடுப்பான தோற்றம் பலரையும் கவர்ந்தது.

“பாண்டித் துரையெனப் பகர்தரு நாமம்
பூண்டபே ரறிஞன் பொருவிலாச் செல்வன்;
ஈண்டிய புகழோன் ஏழை பங்காளன்;
ஆண்டகைக் குரிசில் அளப்பருங் குணத்தோன்;
ஆங்கில மொழியையும் அழகுறு தமிழையும்
ஓங்கிய புலமைநன் குற்றவ ரிடத்தில்
முறையுடன் பயின்ற முதுபெரும் புலவன்
நிறைகுடம் புரையும் நீர்மையன் கூர்மையன்
கேட்டவர்ப் பிணித்துக் கேளாதவரும்
வேட்ப மொழிதிறன் மிகமிகப் படைத்தோன்”[13]

என்ற பாடல்வரிகள் பாண்டித்துரையாரின் பண்பைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. தாம்வேறு, தமிழ்வேறு என்று நினைக்கவில்லை பாண்டித்துரையார். தமிழின்றி தாம் இல்லை என நினைந்து, தமிழ்த் தொண்டாற்றுவதே தனது வாழ்நாளின் கடமை எனச் செயல்பட்டதால்தான், “தமிழ் வள்ளல் பாண்டித்துரைத்தேவர்” எனப் பாராட்டப்பெற்றார்!

* * *

## குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள், (பன்மணித்திரள்) (தொகு), அ. திருவாசகன், சுரதா கல்லாடன், அருள்சுடர் பதிப்பகம், சென்னை, செப். 1993, ப.1551

2. க. சுவாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்து, (பதி), ஆறுமுக நாவலர், இரத்தாக்ஷி வருடம், நான்காம் பதிப்பு, பாயிரம் 7 : 27 - 28.

3. நாவலர் பாரதியார், ச. சாம்பசிவன், இரா. இளங்குமரன் கழகம், சென்னை, 1960, ப. 31.

4. தமிழர் வாழ்வு, மா. இராசமாணிக்கம், சாந்தி நூலகம், சென்னை, 1961, ப. 69.

5. தமிழ் இலக்கிய வரலாறு, மு. வரதராசன், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, முப. 1978, ப. 9-10.

6. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், இரா. இளங்குமரன், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை, பதி 1987, ப. 28 - 29.

7. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், (பதி), டி.ஜி. கோபால்பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி, சூன் 1951, ப. 3.

8. மேற்படி, ப. 66.

9. மேற்படி, ப. 68

10. மேற்படி, ப. 69.

11. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், இரா. இளங்குமரன், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, பதி. 1987, ப .32-33

12. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், ப. 71-72.

13. செந்தமிழ், பாண்டியத்துரைத் தேவரவர்கள் நூற்றாண்டு விழா மலர், (கவி) அ. முத்துசாமி பிள்ளை, மார்ச் 1967, ப.16.

## 2. சோமசுந்தர விலாசம்

சைவப்பற்றுக் கொண்ட பாண்டித்துரைத்தேவர் தினமும் காலையில் நீராடிச் சிவபூசையை முடித்தபின்பே பிற பணிகளைத் தொடங்குவாராம். வழிபாட்டிற்கென இவருடைய மாளிகையில் தனி பூசை மண்டபம் ஒன்று உண்டு. இந்த வழிபாட்டின்பொழுது "பூச்சி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தலைமையின் கீழ்க் காத்திருக்கும் சங்கீத கோஷ்டி - தேவாரம், திருவாசகம் கீர்த்தனைகள் முதலிய தோத்திரப் பாடல்களைப் பக்க வாத்தியங்களுடன் தொடர்ந்து பாடும். அவ்வமுத கீதம் கேட்போருள்ளங்களையெல்லாம் கவர்வதாயிருக்கும். பூஜை முடிவில் **"தலையே நீ வணங்காய்"** என்ற தேவாரப் பதிகத்தைப் பாடிவரும்போது யாவரும் பரமானந்தத்தில் மூழ்கிக் களிப்பர். பூஜை முடிந்த சிறிது நேரத்துக்கெல்லாம், புலவர் குழாம் தேவரவர்களைச் சூழ்ந்து நிற்பதைக் காணலாம். வேறு இலௌகீக காரியங்கள் இல்லையாயின், தமிழ்க் கல்வித்துறையில் மூழ்கித் திளைப்பதே இவரது நித்திய ஒழுக்கமாயிருந்தது. கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற உத்தம காவியங்களில் தேவர்க்கிருந்த ஈடுபாடு அளவற்றது. அவற்றிலுள்ள அரிய பாடல்களுக்கு விரிவுரையும் விசேட நயங்களும் அவர் விளங்க உரைக்கும் அழகு வியக்கத்தக்கதாயிருக்கும்".[1] பாண்டித்துரைத்தேவர் இவ்வாறு சிவநெறிப் பற்றாளராய், இலக்கிய ஆர்வலராய் இருந்ததால் தம் செயல்பாடுகளில் தன் ஈடுபாட்டை வெளிப்படுத்திக் காட்டினார். மதுரை மாநகரில் உள்ள சோமசுந்தரக் கடவுளிடத்தில் மிகுந்த பக்தியுடையவராதலால், இராமநாதபுரத்தில் தமக்கெனத் தாம் புதிதாகக் கட்டிய பெரியமாளிகைக்குச் "சோமசுந்தர விலாசம்" என்னும் பெயரைச் சூட்டினார். இன்றும் இப்பெயரை அம்மாளிகையின் முகப்பில் காணலாம். மதுரைத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கும் முதல் கூட்டம் இந்த மாளிகையில் தான் கூட்டப்பட்டது. "மதுரை சோமசுந்தரக் கடவுளின் பேர் பெற்ற மாளிகையிலே புலவர்கள் கூடிய கூடலில், உக்கிரபாண்டியன் என்ற அரசர் தமிழ்வளர்ச்சி புரிந்து வருகிறார். அச்சங்கத்தே இச் சாதக சந்திரிகை அரங்கேறியது"[2] என்று சிலேடை நயம் பெற 'சாதக சந்திரிகை' என்ற நாராயண ஐயங்காரின் நூலுக்குப் பாடிய பாயிரக்கவியில் மு. இராகவையங்கார் சுட்டிக் காட்டியுள்ளார். 1897 ஆம் ஆண்டு பாண்டித்துரையாரின் அவையில் அரங்கேறிய இந்நூல் அச்சிட்ட சில ஆண்டுகளிலேயே வரலாற்றுப் புகழ்மிக்க நிகழ்ச்சியான நான்காவது

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றம் இம்மாளிகையில் அரங்கேறியது. பெரும்பொருட்செலவில் கட்டப்பட்ட இந்த மாளிகையின் கம்பீரத் தோற்றம், இராமநாதபுரத்துக்கே ஒரு புதிய மெருகூட்டியது..

### அவைப்புலவர்களுடன் பாண்டித்துரையார்

சிறந்த தமிழ்ப் புலவர்களுடன் விவாதிப்பதும், உரையாடி மகிழ்வதும், அவர்களை ஆதரிப்பதும், அவர்களுக்கு வேண்டியன செய்வதும், அவர்களுக்கு உறுதுணையாக இருப்பதும் பெருங்கடமையாகச் செய்துவந்தார் பாண்டித்துரையார். நாராயண அய்யங்கார், எட்டயபுரம் (வீரா) சாமி அய்யங்கார், சுந்தரேசுவர அய்யங்கார், அரங்கசாமி அய்யங்கார்,. சிவகாமியாண்டார், மு. இராகவ அய்யங்கார் ஆகியோரே பாண்டித்துரை யாரோடு நெருங்கிப் பழகி வந்த புலவர்களாவர். இதில் **"அரங்கசாமி ஐய்யங்கார்"** என்ற புலவர் இளமைக்காலம் தொட்டு உடன் பழகிவந்தவர். கவித்திறன் மிக்கவர்; நினைவாற்றல் உடையவர்; கட்புலன் குறைபாடுடையவர் இவர். ஆயினும் உட்புலன் இவர்பால் நிரம்பியிருந்தது.[3] பாண்டித்துரையாரின் தமிழ்க்கல்வித் துறையில் உற்ற தோழர் இவரே என்று அறிஞர்கள் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். சிவகாமியாண்டார், சுந்தரேசுவர அய்யர் ஆகியோர் பாண்டித்துரையார் விரும்பும் நூல்களைப் படித்துக் காட்டுவர். நாராயண அய்யங்காரும், எட்டயபுரம் சாமி அய்யங்காரும் தமிழ்ப் புலமையோடு வடமொழியிலும் தேர்ச்சி பெற்றவர்கள். பாண்டித்துரையாரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள்.

### மு. இராகவையங்காரும் பாண்டித்துரைத்தேவரும்

பல புலவர்கள் பாண்டித்துரையாரின் அன்பையும், ஆதரவையும் பெற்று வந்தவர்கள்; பலரும் அவரைப் பற்றிக் கவி பாடியுள்ளனர். மு இராகவையங்கார் 'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்' என்ற நூலில் 'பாண்டித்துரைத் தேவர்' என்ற தலைப்பில் சுமார் 40 பக்கங்களில் எழுதியுள்ள செய்தி, பல உண்மைகளை அறிய வாய்ப்பாக அமைந்ததாகும். பாண்டித்துரையார், மு. இராகவையங்கார் மீது வைத்திருந்த அன்பை இந்நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"என் இளமை முதல் இருபது வருஷகாலம் நானும் தேவரவர்களுடன் இருந்து பழகி ஆதரவு பெற்றவனே. தம் ஆசான் மகன் என்ற அபிமானம் தேவரவர்கட்கு என்பால் மிகுதியும் உண்டு. எனது தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தவர் இப்பிரபுவே. திருக்குறள் பரிமேலழகருரையுடன், ஒவ்வொருநாளும் ஒவ்வோரதிகாரமாக

இவர்களால் உபந்நியாசம் செய்யப்பட்டு வந்தது. தொடர்ந்து நடந்துவந்த இவ்வரிய பொருளுரை, கேட்பவர்க்கெல்லாம் நல்விருந்தாயிருந்தது. இவைகளை விடாது உடனிருந்து கேட்டவர்களுள் யானும் ஒருவன். இவ்வாறே கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற பேரிலக்கியங்களில் ஒன்றேனும், கந்தபுராணம், காஞ்சிப்புராணம், திருவிளையாடல் போன்ற புராணங்களில் ஒன்றேனும், வேறு சில்லரைப் பிரபந்தமேனும் படிக்கப் பெற்றும், பொருள் ஆராயப்பெற்றும் நாளும் தவறாது தேவரவர்களின் திருமுன்பு நடந்தேறுவது வழக்கம். இஃதன்றி ஈற்றெழுத்துக் கவிகள் கூறுவதும், தம்பாலுள்ள புலவருள் ஒருவரைக் கொண்டு பிரசங்கம் புரிவிப்பதும், பாடற் பொருள் கூறச் செய்வதும், தேவரவையில் அடிக்கடி நடைபெற்று வந்தன. இவை யாவும் பாடமான கவிகள் மறவாதிருத்தற்கும், புலமைப் பெறுவதற்கும் முன்னோர் கையாண்ட முறைகளே. இதுபோலும் அறிவு வளர்ச்சித் துறைகளில் உடனிருந்து திளைத்தவருள் யானும் சார்ந்தவன். உடனுறைந்து வந்த பழக்கத்தால் தேவரவர்களின் பணியாளர் சிலருங் கூடத் தமிழறிவு பெற்றவராயினர்"[4] என்று குறிப்பிட்டுள்ளார். புலவர் பெருமக்களுடன் பாண்டித்துரையார் எவ்வாறு உடனுறைந்து செயல்பட்டார் என்பதை இவ்வனுபவம் எடுத்துக் காட்டுகிறது.

### செந்தமிழ் இதழில் மு. இராகவையங்கார்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான செந்தமிழ் இதழில் முதற் பத்திராசியராக விளங்கிய மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களுடன் உதவிப் பத்திராதிபராக மு. இராகவையங்கார் பாண்டித்துரையாரால் நியமிக்கப் பெற்றார். இவ்விதழின் தலைமையை இரண்டரை ஆண்டு வகித்து வந்த ரா. இராகவையங்கார் உடல் நலமின்மையால் அதனை விட்டு விலக நேர்ந்துவிட்டது. அதற்குப் பின் அவ்விதழின் பத்திராசிரியர் பதவியை வகிக்கும்படி பாண்டித்துரைத் தேவர் கூறியதால் அப்பொறுப்பினை மு. இராகவையங்கார் ஏற்று நடத்தி வந்தார். இவ்வனுபவத்தைப் பற்றி இவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஆண்டில் இளையவனாயிருந்த யான் அன்பு கனிந்த தேவரவர்கள் ஆணையை ஏற்றுப் பத்திரிக்கையைப் பல்லாண்டு வரை நடத்தி வந்ததற்கு, அவர்கள் அளித்து வந்த ஊக்கமும் ஆதரவுமே எனக்குப் பெருந் துணையாக உதவின. பத்து வருஷங்களுக்கு மேலாக அப்பத்திரிக்கைத் தொழிலில் அமர்ந்து யான் செய்த தமிழ்த் தொண்டே, என் பின்னிலையைச் சிறப்பிப்பதற்கும் மூலக்காரணமாயிற்று. இவ்வாறு ஆதியில் எம் இருவரையும் கொண்டு தேவரவர்கள் தொடங்கி நடத்தி

வந்த செந்தமிழ்ப் பத்திரிக்கை, 45 வருடங்கட்கு மேலாக ஆராய்ச்சித் துறையை வளர்த்துத் தமிழ் வளர்ச்சிப் புரிந்துவருதல், தமிழ்நாடு முழுவதும் நன்கு அறிந்ததே".[5] மு. இராகவையங்கார் செந்தமிழ் இதழின் பத்திராசிரியராக இருந்து வந்ததுடன், அரிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வந்தார். இவை யாவும் தமிழக வரலாற்றுக்கு உறுதுணையாக விளங்கினவாகும்.

## இசைக்கலை வளர்ச்சிப்பணியில் பாண்டித்துரையார்

இசைக்கலையில் தேர்ச்சி பெற்ற புலவர் பெருமக்களை ஆதரித்து வளர்ப்பதும் தமது தமிழ்ப்பணியெனக் கருதியவர் பாண்டித்துரைத்தேவர். பூச்சி-ஸ்ரீநிவாச அய்யங்கார், மகா வைத்தியநாத அய்யர், பட்டணம் - சுப்பிரமணிய அய்யர், திருக்கோடிக்கா கிருஷ்ணையர், தஞ்சை நாராயண சாமியப்பா போன்றோர் பாண்டித்துரையார் ஆதரித்த இசைவாணர்களாவர். "தேவரின் பேரவையானது பண்டை நாளிற் பாண்டியர் வளர்த்த இயலிசைச் சங்கங்களின் பிரதிசாயை போலத் திகழலாயிற்று."[6] இளம் பருவம் முதல் பாண்டித்துரையாருடன் இவர் பள்ளித் தோழராக உடனிருந்து வந்தவர். ஸ்ரீநிவாச ஐயங்காரின் இசையறிவும், குரல் இனிமையும், இசை ஈடுபாடும் பாண்டித்துரையாரைப் பெரிதும் கவர்ந்தன. அவருடைய இசையறிவை வளர்க்க பட்டணம் - சுப்பிரமணிய அய்யரவர்களிடம் பயிற்சிபெற ஏற்பாடு செய்தார். "இவரது இசைத் தேர்ச்சியில் பாண்டித்துரைத் தேவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஒரு நல்ல நாளிலே, பிரபுக்களும் கலைஞர்களும் நிறைந்த பெருங்குழாத்தின் முன், ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் சங்கீத அரங்கேற்றம் நடைபெற்றது. அவர் பாட்டு தேவகானம் போலிருந்தது. யாவரும் வியப்பும் உவப்பும் அடைந்தார்கள். அப்பெரிய அரங்கேற்ற விழாவின் இறுதியிலே, தேவரவர்கள் அவருக்கு வயிரக் கடுக்கன்களும் சால்வைகளும் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார். பின்பு, ஸ்ரீபாஸ்கர சேதுபதி அரசராக விளங்கிய ஸ்ரீநிவாஸ அய்யங்கார் சேதுசமஸ்தான சங்கீத வித்வானாக அமரும்படி செய்வித்தனர் தேவரவர்கள்."[7]

இவ்வாறு ஒவ்வொருவரின் திறமையையும் கண்டறிந்து அவர்களைத் தக்க முறையில் பாராட்டி வந்தார். "பாண்டித்துரைத் தேவரவர்கள் தலைவராக விளங்க வடமொழி, தென்மொழிப் புலவர்களும் இசைவாணர்களும் குழுமி நடைபெறும் பேரவை, பூலோக தேவ சபை போலவே காட்சியளித்து வந்தது. அரிய பெரிய சொற்பொருள் ஆராய்ச்சிகளும், கருத்து வாதங்களும், இசைப் போட்டிகளும்,

பரதநாட்டியங்களும் பிற கலைத்திறங்களும் அரசவையில் நிகழ்ந்து, காண்பவர் கேட்பவர்கள் தம் பசி தாகங்களையும் மறந்து அனுபவிக்கும்படி செய்துவந்தன. இவை யாவும் சிறப்படைந்ததற்கு நம் தேவரவர்களின் தலைமையும் கூட்டுறவும் பெரும் துணையாயிருந்தன."[8] பழமரத்தை நாடி வரும் பறவையினங்கள் போல் தம்மை நாடி வந்த புலவர் பெருமக்களை ஆதரித்த பாங்கு அனைவரையும் கவர்ந்தது.

## பாண்டித்துரையார் நடத்திய இசைவிழா

கவிபாடும் ஆற்றல்மிக்க பாண்டித்துரையார் இசைத் தமிழில் பெரிதும் ஈடுபாடு கொண்டு 1888 ஆம் ஆண்டு தம்முடைய இருபத்திரண்டாம் வயதிலேயே இசைவிழா ஒன்றை நடத்தியுள்ளார். இசைப் புலவர்களையெல்லாம் அழைத்து ஒன்றுசேர்த்து ஓரிசை விழாவாக நடத்தியுள்ளார்.. இதுவே தமிழகத்தில் முதன்முதல் கூட்டப்பெற்ற இசையவையாக குறிப்பிடப்படுகிறது. ஏழுநாட்கள் நடந்த இவ்விசை விழாவில் ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் இசைப் புலவரின் நிகழ்ச்சி நடைபெறும் வகையில் ஏற்பாடுகள் நடந்தேறியுள்ளன.

இதில் குன்னக்குடி கிருஷ்ணையர், பட்டினம் சுப்பிரமணிய ஐயர், நெய்க்காரப்பட்டி பல்லவி கேசய்யர், மகாவைத்தியநாத சிவன், வீணை வைத்தியநாதய்யர், சரபசாஸ்திரி ஆகியோர் இந்த இசைவிழாவில் பங்கேற்றுள்ளனர். இதில் வீணைக் கச்சேரி, புல்லாங்குழல் கச்சேரி, நாதசுரக் கச்சேரிகளும் இடம் பெற்றுள்ளன. பிராமண இசைக் கலைஞர்களே அக்காலத்தில் முன்னணியில் இருநதுள்ளனர் என்பதையும் இந்நிகழ்ச்சியால் அறிந்து கொள்ள முடியும்.

பாண்டித்துரையார் இந்த இசைக்கலைஞர்களுக்கு மிக உயர்ந்த பரிசும், பாராட்டும் அளித்து சிறப்பித்துள்ளார். இவ்விசை விழா போல் அதுவரை எவரும் நடத்தியது இல்லை என்ற சிறப்பைப் பெறும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்தது என அறிஞர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

பாண்டித்துரையார் பொழுதுபோக்கும் வேளைகள் கூட தமிழ்ப் புலவர்களுக்கு உதவி செய்யும் வகையில் இருந்து வந்துள்ளது. பண்டிதர்கள் அவரை வந்து சந்திக்கும்பொழுது அவரவர்களுக்குத் தெரிந்த பழம்பாடல் அல்லது புதிய பாடல்களை அந்தாதியாக முறையாகச் சொல்லும்படி செய்து சிறப்பாக அப்பாடல்களைச் சொல்லி வருபவர்களுக்குப் பரிசு வழங்குவார். இவருடைய இந்தச் செயல் பல

தமிழ்ப் பண்டிதர்களுக்கு உற்சாகமளிப்பதாக அமைந்தது. "இவர் வேடிக்கையாகப் பொழுது போக்கும் வேளைகளிலுங்கூட வித்துவான்களுடனிருந்தே விநோதங்களுள்ள சாதுரிய கவிகளைச் சொல்லி வருவார். ஒருநாள் ஒரு பாடகர் இவரிடம் வந்து ஓசிப்பொடி கேட்டு நின்றளவில் இவர் வேடிக்கையாய் ஒரு பாட்டுப்பாடி விடையளித்தார். அது,

ஓசிப் பொடியென் றொருநா ளுனக்களித்தால்
நீசற்றும் அச்சமின்றி நித்தநித்தம் - யாசித்
தடிக்கடிசும் மாவந் தலட்டுகிறாய் சீச்சி
பொடிக்கொடுப்ப தில்லையினிப் போ.

என்பது அப்பாடலாகும்."[9] பாண்டித்துரையார் தமிழ்ப்புலவர்களுடன் மிக நெருக்கமான அன்பு கொண்டவராக, உரிமை கொள்பவராக, விரைந்து கவிபாடும் ஆற்றல் மிக்கவராக இருந்தார் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சிறு சான்றாகும்.

சங்க காலத்தில் புலவர்களை மதித்துப் போற்றிய புரவலர்களோடு, மன்னர்களோடு ஒப்பு நோக்கிப் பார்க்கும் பெருமைக்குரியவர் பாண்டித்துரையார் அவருடைய அவைப்புலவரான திரு. நாராயணய்யங்கார் பாண்டித்துரையாரைக் காண அவரது மாளிகைக்குச் சென்றார். அப்போது அவர் மாளிகையில் இல்லை. அயர்வு மிகுதியால் அங்கு இருந்த இருக்கையில் அமர்ந்து உறங்கிவிட்டார். சிறிது நேரத்தில் அங்கு வந்த பாண்டித்துரையார் அவரை உடனே எழுப்பாமல், அந்த இருக்கையின் அருகே அமர்ந்து விசிறியால் வீசலானார். இந்நிகழ்வு சங்கக்காலத்தில் பெருஞ்சேரலிரும்பொறை என்ற மன்னன் தன் அரண்மனை முரசுக் கட்டிலில் அறியாது உறங்கிய மோசிகீரனார் என்ற தமிழ்ப் புலவருக்குக் கவரி வீசிய நிகழ்ச்சியை நினைவூட்டுவதாகும். திரு. நாராயணய்யங்கார் கண்விழித்தபோது பாண்டித்துரையார் விசிறிக் கொண்டு இருப்பதைக் கண்டு இது கனவோ அல்லது நனவோ என்று எண்ணி "செந்தமிழ் காக்கும் கரங்களல்லவோ இவை" எனப் புகழ்ந்தார். பாண்டித்துரையார் தமிழ்ப்புலவர்களிடத்து தணியா அன்பு கொண்டிருந்தார் என்பது இதன் மூலம் விளங்கும்.

* * *

## குறிப்புகள்

1. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், (பதி) டி.ஜி. கோபால் பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி, ஜூன் 1951, ப. 75-76

2. மேற்படி, ப. 75

3. மேற்படி, ப. 78

4. 'ஈற்றெழுத்துக் கவி கூறுதலாவது; அந்தாதித் தொடர் போல, பழம்பாடல் ஒன்றின் கடையெழுத்தையோ அதன் கடைச்சீர்கள் முதலெழுத்தையோ முதலாகக் கொண்டு, அவ்வவர் முறைப்படி தொடர்ந்து முன்னோர் பாடலைக் கூறிவருவதாகும்'
- செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், ப. 76-77

5. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், ப. 77

6. மேற்படி, ப. 80.

7. மேற்படி, ப. 73-74

8. மேற்படி, ப. 74-75

9. சங்கம் வளர்த்த தேவர், பதி. எம். முத்துசாமி, பாண்டித்துரைத்தேவரின் 125வது பிறந்தநாள் விழா வெளியீடு, முருகாலயம், சென்னை 33. ப.92.

## 3. வீரர்க்குள் வீரனிவன்

பாண்டித்துரையாரின் அன்பிற்குரிய பல புலவர்களில் அரசன் சண்முகனார் குறிப்பிடத்தக்கவர். இவருடைய கவிச்சுவையில் மூழ்கிய பாண்டித்துரைத்தேவர் தாம் இறந்துவிட்டதாக நினைத்து ஒரு கவிபாடக் கோரினாராம். பாண்டித்துரைத் தேவர் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க 'வீரர்க்குள் வீரனிவன்' என்ற பொருளில் கவி பாடியுள்ளார்.

"தமிழ்வளர்ப் பதற்கே நான்காம் சங்கமும்
கண்ட தன்றி
அமிழ்தெனக் கற்றுத் தேற அரிய செந்
தமிழ்க் கல்லூரி
அமிழ்ந்த நூல் ஆராய்ச் கிக்காம் அழகுநூல்
நிலைய மற்றும்
கமழ்ந்திடக் கண்ட போது கன்னித்தாய்
மகிழ்ந்து போனாள்

நற்றமிழ் கற்றுத் தேர்ந்த நாவலர்
பலருங் கூடிச்
சொற்றமிழ் ஆய்ந்து தீட்ட தூய செந்
தமிழென் றப்பேர்
உற்றவோர்த் திங்கள் ஏட்டை உலவிட
விட்ட போது
கற்றபாண் டித்து ரையே கதியெனத்
தமிழர் கொண்டார்

உடல்பொருளா வியெல்லாமித் தமிழுக்காக
உரியதாக்கி உயர்ந்த தேவன்
கடல் போன்ற பொருளுதவி; வெள்ளையரைக்
கப்பலோட்டி எதிர்த்து நின்ற
அடலேறு வ.உ.சி. அவர்களுக்கே
அளித்த தீரன்; இவனே நாட்டு
விடுதலைக்கு முன்னின்ற வீரர்க்குள்
வீரனிவன் மேன்மை வாழ்க"[1]

என்ற பாடல் வரிகள் பாண்டித்துரையாரின் தமிழின உணர்வை விளக்கிக் காட்டுகின்றன. பாண்டித்துரையாரைப் பற்றி பல பெரும் புலவர்கள் பாராட்டிக் கவிதை வழங்கியிருந்தாலும் அரசன் சண்முகனாரின் இக்கவிதை பாண்டித்துரையாரே விரும்பிக் கேட்ட கவியாகும். புலவர் வை. வேணுகோபாலன் 'ஆசிரியன் பெருமகனார் அன்று உரைத்தவை' என்ற (செந்தமிழ்) கட்டுரையில் இந்நிகழ்வைக் குறிப்பிட்டுச் காட்டியுள்ளார்.

**ஸ்காட்துரையும் பாண்டித்துரையும்**

செந்தமிழ்ப் பற்றாளரான பாண்டித்துரையார் தமிழ்ச் சொற்கள், பாடல்கள், பொருள் ஆகியனவற்றைச் சரியான முறையில் மக்கள் கையாள வேண்டும் என்ற கருத்துடையவர். பிழை மலிந்த நூற் பதிப்புக்களைக் கண்டால் அவற்றைத் தொடவும் கூசுவார் என்ற செய்தி, மொழிப் பயன்பாட்டில் இவர் எவ்வளவு கண்டிப்பானவர் என்பதைக் காட்டுகிறது. அவர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தக்கூடியதே!

"மதுரையில் ஸ்காட்துரை என்ற ஆங்கிலோ இந்தியர் ஒருவர் வக்கீலாக இருந்தார். இவர் தமிழ்மொழியில் அரைகுறையான பயிற்சியுடையவர். நேர் வழியிலன்றி வக்கிர கதியிற் செல்வது இவரியல்பு. வள்ளுவரது திருக்குறட் பாடல்களில் எதுகை மோனை இல்லாத இடங்களையெல்லாம் திருத்திப் புதியதான குறட் புத்தகமொன்றை இவர் நல்ல தாளில் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். "சுகாத்தியரால் திருத்தியும் புதுக்கியும் பதிப்பிக்கப்பட்ட குறள்", என்றவாறு அப்புத்தகத்தின் தலைப்பு அமைந்திருந்தது. மதுரையில் தேவரவர்களை அவர் ஒருகால் சந்தித்தபோது, தாம் செய்த அவ்வரிய வேலையைத் தெரிவித்து, அதன் பிரதியொன்றையும் தேவர்க்கு அளித்தனர். அதைப் பெற்ற தேவர், அதன் முதற் பக்கத்தைத் திறந்ததும்,

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
உகர முதற்றே உலகு"

என்று அமைந்திருந்தது. இவ்வாறே பல குறட்பாக்களும் நெடுக திருத்தப்பட்டிருந்தன. இவற்றைக் கண்டதும் தேவரவர்கட்குக் கோபம் ஒரு பக்கம் பொங்கி எழுந்தது. ஆயினும் அதை அடக்கிய வண்ணமே, "தாங்கள் இதனில் எத்தனை பிரதிகள் அச்சிட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "ஐந்நூறு பிரதிகள் அச்சிட்டேன். இருநூறு பிரதிகள் வரை

வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டன. மற்றவை விலையாகவில்லை; நெடுநாளாக என்னிடமே உள்ளன" என்றார் துரை. "புத்தகப் பிரதியின் விலை என்ன?" என்று தேவர் கேட்டார். "ரூபா ஒன்று" என்று பதில் வந்தது. "தாங்கள் இனிச் சிரமப்பட வேண்டாம். நானே அவற்றை மொத்தமாக வாங்கிக் கொள்கிறேன். அவற்றை ஒரு சேர என்னிடம் அனுப்பிவிடுங்கள்" என்றார் தேவர். துரைக்கு அப்போது செலவு அதிகம் போலும். ரூபாய் முந்நூறு தமக்கு ஒரு சேரக் கிடைப்பதற்கு மகிழ்ந்து உடனே, துரை அவற்றைக் கட்டி இராமநாதபுரத்திற்கு அனுப்பிவிட்டார். தேவரவர்கள் தம்மூர் வந்ததும், ஸ்காட்துரையின் அறியாமையையும் செருக்கையும் பலருக்கும் எடுத்துக்கூறி, மதுரையிலிருந்து வந்த குறட்புத்தகக் கட்டைக் கொண்டுவரும்படிச் செய்தார். அதுவந்ததும் அவர் உத்தரவின்படி குழியொன்று பக்கத்தில் தோண்டப்பட்டது. அப்புத்தகப் பிரதிகள் முழுமையும் அதனுள் இடச்செய்து, தம் கண்முன் தீ வைத்துக் கொளுத்தும்படி உத்தரவிட்டார், தேவர். அவை யாவும் சில நிமிஷங்களில் சாம்பலாகிவிட்டன. "இப்பித்துக்கொள்ளியிடம் எஞ்சியிருந்த முந்நூறு பிரதிகளும் அறிஞர்கள்பாற் சென்று மனத்துன்பம் விளைக்காதிருப்பதற்கும், அறியாதார் திருக்குறளைத் தாறுமாறாகப் பாடமோதாமல் இருப்பதற்கும் இதுதான் தக்க பரிகாரம்" என்று யாவரும் அறியக் கூறி அகமகிழ்ந்தார் தேவர். ஸ்காட்துரை இச்செய்தியை அறியார். அவரும் சில காலத்தில் இறந்துவிட்டார். என்னே, தேவரின் தமிழ்ப்பற்று![2]

இதே நிகழ்ச்சியைப் பண்டிதர் அ. முத்துசாமிப்பிள்ளை 'பல கலை ஆயும் பண்புடைக் குரிசில்' என்ற கவிதையில்,

"வள்ளுவர் அருளிய மாண்புறு குறளைத்
திருத்திய வெள்ளையன் செய்கையை அறிந்து
வருத்தமுற் றதனை வாங்கித் தீக்கிரை
ஆக்கியவ் வெள்ளையற் (கு) அரும்பொருள் கொடுத்துப்
போக்கிய புண்ணியன் புவிபுகழ் கண்ணியன்"[3]

என்று குறிப்பிட்டுள்ளார். இப்படித் தமிழுக்கு வரும் கேடுகளை, தமிழின் அருமை பெருமைகளை விளங்காதோரைக் கண்டு வருந்தினார். எத்தனையோ தமிழ்ச் சுவடிகள் நமது பிறவி எதிரிகளின் சூழ்ச்சி காரணமாக நீராலும், நெருப்பாலும் அழிக்கப்பட்டுவிட்டதே என மனம் வருந்தினார் பாண்டித்துரையார்.

"கடைச் சங்கம் அழிந்தபின் தமிழ் என் னாகும்
கற்றறிந்த புலவர் தம் நிலையென் னாகும்
இடைப்பட்ட காலத்தில் தமிழ்வா டிற்றே
என்றெல்லாம் நிலையழிந்த நேரந்தன்னில்
படை கொண்ட பாண்டியர் தம் குலத்தில் வந்த
பாண்டித்துரை வேந்தே! இம் மண்ணு லகில்
தடையே தும் இல்லாமல் தமிழ்வா ழத்தான்
தலைநகரில் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்தாய்"[4]

என்ற கவிதை வரிகள் அக்காலச் சூழலைக் கணித்துக் காட்டுகிறது.

## சொற்பொழிவாளர் பாண்டித்துரையார்

பாண்டித்துரையார் பல பேரவைகளின் தலைவராக இருந்து தமிழின் ஆற்றலை எடுத்துக் கூறிவந்தார். தமிழகத்தில் அக்காலத்தில் பெரிய நகரங்களில் நடந்த தமிழறிஞர்கள் கூடும் கூட்டங்களில் பாண்டித்துரையார் சொற்பொழிவாற்றி வந்துள்ளார். "அரச இலக்கணம் நிரம்பிய இவரது வசீகரத்தோற்றமும், பொருள் நிரம்பிய சொல்வன்மையும், ஆங்கிலப் பேரறிஞர்களையும், புலவர் பெரு மக்களையும் பரவசப்படுத்தி வந்தன. கம்பராமாயணம் போன்ற பேரிலக்கிய நயங்களையோ, சமய நுண்பொருள்களையோ இவர்கள் தொகுத்து, வகுத்து எடுத்து மொழியும்போது, ஆனந்த அமுதகீதத்தில் ஆழ்வது போலவே யாவரும் அகங்களிப்பர். நாவன்மை வாய்ந்த புலவர்களும், இவரது வாக்கினிமையில் ஈடுபட்டு,

'ஆணிக்கனகம் மணந்தரிற் பூமண மார்கொள்ளுவார்
மாணிக்கம் தித்திக்கி னென்னாகும் மற்றை மதுரங்களே'

என்றவாறு பாராட்டுவர் எனின் வேறு புகழ்வதேன்."[5]

1910 ஆம் ஆண்டில் தஞ்சையில் நடந்த மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவிலும், திருநெல்வேலிப் பாளையங்கோட்டையில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாசபைக்குத் தலைமையேற்று நடத்திய விழாவிலும், பாண்டித்துரையார் ஆற்றிய சொற்பொழிவுகள் பல அறிஞர் பெருமக்களின் பாராட்டுகளைப் பெற்றவையாகும்.

* * *

## குறிப்புகள்

1. செந்தமிழ், தொகுதி 70, பகுதி 4, டிசம்பர் 1975, ப. 8.
2. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், பதி. டி.ஜி. கோபால் பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி, சூன் 1951, ப. 98-99.
3. செந்தமிழ், (கவி) பல்கலை ஆயும் பண்புடைக் குரிசில்; அ. முத்துசாமிப் பிள்ளை, தொகுதி 62, பகுதி 3, மதுரைத் தமிழ்ச் சங்கம். ப. 16
4. செந்தமிழ் (கவி) தமிழ்காத்த தக்கோய் வாழி, பெ. இளவரசு, தொகுதி 70, பகுதி -4, டிச. 1975. ப. 10.
5. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு இராகவையங்கார், ப. 95-96.

# 4. பாண்டித்துரையார் இயற்றிய நூல்கள்

'காவடிச்சிந்து' 'சிவஞான சுவாமிகள் தோத்திரம்' என்ற நூல்கள் பாண்டித்துரைத்தேவர் இயற்றிய நூல்களாகும். பல தனிச் செய்யுள்களும் பாடியுள்ளார்.

காவடிச்சிந்து என்றாலே முருகன்மீது சென்னி குளம் அண்ணாமலை ரெட்டியார் பாடிய சிந்து நினைவிற்கு வரும். இம்முறையைத் தோற்றுவித்தவரும் அவரே. பாண்டித்துரைக் காவடிச் சிந்து பாடுவதற்குரிய சூழ்நிலை அமைந்ததைக் குறித்து மதுரைத் தமிழ்ச்சங்க நூற்பரிசோதகர் மு.ரா. அருணாசலக் கவிராயர் இந்நூலின் முன்னுரையில் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

"ஒரு நாள் பாலவனத்தம் ஜமீன்தாரும், கேட்டார்பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் சொல்வன்மையாளரும், இலனென்னு மெவ்வ முரையாமையீயுங் குலநலமுடைய கோமானும், சிவநேசச் செல்வருமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் சமூகத்தில் வித்வான்கள் சிலர் கூடியிருக்குங்கால் இன்னிசையோடு பாடுமொரு நண்பர், சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்துக் கண்ணிகளிற் சிலவற்றைப் பாடச் சிந்தைகளி கொண்ட எம்மனோர் இந்தக் காலத்தில் எந்தத் தமிழ்ப் புலவராலும் இவ்வாறு சிந்து பாடவியலாது எனக்கூற, அதுகேட்ட பிரபு அவர்கள் 'அது பொருந்தாது; திருவருளுளதேல் அதனினும் சிறக்கப்பாடுதல் கூடாததன்று' என்று கூறிவிட்டுச் சின்னாளில் முகவை சென்று திரும்பி வந்திருந்தபோது தாங்கள் பாடிக்கொணர்ந்த காவடிச் சிந்து சந்தங்கள் சிலவற்றை அவர்கள் இன்னிசையுடன் படித்துக் காட்டினார்கள். அவற்றை யாங்கள் கேட்டபோது, ஒவ்வொரு கண்ணியும் சந்தச்சுவையுடன் எந்தச் சுவையுடனும் முந்தத்தக்கதாக சொன்னயமும், பொருணயமும் அகப்பொருட்டுறை வழாமையும் அமையக் கேட்போருள்ளத்தைப் பெரிதும் பிணித்து நிற்றல் கண்டு வியப்புமுவப்புமடைந்து பிரபு அவர்களை அக்காவடிச்சிந்தை முற்றுவித்துத்தரல் வேண்டுமென்று என்னண்பர்களுடன் யானே முன்னின்று கேட்டுக் கொண்டேன்"[1] என பாண்டித்துரைத்தேவரின் காவடிச் சிந்து தோன்றிய சூழலை குறிப்பிட்டுள்ளார்.

முடியாது என்று சொன்ன அறிவாளிகள் வியந்து பார்க்கும்படி காவடிச்சிந்து பாடலை எழுதி முடித்துக் காட்டினார். இவர் பாடிய காவடிச்சிந்துப் பாடலுக்கு சேற்றூர் சமஸ்தான வித்துவான் இராமசாமிக் கவிராயர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

“மானூறு விழிக்குறமின் மருவுகுகன் றாண்மிசைக்கா
வடிச்சிந் தென்று
நானூறு பேர்சொனது மிதற்கிணையோ வெனக்கவிஞர்
நவிலச் சங்க
* மானூறு களறத்தேர் உக்கிரபாண் டியத்துரை தன்
வாக்காற் சொன்ன
தேனூறு காவடிச்சிந் துக்கிணைவே றெக்கவிஞர்
செப்புவாரே.”

என்ற சிறப்புப் பாயிரம் பாண்டித்துரைத் தேவர் இயற்றிய காவடிச் சிந்துவின் சிறப்பை உணர்த்தும். இவருடைய கவிதைப் புலமையை, பாவன்மையை அறிந்துகொள்ள ஏதுவாக இங்கு ஒரு எடுத்துக்காட்டு.

சிவஞானபுரத்து வேலன் (தலைவன்) தேர் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தலைவியின் நிலையைப் பின்வரும் பாடலில் கூறுகிறார்.

“கார்வரவு கண்டுந் தலைவன் றேர் வரவு காணாளாய்த்
தலைவி தோழியோடு கவன்று கூறியது”

மங்கு லொக்கும் தண்குழல் மானே
இனியசெழும் கனி நிகரும்
மாமதுர மென்மொழித் தேனே - முன்பு
வந்ததெ னொடுக லந்துமேவிய செந்திநாதர்பி ரிந்துபோகிய
வஞ்சகத்தை யெண்ணு தோறுமே
மனதுநொந்து நனிதளர்ந்து
வாடுதேயெவ் வண்ணம் மாறுமே
அங்கசன்க ரும்பு வில்லையே
வளைத்துவெம்போர் விளைத்திட்வென்
ஆவிசோரு தென்ன தொல்லையே - இதை
ஆனதினி யென்ன செய்குவேன்
ஆதியிற்கரு தாதுவைத்திடு காதலித்தனை வேதனைக்கிடம்

* மா நூல் துகளறத் தேர்ந்த என்றபடி (1910 ஆம் ஆண்டுப் பதிப்பில் உள்ளபடி)

முருகனிங்கே வருகை கண்டால்
ஆசைநோயும் தீர வுய்குவேன்.[2]

எனத் தலைவனை நினைந்து வாழும் தலைவியின் நிலையைப் பத்தாவது காவடிச்சிந்து பாட்டில் 'தேர் வருமோ கார்வருமுன்' என்று ஏங்கும் நிலையைக் கவிநயத்துடன் எடுத்துரைக்கிறார்.

"சங்க இலக்கியத்தின் மரபையொட்டி எழுந்த பாண்டித்துரைத் தேவரின் சிந்துப்பாடல்கள் அமுதமழை பொழிகின்றன. நான்மாடக் கூடலில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவிய உக்கிரபாண்டியன் என்ற பாண்டித்துரைத் தேவர் பாடல்களின் சொன்னடையும் சொலின் அன்ன மென்னடையும் பாடிப்பரவி மகிழத் தக்கவை. உக்கிர பாண்டியன் நாவில் தவழ்ந்த காவடிச் சிந்துப் பாடல்களைக் கவிவாணர், கலைவாணர் இசைவாணர் ஆகியவர் களித்துக் குளிக்கவல்ல வாவியெனலாம்."[3] என்பது பாண்டித்துரைத் தேவர் இயற்றிய காவடிச் சிந்தின் சிறப்பாகும்.

**பன்னூற்றிரட்டு**

அறத்தைப் போற்றும் பாடல்களைப் பல நூல்களிலிருந்து திரட்டி "பன்னூற்றிரட்டு" என்ற நூலை 1898 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார் பாண்டித்துரைத்தேவர். "திரட்டிய பாடல்களை வரிசைப்படுத்தி ஐம்பத்தோரு அதிகாரங்களாக வகுத்தார். திருக்குறளைப் போல் அதிகாரங்களை வகுக்காமல் பல செய்யுட்களை 'ஒழிபு' என்னும் அதிகாரத்தில் சேர்த்து விட்டபடியால் அதிகாரங்கள் குறைவாயின. இவ்வாறு தொகுத்த நூலுக்குப் 'பன்னூற்றிரட்டு' என்று பெயர் கொடுத்து 1898 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தினார். முதற்பதிப்பாக அவர் வெளிப்படுத்திய நூலின் பாடற்றொகை 1647. பிறகு மேலும் பல பாடல்களைச் சேர்த்து 2132 பாடல்களாக்கி இரண்டாம் பதிப்பை 1906 ஆம் ஆண்டில் வெளியிட்டார். பிறகு மூன்றாம் பதிப்பும் சில மாற்றங்களுடன் வெளியாயிற்று. இம்மூன்று பதிப்புக்களிலும் பாடல்கள் சீர் பிரிக்கப் பெறவில்லை என்பது அறிதற்பாற்று".[4] பின்னாளில் பல பாடல்களைச் சேர்த்து 1968 ஆம் ஆண்டு 'பன்னூல் பாடற்றிரட்டு' என கழகம் வெளியிட்டுள்ளது. இத்தகைய அரிய நூல் ஒன்று தமிழுலகில் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவர் பாண்டித்துரையார். இந்நூலுக்கு உ.வே. சாமிநாதய்யரவர்களும், வீர. லெ. சிந்நயச் செட்டியாரவர்களும் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளனர்.

'தென்னூற் றிரட்டெனச் செப்ப வேசிலர்
நன்னூற் றிரட்டென நவில
பன்னூற் றிரட்டெனப் பகர்பெயர் நிறீஇ
யளித்தா னம்மவொன் றவனா ரெனினே
யுறுஞ்சிறப் பமைந்த குறிஞ்சிமுன் னாய'

என உ.வே.சா இப்பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'வொழுக்க வகைநுவ லிழுக்கறு பாவினங்
கோத்து நிரலே யோத்து முறைவகுத்து
இரங்கொலிப் பாற்கடற் பரம்பிய வமிழ்தினை
மாயோன் றிரட்டி மீயோர்க் களித்தெனத்
தெருணனி கொளுத்தும் பொருளொருங் கோருழி
மொண்டுநா வலர்கூட் டுண்டு மகிழிய
வின்னூற் றறாஅப் பன்னூற் றிரட்டெனும்
பெயர்தொன் றம்ம வியற்றி யுதவினன்'

எனப் பாண்டித்துரைத் தேவரவர்களால் தொகுக்கப் பெற்ற பன்னூற்றிரட்டு என்னும் நூலுக்குத் தேவகோட்டை வீர.லெ. சிந்நயச் செட்டியாரவர்கள் அளித்த சிறப்புப்பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரைத் திருக்கோவிலின் திருப்பணி வரலாற்றை ஆய்ந்து ஏட்டுப் படிகளில் இருந்து தொகுத்துத் "திருப்பணிமாலை" என்ற நூலை வழங்கியுள்ளார். "இம் மதுரைத் திருப்பணிமாலை பெரும்பாலும் கட்டளைக் கலித்துறைகளாலும் சிறுபான்மை ஆசிரிய விருத்தங்களாலும் பாடப்பெற்றது; இம்மாலை இயற்றியவர் இன்னாரென்பது நிச்சயிக்கப்படவில்லை. தாண்டவ மூர்த்திப் பண்டாரம் இதனையியற்றியவர் என்பர் சிலர். இந்நூற் பாடல்களிற் சில சிறப்பின்றியும் அமைந்திருத்தலை நோக்கும்போது, இந்நூல் பலராற் பாடப்பெற்றது போலும் என்று கருதலாம். எங்ஙனமாயினும், மதுரைத் திருக்கோயில் சம்பந்தமான புராதன சரித்திரங்கள் பலவற்றை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இந்நூல் விளக்குவதென்பதிற் சிறிதுமையமில்லை"[5] எனப் பாண்டித்துரையார் இந்நூலிற்கு முகவுரை வழங்கியுள்ளார் (பின்னிணைப்பில் காண்க).

பாண்டித்துரையார் பன்னூற்றிரட்டு வெளியிட்ட முறையிலேயே சைவம் தொடர்பான பொதுப் பாடல்களையும் தொகுத்து, அதிகார அடைவு பெற்று, 'சைவ மஞ்சரி' என்ற நூலையும் வெளியிட்டார். "இவ் வெளியீடுகளால் நீதிகள், அறச்செயல்கள், அரசியல் முறைகள், அகப்பொருள் துறைகள் பற்றிய முன்னோர் கருத்துக்களையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய சமய சம்பந்தமான அரிய பொருள்களையும் அறிந்து தமிழ்மக்கள் பெரிதும் பயன் பெறலாயினர்."[6] பாண்டித்துரையாரின் இம்முயற்சி தமிழறிஞர்களால் போற்றி வரவேற்கப்பட்டது. பலருக்கும் பயன்படக் கூடியனவாக அவை இன்றும் உள்ளன.

* * *

## குறிப்புகள்

1. பாண்டித்துரைத்தேவர் பாடிய காவடிச் சிந்து, க.சி. கமலையா, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, பதி 1984. ப. 2-3.

2. மேற்படி, ப. 49

3. மேற்படி, பின் அட்டைக் குறிப்பு.

4. பன்னூல் பாடற்றிரட்டு (தொகு) சு.அ. இராமசாமிப் புலவர் (குறி) தி. சங்கப்புலவர். கழக வெளியீடு, பதி 1968 ப. VII

5. செந்தமிழ், தொகுதி 70, ப. 99.

6. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், (பதி) டி.ஜி. கோபால் பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி, ஜூன் 1951, ப. 82

# 5. தமிழ் நூற்பதிப்பு

## தமிழ் நூற்பதிப்புக்கு உதவி செய்தல்

தமிழறிஞர்களின் அரிய நூல்கள் பலவற்றை வெளியிடவும் இதுவரை வெளிவராத தமிழ் நூல்களை முதன் முதலாக அச்சிடவும் பாண்டித்துரையார், அதற்கு வேண்டிய பொருளுதவி செய்து வந்தார். இவருடைய உதவி பெற்று வெளிவந்த நூல்கள் பலவாகும்.

கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராயிருந்த உ.வே. சாமிநாத ஐயர், ஆற்றிய தமிழ்ப் பணியால் 'தமிழ்த் தாத்தா' எனச் சிறப்பிக்கப் பெற்றவர். இவர் பதிப்பித்த 'புறப்பொருள் வெண்பா மாலை', 'மணிமேகலை' ஆகிய இரண்டும் பாண்டித்துரையாரின் உதவியோடு வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. மதுரைவாசி இராமசாமிப்பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளையைக் கொண்டு, தேவாரத் தலமுறைப் பதிப்பை முதன்முதலாக வெளியிடக் கோரி அதற்கு வேண்டிய உதவியை நல்கியவர் பாண்டித்துரையார். சிவஞான முனிவர் இயற்றிய சிவஞான சுவாமிகள் பிரபந்த திரட்டு என்னும் பெயரில் இராமசாமிப்பிள்ளை வெளியிட்ட நூலும் பாண்டித்துரைத் தேவரின் பொருளுதவிப் பெற்று வெளிவந்ததாகும். சபாபதி நாவலர் என்ற பெரும்புலவரைக் கொண்டு, அச் சிவஞான முனிவரால் இயற்றப்பட்ட சிவசமயவாதவுரை மறுப்பு முதலிய தத்துவ நூல்களும் சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் சிலவும் பாண்டித்துரையாரின் உதவியால் வெளிவந்துள்ளன.

## அபிதான சிந்தாமணி

அபிதான சிந்தாமணி என்ற 1639 பக்கங்கள் கொண்ட சிறந்த தமிழ்ப் பேரகராதியைப் பதிப்பிக்க பாண்டித்துரையார் பொருளுதவி செய்துள்ளார். இவ்வகராதியைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் ஆ. சிங்கார வேலு முதலியார் இதைப் பற்றி இந்நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்நூல் இவ்வாறு ஒருவாறு முற்றுப்பெற்றபின் இதனைச் சென்னையிலிருந்த பிரபுக்கள் சிலரிடம் காட்டினேன். அவர்கள் இத்தகைய நூல் தமிழிற்கின்றியமையாததே. அதனை வெளியிடுக என்றனரேயன்றி யதனை அச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்.

பின்பு யாழ்ப்பாணம் மக-ா-ா ஸ்ரீ கனகசபைப் பிள்ளை, பி.ஏ.பி.எல்., அவர்களிடம் இதில் ஒரு பாகத்தைக் காட்டினேன். அவர் இஃது அரிய தமிழ்க்கதை அகராதி. இதனைச் சென்னையிலுள்ளார் ஆதரிக்க வேண்டுமென ஒரு பத்திரம் எழுதித்தந்தனர். புரொபஸராயிருந்த சேஷகிரி சாஸ்திரியார் அவர்களிடம் காட்டினேன். அவர் இதனை யொப்ப நானும் ஒரு நூல் எழுதிக் கொண்டு வருகிறேன் என்று கூறினரே அன்றி வேறொன்றுங் கூறவில்லை. அவர் கருத்தென்னோ அறியேன். அதற்குப் பின்னிதனைச் சென்னை கியூரேடரும் பச்சையப்பன் கல்விச் சாலைத் தரும விசாரணையில் எடிகேஷனல் டிரஸ்டியுமாகிய பிரம்ம ஸ்ரீ வ. கிருஷ்ணமாசாரியாரிடம் காட்டினேன். அவர் பல அச்சாபிசுக்காரர்களிடம் காட்டி செலவு அதிகம் பிடிக்கும் எனக் கூறிவிடுத்தனர். நான் கூடிய அளவில் உயர்தரக் கல்வி போதிக்க வல்லேனாயினும் ஊழ்வலியால் சென்னை பச்சையப்பன் விசாரணைக்குட்பட்ட பி.டீ. செங்கல்வராய நாயகர், கோவிந்த நாயகர் கலாசாலைகளில் அமர்ந்து செல்வாக்கிலாததால் வருவாய் மட்டாக அச்சிடப் பொருளிலாது இதனைச் சஞ்சிகை வாயிலாக வெளியிட ஒரு அறிக்கைப் பத்திரம் வெளியிட்டேன். அதன் பொருட்டுப் பலரிடம் கையொப்பம் கேட்டேன். அவர்கள் இது தொடர்ந்த கதையாயின் வாங்கலாமெனவும், சிலர் முற்றுறப் பலநாள் பிடிக்கும் எனவும், சிலர் கையொப்பமிட்டுஞ் சென்றனர். இச்சோர்வால் எனக்கு அக்காரியத்தில் ஊக்கஞ் செல்லாது நூலைப் புற்றிடுவோமா என எண்ணினேன். இதற்குள் சிலர் இதனை யொத்த சிறுநூல்கள் இயற்றினர். அதனைக் கண்டும் திருவுளப்பாங் கென்றிருந்தேன்.

இது நிற்க, நான் வழிபடு கடவுளாகிய மலைமகனாயகர் உள்ளக் குறிப்போ அல்லது நான் முதன்முறை வெளியிட்ட அறிக்கைப் பத்திரிகையோ அல்லது இரண்டாம்முறை வெளிப்படுத்திய அறிக்கையோ, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரசிடெண்டும் பாலவனத்தம் ஜமீன்தார் அவர்களும் தமிழ் வளர்த்த ஸ்ரீமான் பொன்னுசாமித் தேவரவர்களின் திருக்குமாரரும், என் தளர்ச்சிகளுக்கு ஊன்றுகோல் போல்வருமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் தாமே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டு களித்து அதனை மதுரைத் தமிழ்ச் சங்க அச்சுயந்திர சாலையில் அச்சிடுவான் எண்ணி என்னிடமிருந்த

பிரதிகளைத் தாமே மதுரைக்கு எடுத்துச் சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும் பலரைக் கொண்டு சுத்தமாய் எழுதுவித்து மீண்டுமவற்றைச் சென்னையிலுள்ள அச்சுயந்திர சாலையில் என் முன்னிலையில் அச்சிட, வுத்தரவளித்து அப்போதைக்கப்போது பொருளுதவி செய்துவந்தனர். அவர்கள் அருஞ்செயலை இப்புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற் போகார்"[1] என்ற இந்த அரிய பெரும் நூலான அபிதான சிந்தாமணியின் குறிப்புரை மூலம் பாண்டித்துரைத் தேவரின் தமிழ்ப் பற்றும், அவருடைய கொடைத்தன்மையும் புலனாகும்.

**அய்யரும் தேவரும்**

பாண்டித்துரையார் அரிய தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்து வெளியிட்ட உ.வே.சாமிநாதய்யர் அவர்களுக்குப் பொருளுதவி செய்துள்ளார். உ.வே. சாமிநாதய்யர் அவர்களை, பாண்டித்துரையார் இராமநாதபுரத்திற்குப் பலமுறை அழைத்துச் சிறப்பு செய்துள்ளார். **புறப்பொருள் வெண்பா மாலை, மணிமேகலை** ஆகிய இரண்டு பழைய நூல்களையும் முதலில் உ.வே.சா. பதிப்பித்து வெளியிட, வேண்டிய பொருளுதவி செய்தவர் பாண்டித்துரையார் என்பதை முன்பே கூறியுள்ளோம். உ.வே.சா.வின் என் சரிதம் என்ற நூலும் இச்செய்தியைக் குறிப்பிடுகிறது. புறநானூற்றைப் பதிப்பித்து வெளியிடுவது குறித்து உ.வே.சா. பல தமிழ் அறிஞர் பெருமக்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். பாண்டித்துரையாருக்கும் கடிதம் அனுப்பினார். கடிதத்தைக் கண்ட பாண்டித்துரையார், "தங்களால் லோகோபகாரமாய் அரிய நூல்கள் அச்சிடுவதாக எடுத்துக் கொள்ளப்பட்ட நன்முயற்சிக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்ய எப்பொழுதும் ஆவலுற்றிருப்பவனாதலின் அதற்குரிய நற்சமயம் அறிவிக்கக் கேட்டுக்கொள்ளும் தங்கள் பாண்டித்துரை (14.11.1894)"[2] என்று பதிலனுப்பியுள்ளார்.

திருவிடைமருதூரில் உ.வே.சா, பாண்டித்துரைத் தேவரைச் சந்தித்து மணிமேகலையையும் அச்சிடுவதைப் பற்றிக் கூறியுள்ளார். பாண்டித்துரைத்தேவர் இராமநாதபுரம் சென்றவுடன் உ.வே.சா விற்கு ஒரு செய்யுட்கடிதமும் ஐந்நூறு ரூபாய்க்கு ஓர் உண்டியலும் 17.12.1894 அன்று அனுப்பி வைத்துள்ளார். அந்தச் செய்யுட் கடிதம் பின்வருமாறு.

"புறநானூற்றுப் பதிப்பு

செய்யுட் கடிதம்

(கலி வெண்பா)

1. திங்கள் புரையுந் திருவதனச் செல்வியொரு
பங்கினமர் பெம்மான் பதமலரே - துங்க

2. முடிக்கணியாத் தாங்கி முதுபரவை வேலிப்
படிக்கணியா யென்றும் பலநூல் - வடிக்கும்

3. உளத்தார்க் கொருநிதியா யோங்குபுகழ் மேய
வளத்தா லுயர்குடந்தை மன்னித் துளக்கரிய

4. நேமிநா தன்மருகி நேயமனையா ளோடுவாழ்
சாமிநா தைய தகுநண்ப மாமுகவை

5. மன்னியபாண்டித்துரைபல் வந்தனஞ்செய் தின்றெழுதும்
நன்னிருப மீதாம் .............................

6. காமாரி தந்தவிளங் காதலனே ராய்த்தமிழின்
மாமாரி பெய்துலகை வாழ்விப்பாய் - .....

ஃ ஃ ஃ

7. பயன்சிறிய தேனும் பனையளவாக் கொள்வர்
நயன்றெரிவோ ரென்றவுண்மை நாடி முயன்றிதுபோ

8. தைந்நூறு ரூபா வனுப்பினனஃ தேற்றருள்வாய்
மெய்ந்நூ றுரீஇயொழுகும் வித்தகா-மைந்நூறி

9. ஆமாலை யிற்சுவையுண்டாக்கும் புறப்பொருள்வெண்
பாமாலை யச்சிற் பதிவுசெயும் - மாமுயற்சி

10. ஊறிகந்து முற்ற லுறுவிப்பா னோங்குகவான்
ஆறுகந்த சென்னியருள்.[3]

பாண்டித்துரைத் தேவரின் இந்த மடல் அவருடைய வள்ளல் தன்மைக்கும், கவிதை வளத்திற்கும் ஒரு சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

'மணிமேகலை மூலமும் அரும்பத உரையும்' என்ற அரிய நூல் பாண்டித்துரையாரின் பொருளுதவியைக் கொண்டு உ.வே.சா. அவர்களால் 1898 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. மணிமேகலை முதற்பதிப்பின் முன்னுரையில் பாண்டித்துரைத் தேவரைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் உவே.சா.

"மணிமேகலையைக் கவலையின்றிப் பதிப்பித்து வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்த பாலவனத்தம் ஜமீன்தாரவர்களாகிய இராமநாதபுரம் ஸ்ரீ.பொ. பாண்டித்துரைத் தேவர்களின் தண்ணளியும் பெருந்தகையும் ஒருபொழுதும் மறக்கற்பாலனவல்ல; மிகவும் பாராட்டற்பாலன. இதைப் போன்ற பெரிய காரியங்களைத் திருத்தமாகச் செய்து நிறைவேற்றியவர்களின் வழித்தோன்றலாய் மிக்க பாண்டித்தியமடைந்து, நூலாராய்ச்சியே இன்பத்துள் இன்பம் எனக் கொண்டொழுகும் அப்பிரபு அவர்களுக்கும் பழைய நூல்களையும் அவற்றின் உரைகளையும் பதிப்பித்து வெளிப்படச் செய்து அமிழ்தினுமினிய தமிழைப் பரிபாலித்தல் இயல்பாயினும், படிப்பாரும் கேட்பாரும் இன்றி மூலையில் மறைந்து கிடக்கும் அரிய பெரிய நூல்களைத் தேடித் தொகுத்துப் படித்துக் கொண்டு அநாதரவுற்றிருப்போர்க்கு அஃது அரிதாகத் தோன்றும் என்பது திண்ணம்"[4] உ. வே. சா. அவர்களுக்குப் பொருளுதவி செய்ததுடன் சில பதிப்பிக்க வேண்டிய நல்ல சுவடிகளையும் பாண்டித்துரையார் அளித்துள்ளார். "ரா. இராகவையங்கார் அவர்கள் அகநானூற்றுக்குத் தாம் எழுதி வைத்திருந்த பிரதிகள் முதலியவற்றைப் பதிப்பிப்பதற்காக பாண்டித்துரைத் தேவர் மூலமாக ஐயரவர்களிடம் சேர்ப்பிப்பதாகவும் எழுதியிருக்கிறார்கள். எனினும் இம்மூன்று நூல்களும் ஐயரவர்கள் பதிப்பாக வெளியாகவில்லை. இதற்குக் காரணம் ஒரு வகையில் புலமைக் காய்ச்சல் என்று சொல்லலாம்"[5] என மு. அருணாசலம் 'தமிழ் இலக்கிய வரலாறு' (பதின்மூன்றாம் நூற்றாண்டு ப.106) என்ற நூலில் எழுதியுள்ளார். பாண்டித்துரையார் எப்பாடுபட்டாகிலும் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்து நூலாக வெளிக் கொணர வேண்டும் என்பதில் அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை இத்தகைய நிகழ்ச்சிகள் விளக்குகின்றன. மதுரை இராமசாமிப் பிள்ளையைக் கொண்டு தேவாரத்தலமுறைப் பதிப்பை முதன்முதல் வெளியிடத் தூண்டி உதவி புரிந்தார் பாண்டித்துரையார். 'சிவஞான சுவாமிகள் பிரபந்தத்திரட்டு' வெளிவருவதற்கும், சபாபதி நாவலரைக் கொண்டு 'சிவசமயவாதவுரை மறுப்பு' முதலிய தருக்க நூல்கள் வெளிவருவதற்கும், சுன்னாகம் அ.

குமாரசாமிப்புலவர் பதிப்பில் சில நூல்கள் வெளிவருவதற்கும் பாண்டித்துரையார் உதவி செய்துள்ளார்.

இத்தகைய அரிய இலக்கியங்கள் வெளிவரவும் வெளிவந்த பல இலக்கியங்கள் மறுபதிப்பில் மலிவாக, மக்களுக்குக் கிடைக்கும் வகையிலும் மதுரைத் தமிழ்ச் சங்க அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளிவரச் செய்துள்ளார்.

பாண்டித்துரையாரின் பல நல்லியல்புகளில் ஒன்று, தாமே முன்வந்து உதவி செய்தலாகும். பெருவள்ளலாகத் திகழ்ந்த பாண்டித்துரையார் பணிந்து உதவிகேட்போர் போல நூல் வெளியிடத் தமது விருப்பத்தையும், வேண்டியதைச் செய்யும் பண்பும் அனைவரையும் வியக்க வைப்பதாகும்.

"சாதுகேசய்யர் நினைவாக ஒரு நூல் நிலையம் அமைக்க எ.சி. நாராயணசாமி ஐயரென்பார் தலைப்பட்டிருந்தார். பாண்டித்துரையை அணுகினார். பாண்டித்துரையார் உருபா. 300 தருதற்கு வாக்களித்தார். அதனை நினைவுறுத்தி 13.12-1902 - இல் ஒரு கடிதம் விடுத்தார் நாராயணசாமி. அது குறித்து உ.வே. சாமிநாதையர்க்கு 21-12-1902 இல் பாண்டித்துரையார் மறுமொழி எழுதுகின்றார். முற்றிய கதிர் தலைதாழும் என்பதை நினைவுறுத்தும் அவ்வஞ்சல் வருமாறு

திருச்சிற்றம்பலம்

மதுரை
21-12-02

கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த ஐய,

அநேக நமஸ்காரம். க்ஷேமம் அதையே கேட்க ஆவலதிகம். தாங்கள் என் மாட் டன்புகூர்ந்து விடுத்த கடிதங்கள் வந்தன.

என்மீதும் செந்தமிழ் மீதும் எக்காலத்தும் இடையறா அன்பு பூண்டொழுகும் தங்கட்கு யான் என்றும் பல்வகையானுங் கடமைப்பட்டுள்ளேன்.

மகா - ௱- ௱- ஸ்ரீ, எ. ஸி. நாராயணசாமி ஐயரவர்களிடமிருந்து காலஞ்சென்ற ஸாது சேஷ ஐயரவர்களின் ஞாபகார்த்தமாய் வைக்க உத்தேசித்திருக்கும் ஓரியண்டல் லைபரேரி விஷயமாக யான் முன்னரே வாக்களித்திருக்கும் ரூபாவை அனுப்புமாறு கேட்டு நாளது மீ 13உ ம்

ஓர் கடிதம் வந்திருக்கின்றது. எனக்கு நேர்ந்துள்ள பல வேலைகளால் இதுவரை அத்தொகை அனுப்பாதிருந்த எனது பெரும் பிழையைப் பொறுத்தருளும்படி எனக்காகத் தாங்கள் அவர்களைக் கேட்டுக் கொள்வதுடன் இன்னும் நாலைந்து தினங்களுக்குள் ரூபா. 300 (முந்நூறு ரூபா) அவர்கட்கு அனுப்பி விடுவதாக அறிவிக்கவும் கேட்டுக் கொள்கின்றேன். இது நிற்க.

நமது சங்கத்திலிருந்து பதிப்பிக்க உத்தேசித்திருக்கும் புத்தகங்களில் தாங்கள் பிழைதிருத்தி அச்சிடு நிலைமையில் அனுப்புவதாக வாக்களித்த பழைய திருவிளையாடலையே முதலில் அச்சிட அடியிற் காட்டிய ஞாயங்களாற்றங்கட்கே ஆவசியகம் எனத்தோன்றுமாதலால் கூடிய விரைவில் அதனை அனுப்பக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஞாயங்களாவன - இம் மதுரைக்கும் தமிழுக்கும் சங்கத்திற்கும் உரிய முழுமுதற் கடவுளாகிய ஆலவாயடிகள் திருவிளையாடலாதலாலும், முதலில் அச்சிடும் புத்தகம் நமது சங்கத்திற்கு தலைமை வித்வானாம் தங்களாற் பார்வையிடப் பட்டதாக வெளியாவது இன்றியமையாச் சிறப்புடையதாதலாலுமேயாம்.

இது விஷயத்தில் யான்தங்கட்குக் கொடுக்கும் சிரமத்திற்கு என்னை மன்னிக்குமாறு கேட்டுக் கொள்ளும்.

*தங்கள் நண்பன்*

பாண்டித்துரை

21-12-02.

மதுரை."[6]

பாண்டித்துரையாரின் பண்பை உணர இக்கடிதம் ஒன்றே போதுமான சான்றாகும்.

மதுரைத் தமிழ்ச் சங்கப்பணிகளைப் பாராட்டி அறிஞர் உ.வே.சாமிநாதையர் அதன் தலைவர் பாண்டித்துரையாருக்கு எழுதிய கடிதம், சங்கப் பணிகளை மதிப்பிட ஒரு சான்றாக அமைகிறது.

ஒரு சான்றுரை :

"சென்ற மைதல்மஸ் விடுமுறை நாட்களில் மதுரை சென்று தமிழ்ச் சங்கத்தின் அங்கங்களாகவுள்ள சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, செந்தமிழ் முத்திராசாலை முதலியவற்றைப் பார்த்தேன். அவைகள் சென்ற ஆண்டுகளிலிருந்த நிலைமையைக்

காட்டிலும் எத்தனையோ மடங்கு வளர்ச்சியுற்று விளங்குகின்றன. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிற் கற்கும் மாணாக்கர்கள் நன்கு பாதுகாக்கப்பெற்றுத் தத்தமக்குரிய பாடங்களை மிகச் செவ்வையாகக் கற்றுச் சிந்தித்துத் தேர்ந்து, கேட்ட வினாக்களுக்கு யாதொரு தடையுமின்றி இனிமையாக விடைபகர்தலும், செய்யுட்களைச் சந்தத்தோடு ஒப்பித்தலும், சங்கீதப் பயிற்சி, வடமொழிப் பயிற்சி, ஆங்கிலப் பயிற்சி, சொல்வன்மை, ஊக்கம், தெய்வபக்தி, வணக்கம் முதலிய நல்லொழுக்கங்கள் உடைமையும் மிகுந்த மகிழ்ச்சியை விளைவித்தன. இவர்கள் படிக்கத் தொடங்கிய பொழுது இவர்களுடைய நிலைமையைப் பார்த்திருந்த எனக்கு, இவர்கள் அதிசீக்கிரத்தில் இவ்வளவு மேம்பாடடைந்து விளங்குவது பெரியதோர் வியப்பைத் தந்து உபாத்தியாயர்களுடைய உழைப்பை நன்கு புலப்படுத்தியது. பாண்டியன் புத்தக சாலையில், பெரும்பாலும் அகப்படாதனவாகிய அரிய பெரிய கையெழுத்துத் தமிழ்ப் புத்தகங்கள் பல சேகரஞ்செய்து மிகச் செவ்வையாக வைக்கப் பெற்றிருத்தலும், அவை நன்றாகப் பாதுகாக்கப் பெற்று வருதலும். சிறந்த வித்துவான்களால் முறையே பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெற்று வருதலும் மிகுந்த ஆனந்தத்தை விளைவிக்கின்றன. இதுவரையில் ஆராய்ந்து பதிப்பிக்கப் பெறாத சில புத்தகங்கள் தக்க குறிப்புரைகளோடு பதிப்பிக்கப் பெற்று வெளிவந்திருத்தலும், இதுவரையில் வெளிப்படாத அரிய பெரிய விசயங்கள் பல வெளிவந்திருத்தலும், செந்தமிழ் என்னும் பத்திரிகையைப் பெற்றுவரும் அன்பர்களுக்கு நன்கு புலப்படும். எத்தனையோ பலர் சேர்ந்து செய்ய வேண்டிய இப்பெருங்- காரியத்தை ஏகதேசத்தில் வகித்துச் செலவு செய்து பரிபாலித்து வருபவர்களும் பாலவனத்தம் சமீந்தாரும் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியுமாகிய இராமநாதபுரம் மகா - ாா - ாா - ஸ்ரீ பாண்டித்துரை ஸாமித் தேவரவர்களுடைய பெருந்தகைமை பாராட்டற் பாலது; தம்முடைய சமீன் சம்பந்தமாகவுள்ள காரியங்கள் எவ்வளவோ இருந்தும் அவற்றைச் சிறிதும் மதியாமல் தமிழ்ச்சங்கத்தின் சம்பந்தமான காரியங்களையே அவர்கள் எப்பொழுதும் கவனித்து வருவதாகவும் தெரிகிறது. கவர்ன்மெண்டாரும், இத்தமிழ் நாட்டைச் சார்ந்த அரசர்களும், பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும், மற்றவர்களும் கவனித்துச் சங்கத்தின் சம்பந்தமான பொருட்செலவு முதலியவற்றில் மகா - ாா - ாா - ஸ்ரீ பாண்டித் துரை ஸாமித் தேவரவர்களுக்கு அதிகக் கவலை வையாமற் சங்கத்தின் அபிவிருத்தியைக் கருதிப் பொருளுதவி செய்வார்களாயின், இக்காலத்தில் நிரம்ப உபகாரமாக இருக்கும். இவ்வரிய காரியத்தை மேற்கொண்டு இடைவிடாமல் உழைத்துவரும் அக்கிராசனாதிபதி அவர்களுடைய மனத்திற்கு யாதொரு கவலையும்

உண்டாக்காவண்ணம் பாதுகாத்தருளும்படி ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரருடைய திருவடிகளை சிந்திக்கிறேன்.

சென்னை
10-10-1905

இங்ஙனம்
வே. சாமிநாதையன்
Tamil Pandit,
Presidency College,
Chennai."[7]

பாண்டித்துரையாரின் தமிழ்ப்பணி உ.வே.சா. போன்ற அறிஞர்களின் தமிழ்ப்பணிக்குப் பேருதவியாக அமைந்தது.

**பாவாணரும், பாண்டித்துரையாரும்**

தமிழ்ப் பெருந்தகை தேவநேயப் பாவாணர் பாண்டித்துரைத் தேவர் எழுதிய நூல்கள், வெளியிட்ட நூல்கள், அவர் செய்த தமிழ்ப்பணிகள் அனைத்தையும் அழகுமிளிரும் மலர்மாலை போல **'பாண்டித்துரைப் பதிகம்'** எனும் ஒரே கவிதையில் தொகுத்து அளித்துள்ளார்.

1

" நாலா விடத்தும்வாழ் நற்றமிழ்ப் பண்டிதற்சேர்
நாலாந் தமிழ்ச்சங்கம் நாட்டியதால் - மேலான
பாண்டித் தமிழ்வேந்தன் பாங்கிற் றமிழ்காப்பே
பாண்டித் துரைத்தேவன் பண்பு

2

பல்லா யிரமாகப் பண்டைத் தமிழ்ச்சுவடி
எல்லா விடத்தும் இயன்றவரை - பல்லோரைத்
தூண்டித் தொகுத்தான் துணிமறத் தொல்குடிப்
பாண்டித் துரைத்தேவன் பார்.

3

நன்னூல் பலவற்றின் நன்மணிப் பாத்தொகுத்த
பன்னூற் றிரண்டென்னும் பண்டாரம் - என்னோரும்
வேண்டிற் றெளிதாய் விரைந்து கூட்டுண்ண வைத்தான்
பாண்டித் துரைத்தேவன் பார்த்து.

4

இலக்கணமும் பல்வே றிலக்கியமுங் கற்ற
புலக்கண மன்றிப் பொதுவும் - மலக்கமற
வேண்டும் விளங்குரைகள் வெவ்வேறு தோற்றுவித்தான்
பாண்டித் துரைத்தேவன் பாங்கு.

5

கோவை யுலாமாலை கூறுங் கலம்பகமே
பாவின் தொகையாம் பனுவல்கள் - மேவுதொன்மை
ஈறுதொடங்கி யெளிய விலைப்ப திப்பான்
தேறுபாண் டித்துரைத்தே வன்.

6

ஆரியமும் செந்தமிழு மான விருகடலில்
வாரி யெடுத்தசிங் காரவேல் - கோர
அபிதான சிந்தா மணிவெளியிட் டான்காண்
குவிதானம் பாண்டித்துரை.

7

செந்தமிழ் என்னும் சிறந்ததமிழ் மாதிகைதான்
உந்தி மணிபொன் னுகுமருவி - நந்தஉரை
மாண்ட அறிவாய்வு மல்கிவெளி வந்ததுவும்
பாண்டித் துரைத்தேவன் பாடு.

8

சென்னை யரசியலார் செந்தமிழ்ச் சொல்லையெல்லாம்
முன்னும் அகர முதலியெனத் - துன்னுவிக்க
வேண்டி யமைத்த வியவர் குழுவுறுப்புப்
பாண்டி துரைத்தேவன் பங்கு.

9

எவரும் நல்ல இயற்றமி ழாசிரியர்
ஆவகை யாய்ந்தெண்ணி யாண்டுதோறும் மூவகைப்
பண்டிதத் தேர்வுவைத்தான் பாண்டித் துரைத்தேவன்
இன்று மதற்கின் றிணை.

10

தென்மதுரைப் பாண்டியன் தெய்வத் தமிழ்வாழி
நன்மதுரை நாலாஞ்சங் கம்வாழி - சொன்மதுரப்
பாலவ நத்தம்வேள் பாண்டித் துரைத்தேவன்
போலிமை யற்ற புகழ்."[8]

பாவாணரின் இக்கவிதை வரிகள் வெறும் சொற்கள் அல்ல; இவை பாண்டித்துரைத் தேவர் தமிழ்மொழிக் காவலனாகச் செயல்பட்டார் என்பதை நிறுவும் சான்றுகளாகும். பிராமண, பிராமணரல்லாதோர் ஆகிய இரு பிரிவினரும் பாண்டித்துரைத் தேவரின் ஆதரவைப் பெற்றிருந்தனர். ஆனால் தமிழுக்கு, தமிழினத்துக்கு எதிராக நின்ற வடமொழி ஆதரவாளர்களின் கருத்தை மறுத்தார்; எதிர்த்தார்; அத்தகையோர் எழுதிய ஆராய்ச்சிகளுக்கு அவ்வப்போது மறுத்துப் பதிலளித்துள்ளார். இவ்வகையில் தமக்கு ஆதரவாக இருந்த அறிஞர்களை ஊக்குவித்தார். பாண்டித்துரையாரின் கட்டுரைகளும், சொற்பொழிவுகளும், இவருடைய ஊக்குவிப்பில் பணியாற்றிய தமிழறிஞர்களின் வரலாறும் இதற்குச் சான்றாகும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதத் தேர்வெழுதிய தேவநேயப் பாவாணரின் அனுபவக் கருத்தும் புதுமையாகவே உள்ளது.

"அன்று ஆங்கிலப் பற்றாளனாகவும் பேச்சாளனாகவும் மாணவர் (ஆங்கில) இலக்கிய மன்றச் செயலாளனாகவும் இருந்ததனால், ஆங்கில இலக்கியத்தைக் கரைகாணவும், ஆக்சுபோர்டு (Oxford) என்னும் எருதந்துறையிற் பணி கொள்ளவும் விரும்பினேன். ஆயினும் இறுதியில் தமிழ் கற்றதினாலும், இசைப்பாட்டும், செய்யுளும் இயற்றி வந்ததனாலும், இசைத்தமிழ்ப் பித்தனானதனாலும், நான் அறியாவாறு என் மனப்பாங்கை மாற்றியதனாலும் நான் கற்ற ஆம்பூர்ப் பள்ளியிலேயே அஃது உயர்நிலைப் பள்ளியாக வளர்ச்சியுற்றிருந்தபோது உதவித் தமிழாசிரியனாக 1921 ஆம் ஆண்டில் அமர நேர்ந்தது. அதன்பின் அப்பதவிக்கும் முழுத்தகுதி பெறுமாறு 1924 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வெழுதித் தேறினேன். அதனால் எழுந்த செருக்கினாலும் தமிழ் வெறியினாலும், ஆங்கிலத்தை அறவே புறக்கணித்து நான் ஆங்கிலம் பேசக் கூடாது என்றும் பிறர் பேசின் செவிமடுக்கக்கூடாது என்றும் சூளிட்டுக் கொண்டேன். அம்மயக்குப் பத்தாண்டு தொடர்ந்தது. அதனால் தமிழாராய்ச்சியில் ஆழ முழுகித் தமிழின் அடி மட்டத்தைக் கண்டேன். ஆயினும் ஆங்கிலப் பேச்சாற்றலை இழந்து விட்டதனால் ஆங்கிலப்பட்டம் பெறும்வரை கல்லூரியுள் கால் வைக்க முடியாது போயிற்று. அதனால் பதவியுயர்வும் பொருளியல் முன்னேற்றமும் இல்லாது போயின."[9]

என்றுரைக்கும் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் அனுபவம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளையும், தமிழ் மாணாக்கர்களை உருவாக்கிய பாங்கினையும் அறிய உதவுகிறது. மதுரைத் தமிழ்ச் சங்கம் ஊட்டிய தமிழுணர்வு அவரை மொழி ஞாயிறாக உருவாக்கியது என்றால் மிகையில்லை.

* * *

## குறிப்புகள்

1. அபிதான சிந்தாமணி, (பதி) ஆ சிங்காரவேலு முதலியார் (திருத்தியது) சிவப்பிரகாச முதலியார், ஏசியன் எஜுகேஷனல் சர்வீஸஸ். புதுதில்லி, பதி. 1981. ப. VIII

2. என் சரிதம், உ.வே.சா. (வெளி) டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1982, ப. 740

3. மேற்படி, ப. 741

4. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், உ.வே.சாமிநாதஐயர், பதிப்பு 1898 ப. 9

5. தமிழ் இலக்கிய வரலாறு, மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், பதி.1970. ப.106.

6. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், இரா. இளங்குமரன் மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை பதி. 1987. ப. 48

7. மேற்படி, ப. 150-151.

8. செந்தமிழ் (க) பாண்டித்துரைப் பதிகம், ஞா. தேவநேயன், தொகுதி 70, பகுதி 4, டிச. 1975, ப.48-49.

9. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், இரா. இளங்குமரன் மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை பதி. 1987. ப.83-84.

# 6. மதுரைத் தமிழ்ச் சங்கம்

தலைச் சங்கம் எனும் முதற்தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் **காய்சினவழுதிப் பாண்டியன்.** இடைச் சங்கம் எனும் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் **வெண்டேர்ச் செழியன்.** கடைச்சங்கம் எனும் மூன்றாம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் **முடத்திருமாறன்** எனும் உக்கிரப்பாண்டியன். மதுரைத் தமிழ்ச் சங்கம் எனும் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் உக்கிரப்பாண்டியன் என்ற பாண்டித்துரைத் தேவர். மதுரை என்றால் மீனாட்சி அம்மன் கோவில் என்று அனைவரும் கூறுவது வழக்கமாகிவிட்டது. ஆனால் மதுரை என்றால் தமிழும் தமிழ்ச் சங்கமுமல்லவா நம் நினைவுக்கு வர வேண்டும்.

பாண்டித்துரைத் தேவர் செய்த தமிழ்ப் பணிகளில் தலைசிறந்தது மதுரையில் 1901 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் நாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நான்காம் தமிழ்ச் சங்கமாகத் தோற்றுவித்ததாகும். தமிழின் சீர்குலைந்த நிலையைக் கண்டு மனம் வருந்தி இந்நிலையைப் போக்க, தன்னால் இயன்ற அளவு ஏதாவது செய்ய வேண்டும் என்ற முயற்சியில் தோன்றியது மதுரைத் தமிழ்ச் சங்கம். இதற்கு முதல் அடியெடுத்துக் கொடுத்தவர் **தவத்திரு ஞானியார் அடிகளாவார்.**

பாண்டித்துரையார் 1900 ஆம் ஆண்டு சென்னை சென்று முகவைக்குத் திரும்பும் வழியில், திருப்பாதிரிப்புலியூருக்கு வந்து தவத்திரு ஞானியார் அடிகளைச் சந்தித்தார். அன்று மாலை பாண்டித்துரையார் தலைமையில் ஞானியார் அடிகள் சொற்பொழிவு நிகழ்த்தினார். தமிழின் தற்கால நிலை என்ற பொருளில் ஞானியார் அடிகளின் கடல்மடை திறந்ததுபோன்ற உணர்ச்சிமிக்க உரையினைக் கேட்ட பாண்டித்துரையார் அகமகிழ்ந்தார். அச்சொற்பொழிவில் பாண்டித்துரையாரும் பிற செல்வந்தர்களும் ஒன்று கூடி மீண்டும் ஒரு தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நிறுவ வேண்டும் என்றும், அதைத் தமிழின் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்வளர்ச்சிக்கு வேண்டுவன செய்ய வேண்டும் என ஞானியார் அடிகள் கேட்டுக் கொண்டார்.

அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தமது முடிவுரையில், ஞானியாரடிகள் கூறிய கருத்து

போற்றுதற்குரியது; ஆற்றற்குரியது என்றும், தாம் தமது சகோதரரான பாஸ்கர சேதுபதியிடமும் கலந்து பேசித் தக்க முடிவு செய்வதாகவும் உறுதி கூறினார்.

பாண்டித்துரைத்தேவர் இந்த அரிய முயற்சியைப் பற்றி பாஸ்கர சேதுபதியிடம் எடுத்துக்கூறி ஆவன செய்யக் கோரினார். பாஸ்கர சேதுபதியும் சில திங்கள் கழித்துத் திருப்பாதிரிப்புலியூருக்கு வந்து ஞானியாரடிகளைச் சந்தித்தார். அவருடைய விருப்பப்படி தமது ஜமீன் பரிவாரங்களுடன் மடாலயத்திலேயே பாஸ்கர சேதுபதி தங்கினார். "அன்று மடாலயத்தில் அடிகளாரின் சொற்பொழிவு நடைபெற்றது. அதுகேட்ட சேதுபதியவர்கள் தம்மை மறந்து வியப்பிலும் இன்பத்திலும் திளைத்தார். முன்பே பாண்டித்துரைத்தேவரவர்கள் மூலமாக ஞானியாரடிகளின் உயர்வினை அறிந்து கொண்டிருந்த பாஸ்கரசேதுபதி அந்த உண்மையை நேரில் கண்டறிந்து மெய்மறந்து அடிகளாரின் அன்பில் மயங்கினார். அவர்தம் விருப்பத்தை ஈடேற்ற எண்ணம் கொண்டார். தமிழை வளர்க்க ஒரு கலாசாலை ஏற்படுவதால் அதற்குரிய பொருள்தந்து உதவுவது என் கடமையாகும் என்று வாக்களித்தார். தமிழ்க்கல்லூரி மதுரையில் நிறுவுவதற்கும் ஒப்புதல் தந்து விடைபெற்றார் பாஸ்கர சேதுபதி.[1] மதுரைத் தமிழ்ச்சங்கம் உருவாக இந்நிகழ்ச்சிகள் முக்கிய காரணமாயின.

மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்க மதுரையில் பாண்டித்துரையாருக்கு ஏற்பட்ட மற்றொரு அனுபவமும் காரணம் என்பதை அறிஞர் பெருமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"இராமநாதபுரத்திலிருந்து மதுரைக்கு அக்காலத்தில் ரயில் மார்க்கம் ஏற்படவில்லை. அதனால் தேவர் வருகையின் அருமையறிந்த மதுரைவாசிகளான அறிஞர் பலர் அவரது அரிய பிரசங்கங்களைக் கேட்கப் பெரிதும் விரும்பினர். அவ்விருப்பின்படி தேவரவர்கள் உபந்நியாசங்கள் நடத்த நேர்ந்தபோது கம்பராமாயணம், திருக்குறள் என்ற நூற்பிரதிகள் அவர்கட்கு வேண்டியிருந்தன. அவை பெற விரும்பி நண்பர் சிலரிடம் சொல்லியனுப்பினார். புத்தகங்கள் எவரிடமிருந்தும் சமயத்தில் இவர்கட்கு எட்டவில்லை. முடிவில், புதுமண்டபம் புஸ்தகக் கடையிலிருந்தே அப்பிரதிகள் விலை கொடுத்துத் தருவிக்கப்பட்டன. இந்நிலைமை அறிந்ததும் தமிழ் நிலைபெற்ற .......... மதுரை, கூடலினாய்ந்த ஒண் தீந்தமிழ் என்று முன்னோரெல்லாம் சிறப்பித்ததும், செந்தமிழின் பிறப்பகமுமான மதுரையில், தமிழ்க்குக் கதி என்ற கம்பராமாயணமும் திருக்குறளும் கிடைப்பது அருமையாய் விட்டதே என்று தேவரவர்கள் வருந்தினர்.

அவ்வருத்தம் அவருள்ளத்தில் நன்கு பதிந்தும்விட்டது. இப்பெருங்குறை நீங்க மதுரையில் தமிழ்ப் பயிர் வளர்ந்தோங்கும்படி செய்யும் உபாயத்தை நண்பர் சிலருடன் தேவரவர்கள் ஆராயலாயினர். இக்கருத்தை நிறைவேற்றுவதில் தேவரவர்கட்கு ஊக்கமளித்து வந்தவர்கள் முன் கூறிய ஸ்ரீ டி.ஸி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் சேதுபதி கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ எஸ். சாமிநாத ஐயர் என்பவருமே ஆவர்".[2] 1901 ஆம் ஆண்டு மே 21, 22, 23 ஆகிய மூன்று நாட்கள் மதுரை மாநகரில் சென்னை மாகாண அரசியல் மாநாடு கூடியது. பி. அனந்தசார்லு எனும் அறிஞர் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது. பாண்டித்துரைத் தேவர் இதன் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்து உரையாற்றினார். மாநாட்டின் முடிவில், தமிழ் வளர்த்த மதுரை மாநகரின் பழம்பெருமைகளைக் கூறித் தற்போது நிலவி வரும் தமிழ்மொழியின் அவல நிலையையும் எடுத்துரைத்தார். தமிழ்மொழி வளர்ச்சிக்கெனச் சங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அங்கு கூடியிருந்த அறிஞர்கள் யாவரும் பாண்டித்துரைத் தேவரின் வேண்டுகோளை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். அதற்கடுத்த நாள் அறிஞர்கள் சேதுபதி கலாசாலையில் கூடினர். பாண்டித்துரைத் தேவர் தமது சொற்பொழிவில் தமிழ் வளர்ச்சிக்கெனச் செய்ய வேண்டிய கடமைகளையும், அறிஞர்கள் தாம் செய்யும் பணிகளுக்கு ஆதரவளிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். அனைவரும் ஒரு மனதாக அவரின் வேண்டுகோளைப் பாராட்டி ஏற்றுக் கொண்டனர்.

1901, செப். 14ம் நாளன்று நான்காம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கும் செய்தி நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. உ வே.சாமிநாதைய்யர், ரா. இராகவையங்கார், வை.மு. சடகோபராமாநுஜாசாரியார், வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், சோழவந்தான் சண்முகம் பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், திருமயிலை சண்முகம் பிள்ளை போன்ற தமிழறிஞர்களும், புலவர்களும் ஒருங்கு கூடினர். "ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்கள் தம் பரிவாரங்களுடன் அத்திருவிழாவைச் சிறப்பிக்க விஜயம் செய்திருந்தனர். பிலவ ஷு ஆவணி மீ 13வ ம் பானுவாரமும் சித்திரா நட்சத்திரமும் கூடிய நன்னாளிலே பகல் 1.30 மணிக்குமேல் 2.45 மணிக்குள் தனுர் லக்கினத்தில், சேதுபதி ஹைஸ்கூல் மண்டபத்தைச் சேது வேந்தர் திருமுன்பும் பேரறிஞர் குழாத்திடையும் மதுரைத் தமிழ்ச் சங்கம் தாபிக்கப் பெற்றது. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகச்சாலை, நூலாராய்ச்சிச் சாலை, முதலியன சேதுபதி ஹைஸ்கூலையொட்டியிருந்த தனிக் கட்டடங்களில் அன்றே தொடங்கப்பெற்றன. அரசரும், புலவரும், பிறகும் மதுரை நான்காம்

தமிழ்ச் சங்கம் நீடு வாழ்க என்று ஒருசேர வாழ்த்தலாயினர். அன்றுமுதல் மூன்றுநாள்வரை நடந்த பெருங்கூட்டங்களில் அரிய பல உபந்நியாசங்களை அறிஞர் பலர் நிகழ்த்தினர்.[3] மதுரைத் தமிழ்ச் சங்கம் இத்தகைய விழாக் கோலத்துடன் தொடங்கப்பட்டு அதன் பணிகள் தொடங்கப்பட்டன.

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பாண்டித்துரையார் பொறுப்பேற்றார். இச் சங்கத்தின் முதல் கூட்டம் பாண்டித்துரையாரின் மாளிகையில் நடைபெற்றுள்ளது. "இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குரித்தான மாளிகையொன்று அமைக்கவேண்டிச் சென்றவாண்டில் வேண்டிய அளவு வெற்று நிலம் வாங்கப்பட்டுள்ளதாயினும், அதிற் கட்டிட வேலைகள் இன்னுந் தொடங்கப் பெறாமையால் இப்பொழுது மதுரை வடக்கு வெளிவீதியில், இச்சங்கத்து அக்கிராசனாதிபதியவர்களாகிய பாலவநத்தம் ஜமீந்தார் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களுடைய அழகிய மாளிகையில் 25-8-02 இத்தமிழ்ச் சங்கம் அமைக்கப் பெற்று நடைபெறுகின்றது ஆனால் இச்சங்கத்தின் அங்கங்களுளொன்றாகிய சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை மாத்திரம் இடம் பற்றாக்குறையால் முன்போலவே சேதுபதி ஹைஸ்கூலைச் சார்ந்த கட்டிடமொன்றில் அமைந்துள்ளது"[4]. பாண்டித்துரைத் தேவரின் மாளிகையில்தான் மதுரைத் தமிழ்ச்சங்கப் பணிகள் தொடங்கப்பட்டன என்பது நாம் அறியவேண்டிய ஒரு செய்தியாகும். சிலகாலத்திற்குப்பின் மதுரை வடக்கு வெளிவீதியிலிருந்த அந்தப் பெரிய மாளிகையையே தமிழ்ச் சங்கத்துக்கென்று அளித்து உதவியுள்ளார் பாண்டித்துரையார். பாஸ்கர சேதுபதி தமிழ்ச்சங்கத் தொடக்க நாளில் ரூபாய் பத்தாயிரம் வழங்கினார். சங்கப் பணிகள் சிறந்த முறையில் நடைபெற நிலைத்த அறக்கட்டளை ஒன்றை நிறுவினார். குறுநில வேந்தர் சிலரும் நன்கொடை வழங்கி ஆதரவளித்தனர். தமிழ்ச் சங்கம் சீராக நடைபெறுவதற்குத் தேவையான வாய்ப்புகளை நல்கினார் பாண்டித்துரையார். இத்தமிழ்ச் சங்கத்தின் பணிகளை, நோக்கங்களை இச்சங்க வெளியீடான செந்தமிழ் இதழ் முதல்தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

"நம் தாய்மொழியை வளர்நிலையில் நிறுவும் வள்ளல்கள் யாவரேனும் உளராகாரா என்று தமிழுலகம் அவாவுகின்ற இக்காலத்துத் தமிழறிஞர்க்குப் பெரும்பொருளுதவிச் செந்தமிழ் பெருநூல்கள்

வெளியிடுவித்து மதிநுட்ப நூலோடுடைய புலவர் குழாத்துள் வீற்றிருந்து தமிழாராய்தலையே பேரின்பமாகக் கருதியோரும், நாடெலாம் புகழ்பெற்ற ராஜ்யதந்திர மகாநிபுணருமாகிய இராமநாதபுரம், ஸ்ரீமாந் - பொன்னுசாமித் தேவர் அவர்கள் அருமைப் புதல்வரும், தந்தந்தையார் நல்லொழுக்கம் போற்றி, அத்தமிழாராய்ச்சியிலும் அதனின் வளர்ச்சியிலும் நாளும் முயலும் அருங்கலைவினோதரும், பாலவநத்தம் ஜமீன்தாருமாகிய ஸ்ரீமாந் - பாண்டித்துரைத் தேவரவர்கள், சென்னை மாகாணக் கூட்டம் இம்மதுரைமாநகரிற் கூடியகாலத்து அறிஞர் பலரையும் ஒருங்கு கூட்டி ஓர் பேரவை தொகுத்து, எவ்வாற்றாற்றமிழ் வளர்ச்சி புரியலாகும் என ஆராய்ந்தார்கள். அவ்வவையும் தமிழ்க் கலாசாலை உளவாக்குதலானும், இறவாதுள்ள தமிழேடுகள் பலவற்றையும் அச்சிட்ட தமிழ் நூல்கள் அனைத்தையும் தேடிப்பெற்றுப் பிறர்க்குப் பயன்படுமாறு ஒருவழித் தொகுத்து வைத்தலானும், வெளிவராத அரிய தமிழ்நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டுப் பரவச் செய்தலானும், வடமொழி ஆங்கிலம் முதலிய பிறபாடைக் கண்ணுள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துப் பதிப்பித்தலானும், தமிழ்க்கல்வியைப் பற்றிய பத்திரிகை வெளியிடலானும், தமிழிற் பரிட்சைப் பலவைத்து உயர்தரத்தே தேறியோர்க்குப் பட்டம் பரிசு முதலிய அளித்தலானும், தமிழறிஞரான் உபந்நியாஸங்கள் புரிவித்தலானும், இக்காலைத் தமிழறிவு மிக்கார் பலரையும் ஒருங்கு கூட்டித் தமிழாராய்தலானும், வேண்டும் நூல் உரை முதலியன செய்வித்தலானும், பிறர் செய்த நூல் உரை முதலியவற்றை அரங்கேற்றுவித்தலானும் தமிழினை வளர்த்தலாகும் எனத் தேர்ந்து, முற்காலத்துத் தமிழ் விளைந்த நிலமாகிய இம்மதுரை மாநகரையே இவையெல்லாம் நிகழ்த்துதற்குரிய தலைமையிடமாக்கி மதுரைத் தமிழ்ச் சங்கம் எனப் பெயர் தந்து ஓர் தமிழ்க் கழகம் நிறுவித்துத் தமிழ் வளர்த்ததற்கு முயல்வராயினர்.[5]

பரந்தத் தமிழ் நிலத்தில் ஆங்காங்கே பிரிந்து கிடக்கும் தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஒன்று கூடித் தமிழ் வளர்ச்சி என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட ஒரு தலைமை நிலையமாக இயங்க வேண்டும் என்பது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கமாகும்.

## மதுரைத் தமிழ்ச்சங்க உள் அமைப்புகள்

இச்சங்கத்திற்குக் கல்வியாளர்கள் உதவும் பொருட்டு வித்துவக் கழகம் எனும் கல்விக்கழகம் ஒன்று அமைக்கப்பட்டது. மாணவர்களுக்கு

உணவு, உடையளித்து செந்தமிழ் பயிற்றும் கல்லூரியாக, சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை தொடங்கப்பட்டது. இது கொடைவள்ளல் பாஸ்கர சேதுபதியின் நினைவாக அமைக்கப்பட்டது. பாண்டியன் புத்தக சாலை என்னும் பெயரால் அரிய நூல் நிலையம் நிறுவப்பட்டது. பாண்டித்துரைத் தேவரையும் தமிழுக்குச் சங்கம் அமைத்த பாண்டியரையும் நினைவு கூரும் வகையில் இது உள்ளது. மேலும் மதுரைத் தமிழ்ச்சங்க நூல்களும், பத்திரிகைகளும் வெளியிட ஏதுவாக தமிழ்ச் சங்க முத்திராசாலை எனும் பெயரால் ஒரு பெரிய அச்சுக்கூடமும் நிறுவப்பட்டது.

## வித்துவக் கழகம்

தமிழ் வித்துவான்கள், ஆங்கிலத் தமிழ் வித்துவான்கள், சமஸ்கிருத வித்துவான்கள், ஆங்கில, சமஸ்கிருத வித்துவான்கள் என நால்வகைச் சான்றோர்கள் இக்கழகத்தின் உறுப்பினர்களாகச் செயல்பட்டனர். சங்கம் தொடங்கிய முதல் ஆண்டில் 57 வித்துவான்கள் பங்கேற்றனர். ஒவ்வொரு ஆண்டின் நிறைவு விழாவிலும் இவ்வித்துவான்கள் பலரும் சங்கத்தில் ஒருங்கிணைந்து இதன் முன்னேற்றத்திற்குச் செயல் திட்டங்களை வகுத்தளிப்பது இன்றியமையாத பணியாகக் கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ. குமாரசுவாமிப்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, நா. கதிரைவேற்பிள்ளை, கு. கதிரைவேற் பிள்ளை, திருநெல்வேலியைச் சேர்ந்த தி.ப. சிவராம பிள்ளை, கவிராஜ நெல்லையப்பபிள்ளை, நாகூர் வா. குலாங்கதிறு நாவலர், பெங்களூரைச் சேர்ந்த தி.கோ. நாராயணசாமிப்பிள்ளை, ஸ்ரீகாசிவாசி செந்திநாதையர், ஸ்ரீவில்லிபுத்தூர் ரெ. அப்புவையங்கார் ஆகியோர் கழகத்தில் சேர்ந்த முதல் தமிழ் அறிஞர்களாவர். பின்னர் இதன் உறுப்பினர் எண்ணிக்கை பல்கிப் பெருகியது.

பல வெளிநாட்டு அறிஞர் பெருமக்களும் இவ்வித்துவக் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து தமிழ்ப் பணியாற்றினர். இவர்களுள் பிரஞ்சு நாட்டு அறிஞரும், தமிழ்ப் பற்றாளருமான பேராசிரியர் ஜூலியன் வில்சன் துரையவர்களும், ஸ்டேட்டு செட்டில் மென்ட்ஸ் என வழங்கும் மலயநாட்டுக் கோலாலம்பூரிலுள்ள காரை. கா. சிவசிதம்பரையரவர்களும் சங்க வித்துவான்களாக வெளிநாட்டினின்று வந்து தமிழ்ப் பணியாற்றினர்.

## சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை

சேதுபதி உயர்நிலைப்பள்ளிக் கட்டிடமொன்றில் இக்கலாசாலை இடப் பற்றாக்குறை காரணமாகத் தொடங்கப்பட்டது. இதில் பயிலும்

மாணவர்களுக்கு இலவச உணவு, உடை வழங்கப்பட்டது. இச்செலவினைத் தமிழ்ச் சங்கம் ஏற்றுக் கொண்டது. திரு. நாராயணயங்கார் இக்கலாசாலைத் தலைமையாசிரியராகப் பணியாற்றி வந்தார். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிப்பாடங்கள் நடைபெற்று வந்தன. தேவாரமும், திருவாய்மொழியும் திராவிட வேதமென இக்கலாசாலை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன. இவர்கள் சிந்தனைத் திறனும் சொல்வன்மையும் பெறுவதற்கு வாய்ப்பாகச் செந்தமிழ்ச் சபை ஒன்றை நிறுவித் தமிழ்ச் சான்றோர்களைக் கொண்டும், தாங்களாகவும் சொற்பொழிவாற்றி வந்தனர். ஆண்டுதோறும் தேர்வில் நன்கு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அச்சங்கத்துத் தலைவரான பாண்டித்துரைத் தேவர் தம் சொந்தச் செலவில் தாமே அவர்களுக்குப் பரிசுப் பணமும், புத்தகங்களும் அளித்து வந்தார்.

"பகுத்தறிவாளன்; பாவலர் ஏறு
ஒப்பறு பாண்டியர் உயர்வுற நிறுவிய
முப்பெருஞ் சங்கமும் முறையே மறைந்தபின்
அருந்தமிழ்ப் புலவரை ஒருங்குடன் கூட்டிப்
பெரும்பொருள் வழங்கிய பீடுசால் மதுரையில்
நான்காம் சங்கம் நலமுற நிறுவி
மேன்மைகொள் தமிழை விரும்பிக் கற்பவர்க் (கு)
உண்டியும் உடையும் உறையுளும் ஈந்து
தண்டமிழ் மொழியைத் தானே புகட்டியும்
செந்தமிழ் எனப்படும் திங்கள் இதழை
விந்தைக்குரிய விதத்தில் நடத்தியும்
பாண்டியன் நூலகம் பாங்குற அமைத்தும்,
ஆண்டு விழாவில் அறிஞரைத் திரட்டி
இலக்கிய நயமெலாம் இனிமையின் எடுத்துத்
துலக்குமா றவரைத் தூண்டியும் வேண்டியும்,
ஏடுகள் தொகுத்தும், இனியநன் னூல்களைப்
பீடும் அழகும் பெற வெளியிட்டும்
தேர்வுகள் வைத்தும் தேறினோர் தமக்குப்
பார்புகழ் பட்டமும் பரிசும் கொடுத்தும்
எல்லா வளமும் இயந்த நம் தமிழ்மொழி"[6]

என அ. முத்துசாமிப்பிள்ளை 'பல்கலை ஆயும் பண்புடைக் குரிசில்' எனும் கவிதையில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

## 3. பாண்டியன் புத்தகசாலை

பாண்டித்துரைத் தேவரின் மாளிகையில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஒரு பிரிவான பாண்டியன் புத்தகசாலை இயங்கி வந்தது. இதில் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத நூல்கள் இடம் பெற்றன. அச்சில் வராத பல கையெழுத்துப் பிரதிகளும் இடம் பெற்றன. தமிழ் ஆர்வலர்கள் பலர் இப்புத்தகசாலைக்கு நூல்களை அன்பளிப்பாகத் தந்து உதவினர்.

## 4. தமிழ்ச்சங்க முத்திராசாலை

1902 ஆம் ஆண்டு ஆகஸ்டு 29 ஆம் நாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கெனத் தனியாக ஒரு அச்சகம், தொடங்கப்பட்டது. தமிழ்ச் சங்க முத்திரா சாலை என்ற பெயரில் இந்த அச்சகம் நடைபெற்று வந்தது. தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்பதும், மதுரைத் தமிழ்ச் சங்கப் பத்திரிகையொன்று வெளிவர வேண்டுமென்பதும், சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். அதற்கு வேண்டிய முக்கிய கருவியாக அச்சுக்கூடம் தொடங்கப்பட்டது. அச்சுக் கூடத்தின் செலவினங்களுக்காக, பொதுமக்களின் பணியும் செய்து தரப்பட்டது. செந்தமிழ் இதழ் இங்கு அச்சிடப்பட்டு வெளிவரத் தொடங்கியது.

## செந்தமிழ் இதழ்

தமிழ் இலக்கிய ஆய்விலும், தமிழர், தமிழகம் என்ற நோக்கில் அமைந்த வரலாற்று ஆய்விலும் ஈடுபட்டிருந்த அறிஞர் பெருமக்கள் தாங்கள் அறிந்த உண்மைகளை, புதிய கருத்துகளை வெளியிட ஏதுவாக மதுரைத் தமிழ் சங்கம் 1902 டிசம்பர் 7 ஆம் நாள் செந்தமிழ் என்ற இதழைத் தொடங்கியது. பாண்டித்துரையாரின் இத்தகைய ஆக்கப்பூர்வமான செயல்களுக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தவர்கள் பலர். மு. இராகவய்யங்கார், ரா. இராகவய்யங்கார், நாராயணய்யங்கார், உ.வே. சாமிநாதைய்யர், மறைமலையடிகள், அரசன் சண்முகனார், மு.ரா. சுப்பிரமணியக் கவிராயர், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், ஜே. எம். நல்லுசாமிப் பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை, விபுலானந்த அடிகள், சுன்னாகம் குமாரசாமிப் புலவர், யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை, வெ.கா. சுப்பிரமணிய முதலியார், சோமசுந்தர பாரதியார், எஸ். வையாபுரிப்பிள்ளை, இராமனுசய்யங்கார், கார்மேகக் கோனார், ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை, செல்வக்கேசவராய முதலியார்,

அரங்கசாமி அய்யங்கார், சேலம் நரசிம்மலுநாயுடு, பண்டித நடேச சாஸ்திரியார், அ. மாதவைய்யர், டி.சி. சீனிவாசய்யங்கார், மேலும் பல தமிழ் - ஈழப் பேரறிஞர்கள், சான்றோர் பெருமக்கள் பலரும் பாண்டித்துரைத் தேவரின் அன்பைப் பெற்றவர்கள் என்பதை அவரவர் வாழ்க்கை வரலாறுகளும், பாண்டித்துரையாரின் மீது அவர்கள் இயற்றிய கவிதைகளும், பாராட்டுரைகளும் எடுத்துக் காட்டுகின்றன. பாண்டித்துரைத் தேவரின் தலைமையில் இயங்கிய மதுரைத் தமிழ்ச் சங்க இதழாகிய செந்தமிழின் ஆசிரியராக ரா. இராகவையங்காரும், இவருக்குப் பின்பு நாராயணயங்காரும் ஆசிரியர்களாக இருந்து நடத்தினர்.

## செந்தமிழ் இதழ்க் கட்டுரைகள்

செந்தமிழ் இதழில் இடம் பெற்ற கட்டுரைகள் யாவும் மொழிச் சிறப்பு, தமிழகத்தின் தொன்மை நிலை, தமிழரின் உயர் பண்புகள், பண்பாட்டுச் சிறப்பு ஆகியவற்றை எடுத்துரைப்பனவாக அமைந்தன. “உயர்தனிச் செம்மொழி, செந்தமிழ்த் தெய்வச்சிறப்பு, செந்தமிழ்நாடு, தமிழ்ச் சங்கம், தமிழ் எழுத்துக்களின் பண்டை வடிவு, தமிழர் வீரம், தென்மொழி வல்லார்க்குச் செய்வதோர் விண்ணப்பம், செந்தமிழ்ச் சான்றோர் திருப்பெயர்கள், தமிழ்நாட்டின் பூர்வநிலை முதலிய கட்டுரைகள் முதல் தொகுதியில் வெளிவந்துள்ளன. முதல் இதழிலேயே உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை பரிதிமாற் கலைஞரால் எழுதப் பெற்றதும், பிள்ளை அவரால் தமிழ்மொழி வரலாறு எழுதப்பெற்று அதில் உயர்தனிச் செம்மொழி தமிழ் என நிறுவப்பெற்றதும் தமிழறிஞர்களால் அறியப் பெற்ற செய்திகளே.[7]

செந்தமிழ் இதழ் தொடங்கும் காலத்தில் வடமொழிக் கலப்பற்ற தமிழ் சொற்களைப் பயன்படுத்திச் செய்திகளும், கட்டுரைகளும் இடம் பெற வேண்டும் என்று பாண்டித்துரையார் கருதினார். தொடக்க நிலையில் செந்தமிழ் இதழில் பெரும்பாலும் செந்தமிழ் நடையைப் பின்பற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பாண்டித்துரையாரின் மறைவுக்குப் பின் தமிழ்நடையில் பிறமொழிச் சொற்கள் பரவலாக இடம்பெற்றன. “அதன் தளர்நிலை அவ்விதழ் ஆசிரியராகவும், அதன் பொறுப்பாளர்களாகவும் இருந்தவர்கள் எண்ணத்தின் வண்ணமாகவே ஆயிற்று என்பது விளங்கும்”[8]. ஆனால் செந்தமிழ் இதழின் ஆராய்ச்சித் திறம் பலரையும் வியக்கவைத்தது. அக்கட்டுரைகள் இன்றளவும் நம்முடைய ஆய்வுகளுக்குப் பெருந்துணையாக விளங்குகின்றன.

## செந்தமிழ் இதழில் இடம்பெற்ற கட்டுரைகளின் நூலாக்கம்

செந்தமிழ் இதழில் இடம்பெற்ற ஆராய்ச்சித் திறம் மிக்க கட்டுரைகள் மேலும் விரிவுற்றுத் தனித் தனி நூல்களாக வெளிவந்தன. தவத்திரு மறைமலையடிகள் இயற்றிய **பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை,** கிருட்டிணசாமி ஐயங்காரின் **கடைவள்ளலார் காலம்,** மு. இராகவ ஐயங்காரின் **வேளிர் வரலாறு, சாசனத் தமிழ்க் கவிசரிதம், தமிழரும் ஆந்திரரும்,** இரா. இராகவ ஐயங்காரின் **சேதுநாடும் தமிழும்,** நாவலர் சோமசுந்தர பாரதியாரின் **தமிழ் நூல்களும் தமிழகமும், சேரர் பேரூர்** எனப் பல நூல்கள் செந்தமிழ் இதழில் கட்டுரைகளாக இடம்பெற்று, பின் நூலாக்கம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் மதுரைத் தமிழ்ச்சங்கம் செய்து வரும் பணிகளை அறிக்கையாகத் தயாரித்துச் செந்தமிழ் இதழில் வெளியிட்டு வந்தனர். எடுத்துக்காட்டாக 'நான்காம் வருஷோற்சவ அறிக்கைப் பத்திரம்' எனத் தலைப்பிட்டு அவ்வாண்டில் நடந்த மதுரைத் தமிழ்ச்சங்கப் பணிகளை வெளியிடுவர். "நமது செந்தமிழ் பத்திரிகையிற் சங்க வித்வான்களும் பிறரும் தங்கள் ஆராய்ச்சித் திறனாலும் நுண்ணுணர்வாலுங் கண்ட சிறந்த விஷயங்கள் பலதோன்றித் தமிழகத்தை மகிழ்வூட்டி வருதல் பலரும் அறிந்தது. இதன் பத்திராசிரியராகிய சேதுஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள் இதுகாறும் வெளிவராத அரிய புதிய விஷயங்களும் ஆராய்ச்சிகளும் பலரும் மகிழ எழுதிவருவதோடு, ஏனைய வித்வான்களும் பத்திரிகைக்குப் பல அரிய விஷயங்களெழுதி செந்தமிழ்ப் பெருமையைச் சிறப்பித்து வருகின்றார்கள். இப்பத்திரிகையில், சங்கத்தில் அரிதின் முயன்று தொகுக்கப்பட்ட சிறுநூல்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு வெளிவந்ததோடு, வேறுசில நூல்களும் வெளியிடப் பெறுகின்றன.

இவ்வாண்டில், (முடிந்தவை)

1. திணைமாலை நூற்றைம்பதுரை
2. நான்மணிக்கடிகை பழையவுரை
3. திருச்செந்திற் கலம்பகம்
4. விவசாய ரசாயன சாஸ்திர சுருக்கம்

(முடியாதவை)

5. தொல்காப்பியஞ்செய்யுளியல் நச்சினார்க்கினியர்

6. சுகசந்தர்சன தீபிகை

7. விவசாய நூல்"[9]

என இவ்வறிக்கை வாயிலாகத் தமிழ்ச் சங்கப்பணிகளை மக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். அறிஞர் பெருமக்களின் ஆய்வுக் கட்டுரைகள் தமிழையும், தமிழின வரலாற்றையும் தமிழ் இலக்கியத்தையும் மையமாகக் கொண்டு அமைந்திருந்தன. செந்தமிழ் எனப் பெயரிடப்பட்டிருந்தாலும் வடமொழிச் சொற்கள் கலந்து எழுதும் போக்கே இருந்துவந்தது. இதற்குக் காரணம் அக்காலச் சூழலேயாகும். பிராமணர்கள், பிராமணர் அல்லாதோர் அனைவரும் மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களாக இருந்தனர். வடமொழி ஆதிக்கம் மிகுந்த அக்காலத்தில் வடமொழி கலந்த தமிழ்நடையை எல்லோரும் பயன்படுத்தி வந்தனர். மறைமலையடிகளின் முயற்சி இத்தகைய போக்கிலிருந்து செந்தமிழ் இதழ் விடுபட முயன்றுள்ளது. "தமிழ்ச் சங்கமாம் இனிய வானத்தில் நிறைவுற்ற தண்மதியாய் அடிகள் அறிவொளி பரப்பி நின்றார். தண்ணிய கதிரொளியாம் இனிய சொற்பொழிவுகளால் புலவர் உலகத்தை நிறைத்தார்; உள்ளத்தை மகிழ்வித்தார்"[10] மறைமலையடிகள், திரு. வி.க. போன்று தமிழின் தனித்தன்மையை உணர்ந்த பலரும் வடமொழிச் சொற்களைத் தவிர்த்துச் சிறந்த கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

செந்தமிழ் இதழின் தொடக்ககால ஆசிரியராக விளங்கியவர் ரா. இராகவய்யங்கார். புகழ்பெற்ற பல மொழி அறிஞர்களின் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவ்விதழில் வெளிவந்ததால் இலக்கியக் பெட்டகம் என இவ்விதழ் இன்றும் போற்றப்பட்டு வருகிறது. கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழுக்குத் தேவையான வரலாற்று ஆய்வுகளை வெளியிட்டு வந்துள்ளது அதன் தனிச் சிறப்பாகும்.

செந்தமிழில் வெளிவந்த கட்டுரைகள் அகர வரிசையில் அட்டவணைப்படுத்தப்பட்டுத் தனி வெளியீடாக (Annotated Index to centamil, by Pavoorchatram Rajagopal Subramanian) 1980இல் வெளியிடப்பட்டுள்ளது. வரலாறு, இலக்கியம், அரசியல், சமூகவியல், அறிவியல் ஆகிய துறைகள் தொடர்பான கட்டுரைகளும், பல மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன என்பதை இவ்வட்டவணை மூலம் எளிதாக ஒருவர் அறிந்துகொள்ள முடியும்.

பெ.நா. அப்புசுவாமி இவ்விதழில் அறிவியல் கட்டுரைகள் இடம்பெற வேண்டும் என்ற நோக்குடன் 'இயற்கையும் மனிதனும்' 'லூயிபாஸ்டியர்' போன்ற தலைப்புகளில் கட்டுரை வழங்கியுள்ளார் மு. இராகவையங்கார் எழுதிய 'தமிழரும் ஆந்திரரும்' 'கலிங்கத்துப் பரணியாராய்ச்சி', 'சேரவமிசாவளி', த. இராமநாத பிள்ளை எழுதிய 'யவனர் வரலாறு', இராமநாதையர் எழுதிய 'கருணாகரத் தொண்டைமான் கல்வெட்டுகள்', 'சின்னமனூர் ராஜசிங்கம் சாசனம்', அ. குமாரசுவாமிப் பிள்ளை எழுதிய 'பழந்தமிழ் நூற்சொல்', 'இலங்கைத் தமிழரசர்', மாகறல் கார்த்திகேய முதலியார் எழுதிய 'தமிழ் இயற்கை மொழி' சுவாமி ஞானப்பிரகாசம் எழுதிய '2000 ஆண்டுகட்கு முன்பிருந்த நாட்டெல்லை' மா. இராசமாணிக்கனார் எழுதிய 'சாக்கைக்கூத்து' போன்ற அரிய ஆய்வுக்கட்டுரைகள் இன்றும் நமக்கு அரிய செய்திகளைத் தருவனவாகும். பாண்டித்துரையாரின் முயற்சியால் தோன்றிய நான்காம் மதுரை தமிழ்ச்சங்கத்தின் பணியைப் பறைசாற்றும் ஆவணங்களாகச் செந்தமிழ் இதழ்கள் அமைந்துள்ளன.

மொழித்தொண்டின் வழியே நாட்டின் விடுதலைத் தொண்டையும் இணைத்து ஒரு அமைப்பாக உருவாக்கி இதில் வ.உ.சி., வ.வே.சு. ஐயர், திரு.வி.க., பாரதியார் ஆகியோர் பங்கேற்கும் வாய்ப்பை உருவாக்கியவர் பாண்டித்துரையார்.

## பாண்டித்துரையாரின் செயல்திறன்

பாண்டித்துரையார் தமிழ் மொழிக்கும், தமிழ்க் கல்விக்கும் இடையூறு ஏற்பட்ட போதெல்லாம் உடனடியாக அந்த இடர்ப்பாட்டை நீக்க விரைந்து செயல்படுவார். கர்சான்பிரபு அரசுப் பேராளராக இருந்த அக்காலத்தில் வடமொழி ஆர்வலர்கள் ஒன்று கூடி நாட்டுமொழிகளுக்கு ஏற்றந்தருதல் கூடாது என்றும், அதனைக் கல்லூரிகளில் கற்றுத் தருதல் வேண்டுவது இல்லை என்றும், அவ்வாறு கற்றுத் தருவது வடமொழி போன்ற உயர் மொழிகளை இழிவு செய்தலாம் என்றும் கூறி அரசுப்பேராளர் வரை கொண்டு சென்று சட்டப் பேரவையில் கல்லூரிகளில் தாய்மொழி நீக்கம் குறித்துத் தீர்மானம் கொண்டு வந்தனர். இதை அறிந்த பரிதிமாற் கலைஞரும், மு.சி. பூரணலிங்கம் பிள்ளையவர்களும் இந்த இடர்ப்பாட்டைக் களையும் முயற்சியில் இறங்கினர். மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரையைச் சந்தித்து உரையாடி, கல்லூரிகளில் தாய்மொழி, கட்டாயம் கற்பிக்கப் பெறுதல்

வேண்டும்; நீக்கப் பெறக் கூடாது என்பதை வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

“பாண்டித்துரை தமிழ்ச் சங்கச் செயற்குழுவைக் கூட்டித் தாய்மொழி காக்கத் தாம்செய்ய வேண்டிய பணியை வற்புறுத்தினார். செயற்குழுவினர் ஒரு மனத்துடன் அதனைத் தீர்மானம் செய்தனர். நேரில் சென்று எப்படியும் தாய்மொழிக் கல்வியை ஒழிக்கும் தீர்மானத்தை ஒழித்தே ஆக வேண்டும் என்றும், அதற்குப் பாண்டித்துரையார் சென்னைக்குச் செல்ல வேண்டும் என்றும் செயல்குழுவினர் வலியுறுத்தினர். அதன்படியே தண்ணார் தமிழ்காக்கச் சங்கங்கண்ட ஏந்தல் பாண்டித்துரை, சென்னைக்குச் சென்று அரசியல் வட்டாரத்திலும், அறிஞர் வட்டாரத்திலும் தம் கருத்தை வலியுறுத்தித் தமிழ்ச்சங்கத் தீர்மானத்தை நிலைநிறுத்தினார்.”[11]

இத்தகைய நற்பணிகள் ஆற்றிவரும் இத்தமிழ்ச் சங்கத்தைக் குறை கூறும் போக்கைப் பற்றிப் புலவர் இரா. இளங்குமரன் தமது ‘மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம்’ எனும் நூலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

“பாண்டித்துரைப் பெருமகனாரால் மதுரையில் தோற்றுவிக்கப் பெற்று, ஆயிரம் பிறைகண்டு அதன் மேலும் இனிதின் இயங்கி இணையற்ற பணியாற்றி வரும் இத்தமிழ்ச்சங்கம், நான்காம் சங்கம் என்பதில் சிலர்க்கு இதுகால் ஐயம் உண்டாகிவிட்டது! இரங்கத்தக்க செய்தி இது! ஆனால் இந்நாட்டில் இத்தகு ஐயங்களைக் கிளத்துதலும் அதனை வளர்த்தலும் பொழுதுபோக்குச் செய்திகள்! தமிழர்களை வந்தேறிகள் என்றும், அவர்கள் பேசும் தமிழ்மொழி தானும் ‘திராவிடம்’ என்பதன் திரிபே என்றும் தமிழ்ப் பாண்டியர் ‘பாண்டவர்’ வழிவந்தவர் என்றும் நாடாமல் நாணாமல் கூறிச் செருக்குவார் வழிவழி வந்துள்ள நாட்டில் நான்காம் சங்கம் என்று ஒன்று தோன்றியதும் இல்லை என்பாரும் உளராகலாம்! தமிழ்த் தொண்டைத் தலையான தொண்டாகக் கொண்டவர்கள் கூட மதுரைச் சங்கம், நான்காம் சங்கம் அன்று என்றும் திருச்சிச் சங்கம், தஞ்சைச் சங்கம் போல ஒரு சங்கமே மதுரைச் சங்கம் என்றும் விரித்தும் நகைத்தும் விளம்பி வியக்கிறார் என்றால், தமிழகத்துத் தீயூழ் அவர்களையும் விட்டபாடில்லை என்பது வெளிப்படை என்ற செய்தி காலந்தோறும் இத்தகைய அவதூறுகளை அள்ளி வீசுவோர் உருவாகி வருகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தமிழ்மொழி பற்றிப் பேசவும், எழுதவும், நூல்களை வெளியிடவும் ஒரு தளமாக இருந்தது மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் என்பதை மறந்துவிட முடியுமா? அந்நாளில் பரிதிமாற்கலைஞரும்,

பூரணலிங்கனாரும், பாண்டித்துரையாரும், தமிழ்ச்சங்கமும் காலத்தால் செய்த பணியே கல்லூரியில் இருந்தும் கன்னித்தமிழ், ஒட்டப்பெறாமல் நிலைப்புற வாய்ப்பாயிற்றாம். சங்கப்பணிகளுள் குறிப்பிடத்தக்கது ஈதாம்."[12] தமிழ்ச் சங்கத்தின் மூலம் தமிழறிஞர்கள் ஒருமித்த குரல் கொடுத்துத் தமிழுக்குப் பிறர் ஏற்படுத்திய தடைகளைத் தகர்த்தெறிய முடிந்தது.

பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் காக்கும் நல்லோரைத் தம் கவிதைத் திறத்தால் போற்றிப் பாராட்டுவது அவருடைய தனிப்பண்பு. அவ்வகையில் 'பாண்டித்துரைத் தேவன்' என்ற தலைப்பில் அவர் வழங்கிய கவிதை, தமிழ்ச் சங்கப் பணிகளின் சிறப்பைக் கூறுவதாக அமைந்துள்ளது.

இனியுமோர் தமிழ்ச் சங்கம் காண்பேன்
இருந்த முதலிடை கடைச்சங்கம் போலவே
எனச் சொன்ன பாண்டித் துரைத்தேவன் சொல்லை
இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை
இனியுமோர் தமிழ்ச்சங்கம்

வியந்தது வையம் சென்றநாள் சிலவே
விரிந்தது மதுரைத் தமிழ்ச்சங்க நிலவே
அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்
அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே
இனியுமோர் தமிழ்ச்சங்கம்

புலவர் வகுப்பு மூன்று படைத்தான்
புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்
பல தமிழிலக்கிய மாசு துடைத்தான்
பாண்டித் துரைத் தேவன் புகழ்க்கொடி எடுத்தான்
இனியுமோர் தமிழ்ச்சங்கம்"[13]

என்று பாவேந்தர் எழுச்சிமிக்க, கவிதை வரிகளில் பாண்டித்துரையாரைப் பாராட்டியுள்ளார்.

## தமிழ்ப் பழஞ்சரிதம்

செந்தமிழ் இதழ் ஆறு, ஏழாம் தொகுதிகளில் 'தமிழ்ப் பழஞ்சரிதம்' என்ற தலைப்பில் பாண்டித்துரையார் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். இக்கட்டுரையில் சிந்து சமவெளி நாகரிகம் தமிழர்களுடையது என்றும், ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே அங்கு வாழ்ந்த தமிழர் நாகரிகத்தில் சிறந்து விளங்கினர் என்பதையும் சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

"தமிழணங்கு ஆந்திரம், கன்னட முதலிய சேய்களைப் பிறப்பியாது தனியிளமை பெற்று விளங்கிய காலத்திலே, அந்நங்கை தனக்கு ஆடலரங்கமாகக் கொண்ட பிரதேசம் வடவேங்கடந் தென்குமரியா யிடை யன்று; வடவிமயந்தென்குமரியாயிடையே. அவ்வாறிளமை பெற்றிருந்த தமிழ் பின்பு ஆரியர் படையெடுப்புகளால் அலைப்புண்டு, தன் ஆடலரங்கைச் சுருக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. அன்றியும் அவ்வந்நியரது கூட்டுறவை வெறுத்து அத்தமிழ் நங்கையோடி யொளியுமிடங்கள் பலவற்றில், தான் பெற்ற சேய்களை அங்கங்கே விட்டுப் பிரியவும் நேர்ந்தது. இவ்வாறு தமிழணங்கு தம்மையஞ்சியோடி ஒளிவது கண்ட ஆரியர் அந்நங்கைக்குத் திராவிடம் என்னுங், காரணப் பெயரை வழங்கலாயினர் (திராவிடம் என்னும் மொழிக்கு வடமொழியில் ஓடுதலுடையதென்பது பொருள்) தமிழ்நங்கை ஆங்காங்கே விட்டொழிந்த சேய்மொழிகள் பரதகண்டத்தின் பலவிடங்களிலும் ஆதியிற் றாம்விடப்பட்ட நிலையில் நின்றும் சிறிது மாறுபட்டு இன்றுமுள்ளன. அவையெல்லாம் தம் ஆதித்தாயின் சொரூபத்தையே பெரும்பாலும் கொண்டிருக்கின்றன என்பர். அவற்றுள், பங்காளத்துக்கும் நேபாளத்துக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் வசிக்கும் 'திமல்' என்னும் புராதனமக்கள் பேசும் பாஷை தமிழோடு பெரிதும் ஒத்துள்ளது. இதுவன்றி வடமேற்கு சிந்துநதிச் சமவெளியில் வசிக்கும் ஒரு ஜாதியாரது மொழியும் இராஜ்மஹால் மலைப்பிரதேசத்து வழங்கும் பாஷையும், விந்திய மலையின் கீழ்முனையிலுள்ள நாகப்பூரில் வழங்கும் மற்றொரு பாஷையும் நம்தமிழின் பாகங்களாகவே இன்றும் உள்ளனவென்று தெரிகின்றது. இவ்வரலாற்றால் நாம் தெளிவாக அறிவதென்னவெனில், காலவரம்பு தெரியாத நாளில், தமிழ்மொழி இப்பரதகண்டத்தின் வடபாலிற் பரவியிருந்ததென்பதேயாம். இவ்வாறு கூறுவது சிலர்க்குப் புதுமையாகத் தோன்றுமாயினும், வேறுபல சான்றுகளும் இக்கொள்கையே உண்மையென்பதை வற்புறுத்துகின்றன."[14] இவ்வாறு ஆரியர் கூட்டத்தால் தமிழருக்கு ஏற்பட்ட கேடுகள், தமிழர்களை 'சூத்திரர்' என்று

அடிமைகளாய் இகழ்ந்த நிகழ்வுகள் ஆகியன பற்றி இக்கட்டுரையில் விளக்கமாகப் பாண்டித்துரையார் எடுத்துக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. பாண்டித்துரையார் ஆரியச் சூழ்ச்சியை எடுத்துரைக்கும் அரிய ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்தார் என்பதற்கு அவர் எழுதிய ஒரு சில கட்டுரைகளைச் சான்றாகக் கொள்ளலாம். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வடமொழி ஆதிக்கத்தையும் தமிழர் சிறப்பையும் எடுத்துக் கூறுவது எளிதன்று. பாண்டித்துரையார் அன்றே இத்தகைய கருத்துகளை கூறியிருப்பது வியப்புக்குரியதாகும்.

### மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட நூல்கள்

மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவிய தமிழ்ச்சங்க முத்திராசாலை மூலமாகப் பல தமிழ் நூல்கள் முதன்முதலில் அச்சிட்டு வெளியிடப்பட்டன. கிடைத்தற்கரிய பல தமிழ் நூல்கள் பதிப்பு செய்து வெளியிடப்பட்டன. தமிழ் நூல்களின் உயரிய விளக்கஉரை, ஆய்வு நூல்கள் வெளியிட்டு தமிழ் - தமிழரின் சிறப்பை உலகுக்கு அறிவிக்க முனைந்தது தமிழ்ச் சங்க முத்திராசாலை.

1. ஞானாமிர்த மூலமும் உரையும்,
2. சைவ மஞ்சரி,
3. ஐந்திணையைம்பதுரை,
4. இனியவை நாற்பதுரை - கனா நூல்,
5. புலவராற்றுப்படை (பழையது),
6. நேமிநாதம் (உரையுடன்),
7. திருநூற்றந்தாதி (உரையுடன்),
8. சங்கப்புலவராற்றுப்படையுரை,
9. விவசாய ரசாயன சாஸ்திரச் சுருக்கம்
10. திணைமாலை நூற்றைம்பது உரை,
11. அட்டாங்க யோகக்குறள்,
12. நான்மணிக்கடிகை (பழையஉரை),
13. யாப்பு அணியிலக்கணங்கள்,
14. வில்லிபுத்தூரார் பாரதம் (ஆதி பர்வம் - சபாபர்வம் பல பிரதிகளைக் கொண்டு ஆராய்ச்சிச் செய்யப்பட்டது),
15. திருச்செந்திற் கலம்பகம்,

16. முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்,
17. திருக்குற்றால மாலை,
18. பெருந்தொகை

போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. இங்குக் குறிப்பிடப்பட்ட நூல்கள் 1906 ஆம் ஆண்டு காலத்திலேயே வெளிவந்தவை. இவை செந்தமிழ்ப் பிரசுரம் என்ற பெயரில் வெளிவந்தனவாகும்.

1. வைத்தியசார சங்கிரகம் (இந்நூலுக்குப் பாண்டித்துரையார் முன்னுரை வழங்கியுள்ளார். பின்னிணைப்பில் காண்க)
2. பன்னூற்றிரட்டு,
3. தமிழ்ச் சொல்லகராதி,
4. தொல்காப்பியம் செய்யுளியல் (உரை),
5. தொல்காப்பியம் பொருளதிகார ஆராய்ச்சி
6. திருவருணைக் கலம்பகம்,
7. கலைசைச் சிலேடை வெண்பா,
8. திருவாரூர் நான்மணிமாலை,
9. ஸ்ரீ கிருஷ்ண சரித்ர விமர்சனம்,

ஆகியன சங்கப் பிரசுரங்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல்கள் யாவும் வெளிவர உறுதுணையாய் இருந்தவர் பாண்டித்துரையார்.

"மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்ராஸனாதிபதியும், பாலவனத்தம் ஜமீன்தாருமாகிய இராமநாதபுரம் மகா - ாா - ாா பொ. பாண்டித்துரை ஸாமித் தேவரவர்கள் செந்தமிழ்ப் பத்திரிகையில் மாதந்தோறும் வெளிப்படுத்தும்படி ஏதாவது தமிழ் நூலொன்றை அனுப்பி வரவேண்டு மென்று வற்புறுத்திக் கூறினமையால் அவ்வண்ணம் செய்யத் துணிந்து இம்முறை இதனை வெளிப்படுத்தலானேன்"[15] என்று உ.வே.சாமிநாதையர் தேவையுலா முகவுரையில் எழுதியுள்ள செய்தியால் தெளிவாகும். திருவாரூர் உலா, சங்கர நயினார் கோயில் அந்தாதி, சிராமலைக் கோவை, கலைசைக் கோவை முதலிய நூல்கள் இவ்வகையில் வெளிவந்தன.

பாண்டித்துரையாரின் வேண்டுகோளை ஏற்ற தமிழறிஞர்கள் பலரும் ஆராய்ச்சித் திறன்மிக்க நூல்களை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்

வாயிலாக வெளிப்படுத்தி வந்தனர். மேலும் செந்தமிழ் இதழில் தொடர்ச்சியாக இடம் பெற்ற கட்டுரைகள் நூலாக்கம் பெற வழி ஏற்பட்டது. மொழிபெயர்ப்பில் தொடர்ச்சியாக இடம் பெற்றவைகளும் பின்னாளில் தமிழில் நூல்களாக வெளியிடப்பட்டன.

"மூலைதனில் கிடந்த ஓலை முழுவதுமே திரட்டிவந்து
நூலாக்கிக் கல்வெட்டாய்! நிலவிடும் சாலை கண்டான்!
தண்வைகைப் பெருமணல்போல்! தளிர் ஆலின் விழுதினைப்போல்
மண்காணாப் பன்னூலைப் பசும்பொன் போல் பாதுகாத்தான்
எள்ளுக்குள் எண்ணெயைப்போல் இருந்தமிழின் அருங்கருத்தை
அள்ளியேதான் தந்திடவே 'செந்தமிழ்' மலர்வித்தான்,"

எனவும்

"தமிழகம் தமிழ்மொழி தமிழர்கள் எனுஞ்சொல்
அமிழ்தெனப் பரவிட ஆர்வம் மிகுந்திட
மாமது ரைப்பதி மாண்பெலாம் வளர்வுறப்
பூமண் டலமெலாம் போற்றிடும் நான்காம்
சங்கமே கண்டாய் தமிழ்ப்பாண் டித்துரைச்
சிங்கமே! நின்பணித் திருஉளம் போற்றுதும்."[16]

என்று கவிஞர் பெருமக்கள் பாராட்டியுள்ளனர். தமிழ்ச்சங்க நூலகத்திலிருந்த அரிய பல தமிழ்ச் சுவடிகள் நூல் வடிவம் பெற்றன. நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, புறத்திரட்டு, கம்பராமாயணச் சுவடிகள் நூலாக்கம் பெறச் சங்கச் சுவடிகள் துணையாயின. மேலும் "ஐந்திணை ஐம்பது, இனியவை நாற்பது, கனாநூல், புலவராற்றுப்படை, நேமிநாதம், திணைமாலை நூற்றைம்பது, பன்னிருபாட்டியல், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, மதுரைத் திருப்பணிமாலை, நல்விருத்தம், மாறனலங்காரம், திருப்புல்லாணிமாலை, பொருட்டொகை நிகண்டு, அகராதி நிகண்டு இன்ன பல நூல்களெல்லாம் சங்கச் சுவடிகளைக் கொண்டு ஆய்ந்து வெளிப்பட்டனவேயாம்."[17] இத்தகைய அரிய பணிகளைச் செய்து வரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு மேலைநாட்டு அறிஞர்கள், மொழியியல் ஆய்வாளர்கள் பலர் வருகை புரிந்துள்ளனர்.

* * *

## குறிப்புகள்

1. தவத்திரு ஞானியார் அடிகள், வெள்ளையாம்பட்டு சுந்தரம், சேகர் பதிப்பகம், மு.ப. ஜூலை 1972, ப. 37 - 39.
2. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார் (பதி) டி. ஜி. கோபால்பிள்ளை, சென்னை, பதி. 1951, 83 - 84.
3. மேற்படி, ப. 86 - 87
4. செந்தமிழ், தொகுதி 1, பகுதி. 1, 1902, பக். 2.
5. மேற்படி ப. 8.
6. செந்தமிழ் (கவி), பல்கலை ஆயும் பண்புடைக் குரிசில், அ. முத்துசாமிப் பிள்ளை, தொகுதி 6, பகுதி 3, மார்ச் 1967.
7. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், இரா. இளங்குமரன், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை. பதி. 1982. ப. 99
8. மேற்படி ப. 99
9. செந்தமிழ், தொகுதி 3, மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், வருஷோற்சவத்தின் அறிக்கைப்பத்திரம், மதுரை, 1905
10. மறைமலையடிகள் வரலாறு, மறை-திருநாவுக்கரசு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதி. 1959, ப. 101-102.
11. மேற்படி
12. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், இரா. இளங்குமரன், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை. பதி. 1982. ப. 154
13. பாரதிதாசன் கவிதைகள், (தேனருவி) தொகு, ஆர். திருவாசகன், சுரதா கல்லாடன், அருள்சுடர் பதிப்பகம், சென்னை, செப். 1993, ப. 1079.
14. செந்தமிழ், தொகுதி 6, (கட்) தமிழ்ப்பழஞ்சரிதம், பாண்டித்துரைத் தேவர், ப.4-5.
15. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், புலவர் இரா. இளங்குமரன், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, பதி - 1987. ப. 98.
16. செந்தமிழ், தொகுதி 70, பகுதி 4, பாண்டித்துரைத் தேவர் நினைவுச் சிறப்பிதழ், டிச. 1975, ப.25.
15. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், புலவர் இரா. இளங்குமரன், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, பதி - 1987. ப. 104-105.

# 7. பாண்டித்துரையாருடன் மறைமலையடிகளும், வ.உ. சிதம்பரனாரும்

## பாண்டித்துரையாருடன் மறைமலையடிகள்

பாண்டித்துரையார் மறைமலையடிகளின் தமிழ்ப் பணியைப் போற்றி அவருக்கு அவ்வப்போது ஊக்கமும், உற்சாகமும் அளித்து, மதுரைத் தமிழ்ச் சங்க விழாக்களில் சொற்பொழிவாற்ற அழைத்துச் சிறப்புச் செய்தார். மறைமலையடிகள் ஆரிய நாகரிகத்தின் இழிவையும் தமிழர் நாகரிகத்தின் உயர்வையும் பற்றி உரையாற்றிய பொழுது பாண்டித்துரைத் தேவர் அளவிலா மகிழ்ச்சியடைந்தார்; பெரிதும் பாராட்டி உள்ளம் பூரித்தார். ஆனால் பார்ப்பனப் புலவர்களுக்கு இது பொறுக்கவில்லை அந்த ஆரியப் புலவர் கூட்டம் செய்த சூழ்ச்சி மறைமலையடிகள் வரலாற்று நூலில் இடம்பெற்றுள்ளது. **'மதுரைத் தமிழ்ச்சங்க நான்காம் விழாவும் தமிழர் நாகரிகப் போராட்டக் கொடி ஏற்றமும்'** என்ற தலைப்பில் இந்நிகழ்ச்சி விளக்கப்பட்டுள்ளது.

கடந்த பல நூற்றாண்டுகளாக வடமொழியே தெய்வமொழி; தமிழ் நீசமொழி; வடமொழியே உயர்ந்தது; தமிழ் தாழ்ந்தது; அரிய நூல்கள் யாவும் அந்தணர்கள் இயற்றியது; ஆரிய நாகரிகமே சிறந்தது என்ற கருத்திலேயே புலவர்கள் பலர், மதுரைத் தமிழ்ச் சங்க நான்காம் விழாவிலும் கூறியுள்ளனர். தொல்காப்பியர் பிராம்மணராவார், ஆதலால் தமிழர் ஆரியருக்குக் கடமைப்பட்டவர் என்று குறிப்பிட்டார். கனகசபை பிள்ளை மட்டுமல்லாமல் அக்காலத்துப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் அப்படியே எழுதியும், பேசியும் வந்தனர். அகத்தியர்தாம் தமிழுக்கு இலக்கணஞ் செய்தார். அவர் பிராம்மணர். தொல்காப்பியரின் இயற்பெயர் திரணதூமாக்கினி. அவர் பிராம்மணர். திருவள்ளுவர் கூட, பகவன் என்னும் பிராமணன் மகன்தான். தமிழில் வேதங்கள் இல்லை. வேதங்கள் யாவும் வடமொழியில்தான் இருக்கமுடியும் என்ற பார்ப்பனப் பொய்க்கதைகளை ஆராயாமல் எல்லோரும் நீண்ட காலமாக அப்படியே ஒப்புக் கொள்ளும்படி எடுத்துக் கூறிவந்தனர். பாண்டித்துரையார் இக்கருத்தை மறுக்கும் வகையில் மறைமலையடிகளைப் பேசுமாறு அன்புடன் கேட்டுக் கொண்டார். மறைமலையடிகள் "தமிழர் நாகரிகத்தின் பழமை, சிறப்புகளைச்

சான்றுகளுடன் விளக்கினார். ஆரிய நாகரிகத்திற்கும், பிராம்மணர்களுக்கும் தமிழர்கள் கடமைப்பட்டிருக்கவில்லை என்று முழங்கினார். ஆரியர்களாலும், பிராம்மணர்களாலும் தமிழ் பாழ்பட்டது. தமிழர்கள் இழிக்கப்பட்டனர் என்றார். இவ்வீர விரிவுரைகளைக் கேட்ட பிராமணரல்லாத புலவர்கள், அறிஞர்கள், அடிகள் கூற்றுக்களை ஏற்று ஆரவாரஞ் செய்தனர்; கிளர்ச்சியடைந்தனர். அடிகளைப் பலபடி பாராட்டிப் பேசினர். பாண்டித்துரை தமிழ் மறவரல்லவா? அடிகளின் உணர்ச்சி உரைகள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. எழுச்சியுடன் அடிகளைப் பாராட்டினார். இரண்டாம் நாள் விழா 25-5-1905 தமிழ்ச் சங்க விழாக் கூடியது. பாண்டித்துரையும் பிராமணரல்லாத புலவர்களும் விரும்பிக் கேட்டுக் கொண்டபடி அடிகள் 'பண்டைக்காலத் தமிழர் - ஆரியர்' என்று சான்றுகள் நிறைந்த ஆராய்ச்சி மிக்கதோர் - நாவன்மை சிறந்ததோர் பேருரை நிகழ்த்தினர். அதில் ஆரிய நாகரிகத்தின் இழிவையும் தமிழர் நாகரிகத்தின் உயர்வையும் அடிகள் விளக்கி உரைத்தனர். பேச்சு நிகழும்போதே அதன் அருமை பெருமைகளில் ஈடுபட்ட புலவர் சிலர் அடிகளின் மாட்சிமைப் பற்றிப் பாடல்களியற்றினர். அடிகளின் பேச்சு முடிந்தவுடன், பிராமணரல்லாத அப்புலவர்கள் தாம் யாத்த பாடல்களை அந்த அவையிலேயே படித்து விளக்கி அடிகளைப் பாராட்டி மகிழ்ந்தனர். அடிகளின் பேச்சில் பாண்டித்துரையார் பெரிதும் ஈடுபட்டார்; உணர்ச்சியுங் கொண்டார். பிராமணப் புலவர்கட்கு இது பொறுக்கவில்லை. இவற்றை எல்லாம் உணர்ந்த பாண்டித்துரையார் கூட்டம் முடிந்தவுடன் தம்மிருப்பிடத்தில் அடிகளுக்குத் தம்முடன் இருக்கை தந்து அளவளாவினார். அப்போது அந்தணப் புலவரிற் சிறந்தார் ரா. இராகவைய்யங்காரிடம் தம் சமஸ்தானப் புலவர் என்ற முறையிலும், வயதில் அவரை விடத்தாம் மூத்தவர் என்ற முறையிலும், என்ன ராகவா! வேதாசலம் பிள்ளை பேசியன சரிதானே! ஒப்புக் கொள்கின்றாயா? அவர் கூறும் சான்றுகளை மறுக்கமுடியுமா? என்றார் பாண்டித்துரையார். ஐயங்கார் தாம் ஒப்ப முடியாது என்று பணிவுடன் கூறிவிட்டார் பாண்டித்துரையார் சினங்கொண்டார். சீற்றத்துடன் ஐயங்காரைப் பலபடி ஏசிவிட்டார். அடிகள் பாண்டித்துரையாரை அமைதிப்படுத்தினார். ஐயங்கார் அவ்விடம் விட்டு நீங்கியபின், பாண்டித்துரையிடம் அடிகள் தாங்கள் அவர்களை இப்படிப் பேசியதைக் கேட்டு மிகவும் வருந்துகின்றேன். என் போன்ற புலவர்களை - என் எதிரில் இப்படி இகழ்ந்தது என்னை இகழ்ந்தது போல வருந்துகிறேன். அவர் சிறந்த கல்விமானாயிற்றே! உங்கள் சமஸ்தான ஊழியராக இருக்கலாம். அதற்காக இப்படி எல்லாம் இகழ்வது தக்கதன்று என்று உணர்ச்சி ததும்பக் கூறிவிட்டார்.

தேவர், "நீங்கள் கூறுவதுண்மை. நாங்கள் இளமை முதல் இப்படிப் பேசிப் பழகிவிட்டோம். அவர் என் சின உரைகளுக்கு வருந்தார்'' என்று அடிகளுக்குப் பலபட அமைதி கூறினார்.[1] இந்நிகழ்ச்சி பாண்டித்துரையார் ஆரியத்தின் ஆணவத்தை ஒடுக்க வேண்டும்; தமிழர் நாகரிகம் உயர்ந்தது என்பதை உலகோர் அறியச் செய்ய வேண்டும் என்பதில் அளவிலா நாட்டமுடையவர் என்பதைக் காட்டும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் மறைமலையடிகள் தொடர்ந்து பணியாற்ற முடியாத அளவுக்குப் பிராமணப் புலவர்கள் குழப்பம் விளைவித்து மனக்கசப்பை உருவாக்கினர்.

மதுரைத் தமிழ் சங்க ஏழாம் ஆண்டு விழா 24.5.1908ஆம் நாளில் நடைபெற்றது. இரண்டாம் நாள் விழாவிற்குப் பாண்டித்துரையார் தலைமையேற்றார். மறைமலையடிகள் 'குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி' பற்றியும், மூன்றாம் நாள் கூட்டத்தில் 'இறையன்பு' பற்றியும் ஆங்கிலத்தில் தாம் இயற்றிய பாக்களைப் படித்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். ஏனையோரை விட மறைமலையடிகள் மதுரைத் தமிழில் சங்கத்து நான்கு விழாக்களிலும் கலந்து கொண்டு, அரிய உரைகளாற்றி அனைவரின் பாராட்டைப் பெற்றதுடன், தமிழ்ச் சங்க நிறுவனர் பாண்டித்துரையாரின் தனித்த அன்புக்குரியவரானார் என்பதால் பல பிராமணப் புலவர்களுக்குப் பொறுக்கவில்லை.

"தண்மதியால் மகிழாது தாமரை கூம்பிவிடுவது போலப் பொறாமைப் புலவர் சிலர் மனங் கூம்பினர். அத்துடன் சாதிவெறியுங் கூடிக் கொண்டது. பழமையில் நலங்காணாது பசையற்ற பொருளைப் பற்றிக் கொண்ட வைதீகப் புலவர்களின் மனமும் சரியில்லை. அடிகளின் அரிய கருத்துரைகளால் பயன் பெறாது பொய்க்கதைகளை நம்பி அவற்றைப் போற்றாத அடிகளை இகழ்ந்து கலகம் விளைத்தனர். இவை எல்லாம் உணர்ந்த அடிகள் தனித்திருந்தே தன் ஆய்வுக்கருத்துக்களை வளர்ப்பதெனக் கருத்துட் கொண்டார். அதனால் அடிகள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தொடர்பை இவ்வாண்டுடன் முடித்துக் கொண்டார். ஆனால், பாண்டித்துரையுடன் அடிகளாரின் நட்பு மேலும் மேலும் வளர்ந்தது. மதுரைத் தமிழ்ச் சங்க விழாவினால் அடிகள் புத்துணர்ச்சி கொண்டார். தமிழ் மொழியும், தமிழர் நாகரிகமும், தமிழர் சமயமும்

பழிக்கப்படுவதை, இகழப்படுவதை எதிர்க்கும் வீரரானார். தமிழர் சிறப்பை நிலைநாட்டுவதைக் கங்கணங் கட்டிக் கொண்டார். அடிகளின் இவ்வுறுதியால் எழுந்ததுதான் இன்றைய தமிழ் எழுச்சியும் வளர்ச்சியும்."[2]

மறைமலையடிகள் வரலாற்றில் பாண்டித்துரையாரும் மதுரைத் தமிழ்ச் சங்கமும் ஒரு திருப்புமுனை எனக் கூறலாம். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பார்ப்பனர்களின் ஆணவப் போக்கையும், பார்ப்பனீயத்தையும் கடுமையாகவும் அதே வேளையில் தகுந்த சான்றுகளுடனும் மறைமலையடிகள் எடுத்துக் கூறி வந்தார். தமிழரைச் சூத்திரர் என்று இழித்துரைத்த பார்ப்பனீயத்தை ஒழித்துக்கட்டுவதுதான் தமது முதல்வேலை எனக் கொதித்தெழுந்தார். "சூத்திரர் என்னுஞ்சொற்குப் பொருள் அநாகரிகன் - அறிவிலி - அடிமை - குற்றேவலன் - வேசைமகன் - போரில் சிறைபிடிக்கப்பட்டவன் - குற்றவாளி என்பனவாம். சற்சூத்திரர் என்றால் நல்ல அநாகரிகன், நல்ல முட்டாள் என்று பொருள்படும். இப்படியே ஏனை ஐந்து சூத்திரர் என்ற சொல்லின் பொருளுக்கு முன் சத் - நல்ல என்ற சொல்லைக் கூட்டிக் கொள்க. நல்ல என்பதைக் கூட்டுவதால் இழி பொருள்கள் உயர்ந்து விடுமா? இவ்வேடிக்கைப் பொருள்களை எல்லாம் எடுத்துக் காட்டி அடிகள் அசல் சூத்திரச் சொல்லையும், சத் சூத்திரச் சொல்லையும் நகைத்தார்; எரிச்சலுற்றார்; சினமும் கொண்டார். இனித் தமிழ் மக்களை இவ்வாறழைப்பதைப் பொறுக்கப்படாதென்றார். அக்காலத்தில் பிராமணர்கள் பலர் அடிகளின் 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்ற நூலின் கருத்துக்களை எல்லாம் ஏற்கவில்லை. பார்ப்பனரல்லாதவர்கள் ஏற்றுக்கொண்டு கிளர்ந்தெழுந்தனர். தங்களைச் சூத்திரர் என்னும் பிராம்மணர்கள் மீதும், அவ்வகுப்பார் மீதும் ஆத்திரங்கொண்டனர். அடிகளின் புரட்சி நூல் தமிழகத்தில் அமைதியான ஒரு பெரும் கருத்துப் புரட்சியை, கிளர்ச்சியைத் தூண்டிவிட்டது."[3] இத்தகைய மாற்றத்தை உருவாக்கவும், மறைமலையடிகள் வெகுண்டெழுந்து பார்ப்பனர்களுக்கு எதிராகப் போர்க் குரல் எழுப்பவும் காரணம், பாண்டித்துரையாரும் அவர் நிறுவிய மதுரைத் தமிழ்ச் சங்கமும்தான் என்பதைத் தமிழ் உலகம் அறிந்து கொள்ள வேண்டும்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டது போல, மொழியாக்கப் பணிகளுக்கு அடிப்படையாக இருக்கும் வகையில், தமிழில் சிறந்த அகராதிகளை வெளியிட வேண்டும் என்று முடிவெடுத்தது. இதற்கெனப் பாண்டித்துரையார் தலைமையில் 25.5.1904 ஆம் நாள் ஆய்வுக்குழு கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் தமிழிற்குச்

சிறந்த அகராதி ஒன்றில்லாததால் அவ்வகராதி வேலையைச் சங்கத்தார் தொடர வேண்டும் என்றும், அவ்வாறு தொடங்குவதற்கு முன்பு பல தமிழ் நூல்களையும் ஆராய்ந்து அரும்பதங்களை இடங்காட்டித் தொகுத்துக் கொள்ள வேண்டும், என்றும் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் எதிர்பாராவகையில் அறிஞர் கதிரைவேற் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்த அகராதி, தமிழ்ச்சங்கச் சொல்லகராதியாகக் கதிரைவேற் பிள்ளை தமிழகராதி (Kadiravel Pillai's Tamil Dictionary) என்ற பெயருடன் வெளிவந்தது.

**தமிழ் அகராதி தந்த அறிஞர்**
**வல்லுவெட்டி கு. வைமன் கதிரைவேற்பிள்ளை (1829-1904)**

பன்மொழித்திறமும், ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவும் பெற்ற கு. கதிரைவேற் பிள்ளை மேலைநாட்டுப் பேராசிரியர்களான பிறெக்கென்ஸ், றிட்ஜ், டான்வொர்த், றைஸ், லீ, வைமன், ஹோசிங்ரன் போன்றோரிடம் கல்வி கற்கவும், பழகவும் வாய்ப்புப் பெற்றவர். தனது மதிப்பிற்குரிய பேராசிரியர் வைமன் மீது கொண்ட அன்பினால் அவர் பெயரைத் தம் பெயரோடு இணைத்து வைமன் கதிரைவேற்பிள்ளை என வழங்கினார். காலத்தையொட்டிப் பிறமொழிகள் புதிய வளர்ச்சி காணுவதுபோல் தமிழிலும் வளர்ச்சி காண வேண்டும் என்ற நோக்குடன், சொல்லுக்குச் சொற்பொருள்தரும் செந்தமிழ் அகராதி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று பேராவல் கொண்டு அம்முயற்சியில் ஈடுபட்டார்.

சட்டத்துறையில் நீதிபதியாகப் பணியாற்றிய கதிரைவேற் பிள்ளையவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் தமிழ் அகராதிப் பணியை தொடங்கத் திட்டமிட்டார். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், வல்வெட்டி ஆறுமுகம் பிள்ளை. நல்லூர் சரவண முத்துப்பிள்ளை, ஆகியோரை அழைத்துத் தமிழகராதி தொகுக்கும் பணியில் ஈடுபட்டார். இந்த அகராதிப் பணி முடியும் முன்பே கதிரைவேற்பிள்ளை 14.4.1904 ஆம் நாளில் நல்லூரில் இயற்கையெய்தினார். எனவே அவ்வகராதி அகரவரிசையோடு நின்றுபோனது. கதிரைவேற்பிள்ளையின் மகன் அப்புக்காத்தர் க. பாலசிங்கம் இதை முதற்பகுதியாகக் கொண்டு அதற்கு ஒரு முன்னுரை எழுதி மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவரான பாண்டித்துரையாரிடம் வெளியிடுமாறு கேட்டுக்கொண்டார். அகராதி அரைகுறையாக இருந்த போதிலும், இப்பணி தொடர்ந்து செய்ய ஒரு வழிகாட்டியாக அமையும் என்று நோக்குடன் பாண்டித்துரையாரும்,. மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்களும் சேர்ந்து 1910ஆம் ஆண்டில் கதிரைவேற் பிள்ளைத் தமிழகராதி என்ற பெயரில் அச்சிட்டு

வெளியிட்டனர். திருவாவடுதுறை ஆதீன வித்துவானும் மதுரைத்தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகருமான சே.ரா. சுப்பிரமணியக் கவிராயரால் பரிசோதிக்கப் பெற்றுத் தமிழ்ச்சங்க முத்திராசாலையில் பதிப்பிக்கப் பெற்றுத் தமிழ்ச் சங்கத்தின் எட்டாவது வெளியீடாக வெளிவந்தது. அதன் மூன்று பகுதிகளும் தனித்தனியே வெளியிடப்பட்டன. முதல் இரு பகுதிகளும் 1910 ஆம் ஆண்டு, 1912 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. மூன்றாம் பாகம் பத்தாண்டுகள் கழித்து 1923 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதற்கான காரணத்தைப் பதிப்பாசிரியர் மூன்றாம் பகுதி அகராதியின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பு பல இடையூறுகளுக்கிடையே இப்பகுதி வெளிவந்துள்ளமையும், பதிப்பாசிரியரின் உழைப்பையும் எடுத்துக்காட்டுவதாகும்.

"இவ்வகராதியின் முதல் இரண்டு பாகமும் வெளியிட்டபின் யான் திருவாவடுதுறை யாதீனத்திற் பல ஆண்டு தங்கியிருக்க நேர்ந்தமையாலும், மறுபடி யான் இங்குவந்து இம்மூன்றாம் பாகத்தை விரைவில் வெளியிடக் கருதி அச்சிட்டு வருங்கால் 1920 ம் ஹூ ஜூன் மீ 20 வ சங்கத்தில் நேர்ந்த தீ விபத்தில் இம்மூன்றாம் பாகத்தில் தா-முதல் 'ந'கரம் வரையுள்ள அச்சிட்ட பாகம் தவிர அச்சிடுவதற்குப் பரிசோதித்து வைத்திருந்த அசலும் நகலும் ஆகிய காகிதக் கையெழுத்துப் பிரதிகள் முழுவதையும் இழந்துவிட்டமையாலும் ப,ம,ய,வ என்ற அகர வர்க்கச் சொற்களடங்கிய அவ்விழந்த பாகத்தைப் புதிதாய்த் தேடிச் சேர்த்துப் பரிசோதித்து வெளியிடத் தொடங்கிய பொழுது, நம் சங்க அச்சியந்திர சாலையில் வேண்டிய எழுத்துக்கள் போதுமான அளவு வாராதிருந்தமையாலும், பின் இப்புத்தகம் அச்சிடுவதில் எனக்கு உதவியாயிருந்தவர் விலகிக் கொண்டமையால் யான் ஒருவனே சொற்களைத் தேடிப் பொருள் கண்டெழுதுதல், ஒப்பு நோக்குதல், திருத்துதல், எழுதுதல் முதலிய எல்லா வேலைகளையும் கவனிக்க வேண்டியிருந்தமையாலும் இதனை வெளியிட இத்தனையாண்டு தாமத மேற்பட்டதென்பதை மிக்க விசனத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்."[4] பின்னாளில் 'மதுரை கோபாலகிருஷ்ணகோன் பேரகராதி' என்னும் பெயரில் ஒரு பெரும் அகராதி வெளிவர மூல ஊற்றாக இருந்தது கதிரைவேற்பிள்ளையின் அகராதி என்பதை 'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்' என்னும் நூலில் பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சோமசுந்தர பாரதியார் (1879-1959)

தமிழ்மொழி வளர்ச்சிக்கென இந்நூற்றாண்டில் பாடுபட்டவர்களில் பைந்தமிழ் காக்கும் பாரதியார் எனப் போற்றப்பட்டவர் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

பாரதிர்ந் தெழுந்து யார்யாரெனக் கேட்குமா(று)
ஊரெழுந் தோடிஎம் உயிரெனக் கூறுமா(று)
ஏறெழுந் தன்னஎம் பாரதி எழுந்துசொல்
மாரிபெய்வான்,. புனல்மாரி பெய்வான்என,
மாத மும்மாரி இம்மண்ணிடைப் பொய்ப்பினும்
நாத மும்மாரி நடாத்துவான்[5]

என நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழ்த் தொண்டினைக் கண்ணதாசன் பாராட்டியுள்ளார். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலராகவும், தமிழகப் புலவர் குழுவின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். 1932-33 இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இவர் செயலாளராகப் பணிபுரிந்த காலத்தில்தான் நெருப்பினால் அழிவுற்ற மதுரைத் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தின் ஒரு பகுதி புதுப்பிக்கப்பட்டது. மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான செந்தமிழ் இதழில் ‘தசரதன் குறையும் கைகேயி நிறையும்’, ‘திருவள்ளுவர்’, ‘ஜாதிமத வேற்றுமையும் சமுதாய ஒற்றுமையும்’, ‘கிழமையும் கடமையும்’, ‘அழகு’, ‘தமிழும் தமிழரும்’, ‘சேரர் தாயமுறை’, ‘மெய்ம்மை’, ‘பெண்மை’, ‘ஓர் எதிருரை’, ‘காதல்’, ‘குறிப்புக்குப் பின்குறிப்பு’ ஆகிய தலைப்புகளில் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

செந்தமிழ் இதழில் வெளிவந்த இக்கட்டுரைகள் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றன. ஆகையால் ‘தசரதன் குறையும் கைகேயி நிறையும்’, ‘திருவள்ளுவர்’, ‘சேரர் தாயமுறை’ ஆகிய கட்டுரைகள் பின்னாளில் விரிவாக்கம் செய்து நூல்களாக வெளியிடப்பட்டன. நாவலர் சோமசுந்தர பாரதியார், முதுகலை மாணவர்களுக்காக எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்று சோமசுந்தர தேசிகரால் ‘தமிழ் நூல்களும் தமிழகமும்’ என்னும் பெயரால் மொழிபெயர்க்கப்பட்டுச் செந்தமிழ் இதழில் பன்னிரண்டாம் தொகுதியில் வெளிவந்துள்ளது. திருவள்ளுவர் என்ற கட்டுரையை நூலாக்கம் செய்து, 1929 இல் மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ளது.

'சேரர் பேரூர்' என்ற தலைப்பில் நாவலர் எழுதிய ஆராய்ச்சிக்கட்டுரை, முதலில் செந்தமிழ் இதழில் வெளிவந்து 1917 இல் நூலாகவும் இவரால் வெளியிடப்பட்டது. இவர் எழுத்தும், பேச்சும் தமிழோடு, தமிழரோடு, தமிழ்ப் பண்பாட்டோடு தொடர்புடையனவாகும்.

"தமிழனுக்கு உண்டாகியுள்ள தமிழறியாமையாகிய நோயால், ஜன்னி பிறந்து தக்கபடி, தமிழன் என்ற உணர்ச்சி மருந்தைச் செலுத்திச் சிகிச்சை செய்யாவிடின், தமிழ்ப்பான்மை தளர்ந்து சோர்ந்து, தமிழன் என்னும் தகுதிப்பாட்டில் செத்துமடிவான் என்பது நிச்சயம்" என திருவத்திபுரத்தில் நடந்த வடஆற்காடு மாவட்டத் தமிழர் மாநாட்டுத் தலைமையுரையில் குறிப்பிட்டுள்ளார். "நான் இன்னும் வாழவிரும்புகிறேன். காரணம் இன்னும் தமிழுக்குத் தொண்டு செய்யவும், தமிழுக்குக் கேடு பயப்பவர்களை விரட்டியடிக்கவும்தான்"[6] என்று மதுரைத் தமிழன்பர்கள், நாவலர் பாரதியார் 80 ஆம் ஆண்டு நிறைவு விழாவை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் மாவட்ட நடுவர் மகராசபிள்ளை தலைமையில் சிறப்புறக் கொண்டாடி வெள்ளிக்கலம் ஒன்றினைப் பரிசாக வழங்கியபோது நன்றியுரையில் நாவலர் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டித்துரையார் தொடங்கிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டு அதன் செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்தார். தமிழ்ச் சங்க உறுப்பினராகவும், ஆட்சிக்குழு உறுப்பினராகவும் கட்டடக் குழு உறுப்பினராகவும், புலமை வித்தகராகவும் நாவலர் சோமசுந்தரபாரதியார் செயல்பட்டார். "கரந்தைத் தமிழ்ச் சங்க ஒன்பதாம் ஆண்டுவிழாத் தலைமையேற்று அவர் உரை நிகழ்த்தியபோது, அவர் கொண்டு வந்த தீர்மானங்களுள் ஒன்று தமிழ்ச் சங்கம் பற்றியதாகும். உண்மையான தமிழ்த் தொண்டுகள் பல செய்துவரும் தமிழ்ச் சங்கத்திற்குத் தீயினால் விளைந்த இடையூறுக்காகப் பெரிதும் உளங்கவல்வதோடு அச்சங்கத்தை நன்னிலையில் உய்ப்பதற்காகத் தம்மாலியன்ற உதவி செய்யும்படி தமிழன்பர் எல்லாரையும் இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக் கொள்கின்றார்கள் என்பது தீர்மானம்"[7]. மதுரைத் தமிழ்ச் சங்கப் பணிகள் தொய்வின்றி செயல்பட நாவலர் சோமசுந்தர பாரதியார் தம்மாலியன்ற முயற்சிகள் அனைத்தையும் நல்கிவந்தார்.

**மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பாரதியார்**

1904ஆம் ஆண்டு பாரதி எட்டயபுர சமஸ்தானத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபொழுது "பிறவிக் கவிஞரான பாரதி, எட்டயபுர சமஸ்தான

அரசருடன் ஒற்றுமை குறைந்து, வேறு எங்கேனும் சென்று வேலை தேடலாம் என்றெண்ணிச் சேற்றூர் முதலான ஊர்களுக்குச் சென்று மதுரையை வந்தடைந்தார். மதுரை வந்த பாரதிக்கு, அந்நகரின் சேதுபதி ஹைஸ்கூலில் தமிழாசிரியராகப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது. மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் பணியிலும் பாரதி நெடுநாள் நீடிக்கவில்லை. சுமார் மூன்றுமாத காலமே அங்குப் பணியாற்றினார்"[8] மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பாரதியார் பணியாற்றியதுடன் பாரதியாரின் கவிதைத் தொகுதிகளுக்கு மதிப்புரை செந்தமிழ் இதழில் வெளியிடப் பெற்றுள்ளது. பாரதியாரின் முதல் கவிதைத் தொகுதியான 'ஸ்வதேச கீதங்கள்' முதற்பாகம் 1908 ஆம் ஆண்டு வெளிவந்தது" இந்நூலுக்கான மதிப்புரையைச் செந்தமிழ் இதழில் (தொகுதி 6, ப.105, 106) ஆசிரியர் மு. இராகவையங்கார் எழுதியுள்ளார். இம்மதிப்புரையில் பாரதியாரின் கவித்திறனைப் போற்றிப் பாராட்டி எழுதியுள்ளார்.

### பாண்டித்துரையாரும் வ.உ.சிதம்பரனாரும்

வ.உ.சி. ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் ஒரு வீரத் தியாகியாக மட்டுமல்லாமல் தமிழர் என்ற இனஉணர்வோடும் செயல்பட்டவர்.

"தேச ஆட்சியின் மீட்சிக்கான முதல்வழி வியாபாரம் செய்யவந்த வெள்ளையர்களை வெருட்டியடிக்க வேண்டும் என்பதுதான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால் நம்மவர்க்குக் கடல் ஆதிக்கம் வேண்டும். ஒரு காலத்தில் மேற்கே உரோம் தேசத்திற்கும் கிழக்கே ஜாவா, சுமத்ராவுக்கு அப்பாலும் தமிழ்க்கப்பல் போய்வந்தது. தமிழர் வாணிபம் சிறப்பாக விளங்கி வந்தது. அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். எனவே, தமிழர்கள் மீண்டும் கடல்மேல் செல்வது எவ்வாறு என்பதாகத் திட்டமிட்டேன். இத்திட்டத்தின் விளைவுதான் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'"[9] என வ.உ.சி. 1906 ஆம் ஆண்டு சுதேசிக் கப்பல் கம்பெனியைத் துவக்கியுள்ளார். பங்குதாரர்களிடம் பத்து இலட்சம் ரூபாய் சேர்ப்பதெனத் திட்டமிட்டனர். பாண்டித்துரையார் வ.உ.சி அவர்களை இக்கம்பெனியின் தலைவராக்கி, செயலாளர் பொறுப்பையும் ஏற்கச் செய்தார். ஒரு இலட்சரூபாய் தன் பங்குத் தொகையாக அளித்தார். பத்து இலட்சம் ரூபாய் திரட்டிக் கப்பல் வாங்குவதென முடிவு செய்து அம்முயற்சியில் வ.உ.சி. பல இன்னல்களைச் சந்தித்தார். இறுதியில் 'காலியா', 'லாவோ' என்ற இரண்டு கப்பல்களைத் திரு. வேதமூர்த்தி என்பவரைப் பிரான்சுக்கு அனுப்பி வாங்கினார். இருபெரும் கப்பல்களை ஒரே

சமயத்தில் விலைக்கு வாங்கிச் சுதேசிக்கப்பல் கம்பெனிக்குச் சொந்தமாக்கியதைத் தமிழகமே பாராட்டிக் கப்பலோட்டிய தமிழர் என்று அவரைச் சிறப்பித்தது. வ.உ.சி. யின் இந்த அரிய முயற்சிக்குப் பாண்டித்துரையார் உறுதுணையாக இருந்தார்.

“கொள்ளை யடித்துக் குதுகலித் திருந்த
வெள்ளையர் மருண்டு விதிர்விதிர்ப் பெய்தவும்
தூத்துக் குடியெனும் துறைமுகத் திருந்து
நேர்த்தியாய் நம்கலம் நிமிர்ந்து செல்லவும்
திட்டம் தீட்டிச் சீரிதின் முயன்ற
உட்டுக ளில்லா ஒருவன் சிதம்பரம்
பிள்ளையின் வேண்டுகோள் தள்ளா தேற்றுக்
கள்ளமில்லாது கனிமொழி புகன்று
மிகுபொருள் உதவிய மேலவன் சகல
தகுதியும் படைத்த தமிழர் தலைவன்”[10]

எனப் பண்டிதர் அ. முத்துசாமிப் பிள்ளையும்

உடல் பொருளா வியெல்லாமித் தமிழுக்கே
உரியதாக்கி உயர்ந்த தேவன்
கடல் போன்ற பொருளுதவி வெள்ளையரைக்
கப்பலோட்டி எதிர்த்து நின்ற
அடலேறு வ.உ.சி. அவர்களுக்கே
அளித்த தீரன்; இவனே நாட்டு
விடுதலைக்கு முன்னின்ற வீரர்க்குள்
வீரனிவன் மேன்மை வாழ்க”[11]

என்று புலவர் அரசன் சண்முகனாரும் தமது கவிதைகளில் குறிப்பிட்டிருப்பது தமிழன் என்ற இன உணர்வோடு பாண்டித்துரையார் செயல்வீரராகத் திகழ்ந்தார் என்பதைக் காட்டுவதாகும்.

“வ.உ.சி. தூத்துக்குடியில் கப்பல் கம்பெனி தொடங்கினார். எட்டயபுரம் சமீன்தார் இதற்குப் பத்தாயிரம் கொடுத்தார். கொடுத்த பணமும் திவாலாகிவிட்டது. இதன்பிறகு பாண்டித்துரைத்தேவர் ஒரு லட்சம் கொடுத்தார் என்றால் லாபம் கருதி அல்ல. வ.உ.சி. ஆரம்பித்தார் என்று கொடுக்கவில்லை. இந்த நாட்டில் இப்படி ஒன்று தேவை என்று கொடுத்தார். இவ்வெண்ணம் கொண்டு ஒரு மன்னர் கொடுத்தார் என்றால் அதுதான் அவரின் நாட்டுப்பற்றின் உச்சக்கட்டமாக இருக்கமுடியும். அந்தச்

செயலை இந்த நாட்டு வரலாற்றிலே படைத்துவிட்டோம். அந்தப் பட்டியலிலே இவர் தவிர வேறு சமீந்தார் கிடையாது. செல்வந்தர்தான் மற்றவர்களெல்லாம். இவர்கள் இலாபம் கருதிச் செய்திருக்கலாம். ஆனால் நம் சமீன்தார் லாபம் கருதி இச்செயலைச் செய்திருக்க முடியாது. இந்த சமீன்தார் வ.உ.சி. யை நம்பி, இந்தக் கப்பல் கம்பெனியை நம்பி, ஆங்கிலேயனை எதிர்த்து நடக்கும் ஒரு செயலுக்கு ஒரு லட்சம் கொடுத்தார் என்றால் அதைவிட நாட்டுப்பற்று வேறு ஒன்றும் இருக்கமுடியாது."[12]
பாண்டித்துரையாரின் நாட்டுப்பற்றும், தமிழினப்பற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

"வெள்ளையரின் ஆதிக்கக் கொடுமை தன்னை
வீரமுடன் எதிர்த்திட்ட வ.உ.சி.க்கே
கள்ளமின்றிப் பொருளீந்து வலிமை சேர்த்தாய்
கணக்கின்றிப் பொருளிழப்பு வந்தபோதும்
எள்ளளவும் மனஞ்சோர்ந்து வாடவில்லை
இமைப்போதும் தமிழ்த்தாயை மறக்கவில்லை
துள்ளிவரும் 'தமிழ்ச்சங்கம்' என்னும் பேரில்
தூயவனே நீ என்றும் வாழி! வாழி"[13]

என பாண்டித்துரையார் செய்த பொருளுதவி பற்றியும், பிற பணிகள் பற்றியும் "தமிழ் காத்த தக்கோய் வாழி" எனும் கவிதையில் பெ. இளவரசு குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

ஆங்கிலேயருக்கு எதிராகப் பல துன்பங்களுக்கிடையே இரு கப்பல்கள் வாங்கியதை இந்தியப் பத்திரிகைகள் பாராட்டின. பாரதியாரும் அப்பொழுது தாம் நடத்திவந்த வாரப் பத்திரிகையான 'இந்தியா'வில் வ.உ.சிதம்பரனாரைப் பாராட்டி எழுதினார். "வெகு காலமாகப் புத்திரப்பேறின்றி அருந்தவம் செய்து வந்த பெண்ணொருத்தி ஏக காலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால் எத்தனை அளவற்ற ஆனந்தமடைவாளோ அத்தனை அளவற்ற ஆனந்தத்தை நமது பொது மாதாவாகிய பாரதத்தாயும் இவ்விரண்டு கப்பல்களைப் பெற்றமைக்காக அடைவாளென்பது உறுதி"[14] என எழுதினார் கவியரசர் பாரதியார். கப்பல் தொழில் தொடக்கத்தில் நன்றாக நடந்ததைக் கண்டு பொறாமைக் கொண்ட பலர் வ.உ.சிதம்பரனாருக்குப் பல துன்பங்களை, அநீதிகளை இழைத்தனர். வ.உ.சி. மனம் வெதும்பி கப்பல் கம்பெனியிலிருந்து விலக முடிவு செய்தார். சி.த. ஆறுமுகம் பிள்ளையும், வணிகர் அருணாசலமும் மற்றும் பலரும் உடனிருந்து மீண்டும் கப்பல் கம்பெனியை நடத்த உதவினர். ஆனால் அந்நிய ஆதிக்க சக்திகள் கப்பல் கம்பெனியை ஒழிக்கத் திட்டமிட்டு அவ்வாறே செய்துமுடித்தனர்.

பாண்டித்துரையாரும், வ.உ.சி. யும் எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கிடையே தொடங்கிய கப்பல் கம்பெனியைப் பின்னாளில் தமிழகம் இழக்க நேரிட்டது.

### பாண்டித்துரையாரின் இழப்பு

மதுரைத் தமிழ்ச்சங்கம் தொடங்கித் தமிழுக்கெனச் செய்யவேண்டிய பணிகளைப் பலவாறு திட்டமிட்டு, தக்க அறிஞர்கள் பெருநிலக்கிழார்கள், வணிகச் செல்வந்தர்கள், குறுநில மன்னர்களின் துணையுடன் நடத்தி வந்தார் பாண்டித்துரையார். அவருக்கு உற்ற துணையாக, உடன்பிறப்பாக இருந்த பாஸ்கர சேதுபதியின் மறைவு பாண்டித்துரையாரைப் பெரும் துக்கத்தில் ஆழ்த்தியது. 1903 ஆம் ஆண்டு பாஸ்கர சேதுபதி மறைந்தார். அப்பொழுது பாண்டித்துரையார் பாஸ்கர சேதுபதியின் உள்ளத்தையும், அவர் செய்த உதவிகளையும் நினைந்து பாடல் புனைந்துள்ளார்.

“ என்னாவி உளங்குளிர அண்ணாவென்(று)
அன்போடினி எனையார் சொல்வார்?
மன்னாமன் னாமன்னா எனயாரை
யானினிமேல் மதித்துச் சொல்வேன்?
பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த தேவே!
எந்நாடு சென்றனையோ எங்கள் குல
மணிவிளக்கே இசைத்தி டாயே.

பண்புலவு தமிழ்ச்சங்கம் நிறுவல்கரு
தியஞான்று பரிவு கூர்ந்து
நண்புலவு திருவாக்கால் தளர்வொழிகென்(று)
எனக்கிசைத்த நலம்பொய் யாதே
மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியவை
யாதெனவே மதித்து வான்போய்
விண்புலவ ரோடுதம னியங்கொணர
நினைந்தனையோ வேந்த ரேறே.”[15]

எனப் பாஸ்கரசேதுபதியின் மறைவினால் ஏற்பட்ட இழப்பை, துயரத்தைப் பாண்டித்துரையார் இப்பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

* * *

## குறிப்புகள்

1. மறைமலையடிகள் வரலாறு, மறை - திருநாவுக்கரசு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. பதி. 19 பக். 99-100.

2. மேற்படி, பக். 172 - 173.

3. மேற்படி, பக். 172 - 173.

4. தமிழ்ச் சொல்லகராதி, மூன்றாம் பாகம், கு. கதிரைவேற்பிள்ளை, பதி. 1923, ப. XI

5. தென்றல், (கவி) கண்ணதாசன், 19.12.1959, மலர் 6, இதழ் 27, ப. 10.

6. நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழ் இலக்கியப்பணி, ச. சாம்பசிவனார், வளவன் வெளியீடு, மதுரை, டிச. 1985, ப. 228.

7. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், இரா. இளங்குமரன், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, பதி. 1987. ப. 117.

8. பாரதி நூல்கள் பதிப்பு வரலாறு, சீனி. விசுவநாதன் (வெளியீடு) சீனி. விசுவனாதன். சென்னை. நவ. 1989. ப. 33-34.

9. கப்பலோட்டிய சிதம்பரனார், ம. பொ. சிவஞானம், இன்பநிலையம், பதி 1972, ப. 35.

10. செந்தமிழ், ‘பல்கலை ஆயும் பண்புடைக் குரிசில்’ அ. முத்துசாமிப் பிள்ளை, தொகுதி 62, பகுதி 3, மார்ச் 1967, ப. 19

11. செந்தமிழ், ‘ஆசிரியப் பெருமகனார் அன்று உரைத்தவை’ வை. வேணுகோபாலன், தொகுதி 70, பகுதி 4, டிச. 1979, ப. 9.

12. செந்தமிழ், (கட்), பாண்டித்துரையார் நாட்டுப்பற்று, கு. துரைராசு, தொகுதி 68, பகுதி 2, சூன் 1973. ப.22.

13. செந்தமிழ், தொகுதி 70, பகுதி 4, டிச. 1975, ப. 10.

14. செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார், தி. நெ. வள்ளிநாயகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, அக். 1985, ப. 33.

15. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம். இரா. இளங்குமரன், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை. பதி. 1987, ப.107.

# 9. வேண்டும் ஒரு தமிழ்ப்படை

மதுரைத் தமிழ்ச் சங்கம் தமிழ் மொழி வளர்ச்சிப் பணிகளைச் சிறப்புறச் செய்து கொண்டிருந்தாலும், இதனை மேலும் சிறப்புற நடத்தத் தேவையான நடவடிக்கைகளைப் பற்றி ‘தமிழ்ச் சங்கம் செய்யவேண்டிய வேலை’ எனும் தலைப்பில் அறிஞர் சோமசுந்தர தேசிகனார் (செந்தமிழ், தொகுதி 31, 1933-1934) குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

“செந்தமிழ் வாயிலாக இதுவரை கேட்டுமறியாத பல பழந்தமிழ்ச் சிறுநூல்கள் வெளியாயின. இனியும் பல வெளிவருதல் கூடுமென்பது நாம் எதிர்பார்க்கக்கூடியதொரு நிலையேயாம். தமிழிலக்கியத்தைக் குறித்து ஆராய்ச்சி சிறிது நடக்கின்றதாயினும், இந்தக் காலத்துக்கு வேண்டியதாகக் கருதப்படும் பல விஷயங்கள் வெளியாவதற்குரிய முயற்சி கைக்கொள்ளல் வேண்டும் என்பது எனது விண்ணப்பம்.

முதலாவதாக நமது நாட்டுச் சரிதம் இதுவென இன்னும் பலர் - ஏன் எல்லோருமே - அறிந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கின்றனர். அதற்குக் காரணம் அவை தமிழ்மொழியில் இல்லாமையே; அவற்றை யெழுதுவதற்கான முயற்சி வேண்டும். இப்பகுதியைச் சார்ந்தது பிறநாட்டார் நம்மைப் பற்றிக் கூறுஞ்செய்தி. தமிழ்நாட்டவரைப் பற்றிப் பிறர் எவ்வாறு கூறியிருக்கின்றனர்; கூறுகின்றனர் என்று அறிந்து கொள்ள வேண்டியது நமது முதற்கடமையன்றோ? அவற்றையும் சுருக்கமாகவோ, விரிவாகவோ வெளியிட வேண்டிய ஏற்பாடு, சங்கத்தால் செய்ய வேண்டிய முக்கிய கடமைகளில் ஒன்றாகும். அதனைவிட விரைவாகச் செய்யவேண்டிய காரியம், திரை கடலோடித் திரவியந் தேடிய பல தமிழ்ப் பெரியோர்களுடைய செய்திகளாகும். இவர்களே தமிழ்மொழியைப் பர்மா, சீயம், சாவகம் முதலான தீவுகளிற் கொண்டு சென்று பரப்பியவர்களாவர்; இவர்கள் வரலாற்றை நாம் அறியவேண்டாமா?

இரண்டாவதாக இந்நாட்டுக்கு ஸயன்ஸ் என்ற பிரகிருதி சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், பிருதுவிதத்துவ சாஸ்திரமிரண்டும் பள்ளிச் சிறாரும் எளிதிலுணரும்படி எழுதப்படல் வேண்டும். அவற்றைப் போதிப்போரே அந்நூல்களை எழுதப் பெரிதுந் தக்கவராவர்.

இவற்றையெல்லாம் விடச் சிறந்ததாக இருப்பது, தக்காரை நன்கு மதிப்பதாகும். சென்ற முப்பத்தொரு ஆண்டாக நடத்தப்பட்டு வரும் இச்சங்கத்தின் அவயவியாக இராத கற்றாரும் மற்றோரும் பலருண்டென்பது யாரும் ஒப்புக் கொள்ளுமொரு செய்தி. அவ்வாறு தகுதியுடையவர்களைச் சங்கம், தலைவர் மூலமாயேனும் விழாக்கூட்ட மூலமாயேனும் கௌரவிக்க வேண்டுமென்பது எனது தாழ்மையான விண்ணப்பம்"[1] என்ற கருத்துடன் செந்தமிழ் இதழுக்கு மிகுதியான சந்தாதாரர்களைச் சேர்க்க முயலவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் சோமசுந்தர தேசிகனார். அவரும் உடல்நலம் குன்றியதால் அந்தப் பணி தமிழவேள் பி.டி. இராசன் தலைமையில் நடைபெற்றது. இவர் 1956 ஆம் ஆண்டு 'தமிழ்ச் சங்கப் பொன்விழா' என்ற பெருவிழாவை நடத்தினார். இதில் தமிழ் வளர்ச்சிக்குரிய பல செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டன. "இதற்குமுன் தமிழகம் கண்டிராத முறையில், இயல்-இசை-நாடக விழாவாக ஒரு வாரம் மதுரையில் கொண்டாடப்பெற்றது. சங்க வளர்ச்சிக்குப் பெரிய திட்டம் ஒன்று வைத்துள்ளேன். பொருளாதார நிலைக்குத் தக்க, சிறிதுசிறிதாக இத்திட்டங்கள் இப்பொழுது நிறைவேறி வருகின்றன. முழுவதும் நிறைவேற ஒரு கோடி ரூபாய் தேவை. இதை யாரிடம் கேட்பது? பணக்காரர்களிடமா? இல்லை அரசாங்கத்திடமா? அவர்கள் கொடுப்பதைக் கொடுக்கட்டும்; வேண்டாமென்று மறுக்கவில்லை. அதைவிட நான் விரும்புவது. இந்நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழ்மகனும், மகளும் ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் போதும், ஒரு கோடிக்கு மேல் ஒரே நாளில் சேர்ந்துவிடும். இதன்மூலம் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் தமிழ்ச் சங்க வளர்ச்சியிலும், தமிழ் வளர்ச்சியிலும் நேரடியாகப் பங்குகொண்டு, தமிழ்மொழிக்குத் தங்கள் கடமையைச் செய்தவர்களாவர். தமிழ் வாழ்க, தமிழ் ஓங்குக என்று கூறினால் மட்டும் தமிழ் வளர்ந்துவிடாது. செயலில் தங்கள் உணர்ச்சியைக் காட்ட வேண்டும்."[2] என 1967 ஆம் ஆண்டு நடந்த பாண்டித்துரைத் தேவர் நூற்றாண்டு விழாவில் தமிழவேள் பி.டி. இராசன் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

மேலும் தமிழவேள் பி.டி. இர்ராசன் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரூபாய் கொடுப்பதற்கு அன்புடன் காத்திருந்தாலும், அவர்களை அணுகி அப்பொருளைத் திரட்டுவதற்கு நேர்மையும், சுறுசுறுப்பும், ஆர்வமும் மிக்க ஒரு தமிழ்ப்படை தேவை. இம் மூன்றும் ஒருங்கே அமைந்த படைவீரர்களைத் தமிழகத்திலே நாம் எங்கு காணமுடியும்? நம் அருமை மாணவி, மாணவர்களைத் தவிர. அவர்கள் தாம் இதைச் செய்யவல்லவர்கள், நல்லவர்கள், அவர்களை இப்பணியில் ஈடுபட வருக, வருக என்று அழைக்கின்றேன்.

பாண்டித்துரைத் தேவரின் கனவுகள் நனவாகவும், தமிழ் வளரவும், தமிழ் மக்கள் சிறப்புறவும், தமிழ்நாடு புகழ்பெறவும் இப்பணியிலே ஈடுபடுவார்களாக"[3] எனும் அந்த வேண்டுகோள் இன்றையத் தேவையும்கூட என்பதைத் தமிழர் யாவரும் ஒப்புக் கொள்வர்.

இந்நூற்றாண்டில் இடைக்காலத்தில் நிகழ்ந்த பல பெரும் தமிழறிஞர்களின் மறைவும், தமிழர்களின் அலட்சியப் போக்கும், தாய்மொழிப் பற்றின்மையும் காரணமாகத் தமிழ் வளர்ச்சித் திட்டங்கள் பல உயிரற்றுப் போயின. காலப்போக்கில் மதுரையில் தமிழ்ச்சங்கம் இருந்ததா? என்று கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதுதான் உண்மை.

பாண்டித்துரையார் மறைவு

தமிழ்ப்பணியே வாழ்நாள் பணியாக மேற்கொண்ட பாண்டித் துரையார், ஒருநாள் மாலை தம் மாளிகையில் பலருடன் பேசிக் கொண்டிருந்தபொழுது திடீரென்று மயக்கமுற்று கீழே விழுந்துவிட்டார். நினைவு தவறியபடியே சில நாட்கள் இருந்து, பின்னர் 1911 ஆம் ஆண்டு டிசம்பர் 2ம் நாள் (2.12.1911) உயிர் நீத்தார். பாண்டித்துரையாரின் மறைவு தமிழ் நெஞ்சங்களைப் பெரிதும் கலக்கமடையச் செய்தது. அவர் மறைவையொட்டிப் புலவர்கள் பாடல்கள் இயற்றித் தங்களுடைய இரங்கலைத் தெரிவித்தனர்.

'பாலவனத்தம் ஜமீன்தாரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியுமாகிய ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் காலஞ்சென்றமைக் காற்றாது புலவர்கள் பாடிய கையறுநிலைப் பாமாலை' எனச் செந்தமிழ் இதழில் அப்பாடல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கள் காலஞ் சென்றமைக் காற்றாதிரங்கிப் புலவர்கள் பாடிய பாடல்கள் எண்ணிறந்தன. அவையெல்லாந் தவறாது செந்தமிழில் வெளியிடுதற்கிடம் போதாததால் ஒவ்வொருவரும் பாடிய பற்பல பாடல்களுள் செந்தமிழ் நேயர்களும் பிறருமவர் அநுதாபமுணருமாறு இங்குச் சிற்சிலவே வெளியிடப் பெறுகின்றன"[4] எனக் குறிப்பிட்டுச் சில இரங்கற்பாக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பி.எஸ். சுப்பிரமணிய ஐயர், ஆர். வேங்கடாசலம் பிள்ளை, சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர், பூவை கலியாண சுந்தர முதலியார், கொத்தமங்கலம் சி.அ.சி. காசிநாதன் செட்டியார், ஐ. சாமிநாத முதலியார், மு.ரா. அருணாசலக் கவிராயர், மு. வேங்கடசாமி நாட்டார், முருகையக்

கவிராயர், மோசூர் - முனிசாமி முதலியார், பொ. முத்தையபிள்ளை, வி. சாமிநாதபிள்ளை, பண்டிதர் சர்க்கரை இராமசாமிப் புலவர், நாகை ஜி. சதாசிவம் பிள்ளை, செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர் சாந்தரேசுவரையர் பண்டிதர் ஆ. கார்மேகக் கோனார், நா.சா. ஸ்ரீ. நா. இராமசாமிப்பிள்ளை, தி. ஸ்ரீநிவாசையங்கார், புன்னைவன முதலியார், பாலபண்டிதர் கந்தசாமியார், ஆகியோரின் இரங்கற்பாக்கள் பாண்டித்துரையாரின் சிறப்புகளை, தமிழ்ப் பணிகளை எடுத்துரைப்பனவாக, அவருடைய பேரிழப்பை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. பிரான்சு நாட்டைச் சேர்ந்த தமிழ்ப் புலமை பெற்ற பேராசிரியர் ஜீலியன் வில்ஸன் என்பவரும் இவருடைய மறைவுக் குறித்து பாடல் வழங்கியுள்ளார்.

“செந்தமிழ் நாட் டெல்லாருஞ் சேர்ந்தேத்து மாமகனே
தந்தபுகழ் விட்டுத் தவறினையோ - அந்த
இருவினையும் வென்று கடந்திலையேல் இன்னும்
பெருநலஞ் செய்வாய் பிறந்து.”

என்பதே அப்பாடல்.

“மண்டலத்தி லொருவரிறந் தால்மனைவி
மக்கள்சுற்றம் வருந்த யேவாய்,
விண்டமு வதன்றிவே றெவரழுவார்
நீயிறந்த வெய்ய தீமை
கண்டவருங் கேட்டவரு நாடெல்லா
மழக்கண்டோங் கருதி லன்ன,
தெண்டகுநின் குணப்பெருமை யெம்பாண்டித்
துரையரசே யியம்பிற் றன்றே.”

என மு.ரா. அருணாசலக் கவிராயரும்

“செந்தமிழ் மாமடந்தையுளந் திகிலடையக்
கவிவாணர் திடுக்கிட் டேங்க
வந்தமிழ்சீர் நற்பாண்டித் துரையே
யிவ்வுலக நலனற வொழித்தே
சந்தமுறி மாலவாய ரனடிக்கீழ்ச்
சார்ந்தனை யாற்றரணி தன்னில்
விந்தையுறு நின்பிரிவுக் காரிரங்கார்
தமிழறிந்தோர் விளம்பா யையா”

என மோசூர் - முனிசாமி முதலியாரும் பாடிய பாடலடிகள் பாண்டித் துரையாரின் இழப்பை எடுத்துக்காட்டுவதற்குச் சிறு சான்றுகளாகும்.

'சோமசுந்தர விலாசம், தேவரவர்கள் மறைந்தபின் தன் பொலிவையிழந்து புல்லென்றாயது. சிவபதம் அடைந்தபோது இவர்க்கு வயது நாற்பத்து நான்கே. எல்லாப் பேறுகளையும் பெற்றிருந்தும் மக்கட்பேறு இவருக்கு வாய்க்கவில்லை. அதனால் தம் மருகி வயிற்று மகனாரையே சுவீகார, புத்திரனாகக் கொண்டிருந்தார். ஆனால் அப்புத்திரரும் சிலவாண்டுகளில் காலமாயினார். ஆகவே தேவரவர்கட்குப் பின் அவர்பெருஞ் செல்வமனைத்தும் அவரது மூத்த சகோதரரின் புத்திரர்க்கே உரிமையாயிற்று"[5] என மு. இராகவையங்கார் பாண்டித் துரையாரின் மறைவு பற்றித் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் தமிழுலகை அணிவகுத்து அழைத்துச் சென்ற பாண்டித்துரையாரின் மறைவுக்குப் பின் சங்கப் பணிகளில் தொய்வு ஏற்பட்டது. அவருக்குப் பின் டி.சி. சீனிவாசய்யங்கார் தமிழ்ச் சங்கத்தை நடத்தி வந்தார்.

'பாரெல்லாம் பைந்தமிழ் பரவுக' என்று முழங்கிய பாண்டித்துரைத் தேவரின் முனைப்பால் தமிழுக்கு அரிய பல நூல்கள் கிடைத்தன. தமிழ் மொழி வளர்ச்சி என்ற நிலையில் ஏற்றம் பெற்றது. ஆனால் ஆண்டுகள் பல கடந்தும் ஆட்சியில் தமிழ் இல்லை; நீதிமன்றத்தில் தமிழ் இல்லை, கல்வியில் தமிழ் இல்லை, விளம்பரங்களில் தமிழ் இல்லை, தமிழ்மக்களின் பெயரும் தமிழில் இல்லை என்ற பட்டியல் தொடருகின்ற இக்காலத்திற்கு தேவை மீண்டும் ஒரு பாண்டித்துரையார். வேண்டும் ஒரு தமிழ்ப்படை!

* * *

## குறிப்புகள்

1. செந்தமிழ், தொகுதி 31, 1933-1934. ப. 39

2. செந்தமிழ், தொகுதி 55, சூலை 1967, ப. 6.

3. மேற்படி ப. 8

4. செந்தமிழ், தொகுதி 55, மார்ச் 1967, ப. 36.

5. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், (பதி) டி.ஜி. கோபால் பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி 1957, ப. 43.

# துரையார் - மறையார்

(புலவர் தொல்காப்பியன்)
தஞ்சாவூர்

1. பண்டிருந்த பாண்டியர்கள் ஈண்டு - தமிழ்ப்
பாவளர்க்க வைத்தசங்கம் மூன்று! - அவை
கொண்டலென்னப் பெய்தகவிக்
கோலமழை தனிலவரும்
நனைந்தார்! - கவி புனைந்தார்!

2. மூன்றுசங்கம் போனபின்னர் இங்கே - தமிழ்
முரசொலிக்க வருங்கரங்கள் எங்கே? - என
ஆண்டபாண்டித் துரையவரின்
அருங்கரங்கள் தாமுயர்ந்த
அன்று! - நான் என்று!

3. பத்தொடைந்து பாண்டியர்கள் பண்டு - சங்கப்
பாட்டரங்கில் ஏறினராம் நன்று! - நம்
பற்றுபெற்ற தேவரிவர்
பலவகைநூல் அளித்தரங்குங்
கண்டார்! - புகழ் கொண்டா!

4. கூடலுக்கும், குளிர்தமிழுக்கும் ஏற்றம் - இங்கு
கொண்டளித்த துரையிவரின் தோற்றம் - நம்
பாடலுக்கும், பைந்தமிழுக்கும்
பழம்புகழ்க்கும் வீடிபொழுதின்
சேவல்! - புதுக் காவல்!

5. போற்றுகின்ற இமயமலை நாணும் - படி
பொங்குபுகழ் தனையிவர்தொண் டீனும்! - இவர்
ஆற்றலுக்கு, அழகினுக்கும்,
ஆன்றமைந்த புகழ்க்குமிங்கே
துரையார்! - என்றும் மறையார்!

# துணைநூற்பட்டியல்


1. அபிதான சிந்தாமணி, பதி. ஆ. சிங்காரவேலு முதலியார் (திருத்தியது) சிவப்பிரகாச முதலியார், Asian Educational ServicesL New Delhi, இரண்டாம் பதிப்பு. 1981.

2. கப்பலோட்டிய சிதம்பரனார், ம.பொ. சிவஞானம், இன்ப நிலையம், சென்னை, பதி. 1972.

3. சங்கம் வளர்த்த தேவர், (பதி) எம். முத்துசாமி, பாண்டித்துரைத் தேவரின் 125 வது பிறந்தநாள் விழா வெளியீடு, முருகாலயம், சென்னை - 33, பதி. செப். 1992.

4. சுவாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்து, சதி. ஆறுமுகநாவலர் இரத்தாக்ஷி வருடம், நான்காம் பதிப்பு.

5. செந்தமிழ் வளர்த்த தேவர்கள், மு. இராகவையங்கார், பதி. டி.ஜி கோபாலப்பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி, ஜூன்.1951.

6. தமிழ் இலக்கிய வரலாறு, மு. வரதராசன், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, மு.ப. 1978.

7. தமிழ்ச் சொல்லகராதி, மூன்றாம் பாகம், கு. கதிரைவேற்பிள்ளை, பதி. 1923, மதுரை.

8. தமிழ் இலக்கிய வரலாறு, மு. அருணாசலம், காந்தி வித்யாலயம், திருச்சிற்றம்பலம், பதி. 1970.

9. தமிழர் வாழ்வு, மா. இராசமாணிக்கம், சாந்தி நூலகம், சென்னை - 1961.

10. தவத்திரு ஞானியார் அடிகள், வெள்ளையாம்பட்டு சுந்தரம், சேகர் பதிப்பகம், சென்னை, மு.ப. ஜூலை 1972.

11. நாவலர் பாரதியார், ச. சாம்பசிவன், இரா. இளங்குமரன், கழகம், சென்னை, 1960.

12. நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழ் இலக்கியப் பணி, ச. சாம்பசிவனார், வளவன் வெளியீடு, மதுரை, டிச. 1985.

13. பன்னூல் பாடற்றிரட்டு (தொகு) சு. அ. இராமசாமிப்புலவர் (குறி). தி. சங்குப்புலவர், கழக வெளியீடு, சென்னை, பதி. 1968.

14. பாண்டித்துரையார் பாடிய காவடிச்சிந்து, க.சி. கமலையா, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, பதி. 1984.

15. பாரதி நூல்கள் பதிப்பு வரலாறு, சீனி விசுவநாதன், (வெளி) சீனி விசுவநாதன், சென்னை, நவ. 1989.

16. பாரதிதாசன் கவிதைகள், (தொகு) ஆ. திருவாசகன், சுரதா கல்லாடம், அருள்சுடர் பதிப்பகம், சென்னை, செப். 1993.

17. மணிமேகலை மூலமும் அரும்பத உரையும், உ.வே.சாமிநாத ஐயர், சென்னை, மு.ப. 1898.

18. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், இரா.இளங்குமரன் மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, பதி.1987.

19. மறைமலையடிகள் வரலாறு, மறை. திருநாவுக்கரசு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதி 1959.

20. என் சரிதம், உ.வே.சா. டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1982

## இதழ்கள்

1. செந்தமிழ், தொகுதி 1, 1904.

2. செந்தமிழ், தொகுதி 6, 1910.

3. செந்தமிழ், தொகுதி 55, 1967.

4. செந்தமிழ், தொகுதி 62, பாண்டித்துரைத் தேவரவர்களின் நூற்றாண்டு விழா மலர், மார்ச் 1967.

5. செந்தமிழ், தொகுதி 68, 1973.

6. செந்தமிழ், தொகுதி 70, 1975.

7. தென்றல், கவிஞர் கண்ணதாசன், 19.12.1959, மலர் 6, இதழ். 27.

# பின்னிணைப்பு

## பாண்டித்துரைத் தேவரவர்களால் தொகுக்கப்பெற்ற 'பன்னூற் றிரட்டு' என்னும் நூலுக்கு தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் அளித்த சிறப்புப்பாயிரம்

பூமலி சந்தக் காமலி வரைவா
ழருந்தவ னன்பிற் புரந்தருண் மேன்மை
பெற்றே யுவமை யற்றே யிலங்கு
நன்மொழி யாய தென்மொழித் துறையி
வற்புமிக் கான்ற பற்பல கவிஞர்
தலையெலாங் குமைத்துச் சுவையெலா மமைத்தே
யாக்கிய வினிமை தேக்கிய பன்னூற்
பரப்பெலா மாயு ணிரப்புறு மாந்தர்க்கு
ஓதுறல் சிறிதுமொல் லாதென நினைந்து
கல்வி கரையில கற்பவர் நாள்கில
மெல்ல நினைக்கிற் பிணிபல வென்னு
மேலவர் தொடர்பைச் சால மதித்தே
யாழித் தரைபுகழ் காழித் தவப்பயன்
முதலிய பெரியோர் நுதலிய தமிழ்மறை
யென்னும் பெயர்கொடு மன்னுபன் முறைகளுந்
துங்கக்கூடற் சங்கத் தமர்ந்த
தொல்லிசைப் பயனார் நல்லிசைப் புலவ
ரருளிய மேன்மைப் பொருளிய னூல்களும்
பொருவில் பெருமைத் திருவள் ளுவர்முத
லான்றோ ரருள்சுவை சான்றபன் னூல்களு
மருத்திகூர் புலமைத் திருத்தகு தேவ
னாதியா மறிஞ ரோதிய வாய
மங்காச் சுவைசா லைங்காப் பியத்துட்
கிடைப்பன வாய தொடைக்கவி நூல்களுஞ்

செப்பமார் கச்சி யப்ப வாசான்
முன்னாப் பகர்பல செந்நாப் புலவரெம்
மருளிய லகற்ற வருளிய நூல்களு
நலமுறு மகிழ்விற் பலமுறை யாராய்ந்
துட்டெளி வளிக்குங் கட்டெளி வனையவாய்

மன்பதைக் களவா வின்ப நிரப்பி
யீழுக்க மகன்ற வெழுக்க வகைநுவல்
பாடல் கடம்மை நாடல்செய் தெடுத்தே
பாத்தே பால்வகை யாத்தே நிறுவித்
தொன்னூற் றிரட்டெனச் சொல்ல வேசிலர்

தென்னூற் றிரட்டெனச் செப்ப வேசிலர்
நன்னூற் றிரட்டென நவில வேசிலர்
பன்னூற் றிரட்டெனப் பகர்பெயர் நிறீஇ
யளித்தா னம்மவொன் றவனா ரெனினே
யுறுஞ்சிறப் பமைந்த குறிஞ்சிமுன் னாய

திணைவளம் பழுநிய செம்பிநன் னாடன்
மாசு துன் னாவணம் பூசுவெண் சாந்தின்
விதுவைநேர் மாடப் புதுவைமா நகரான்
பவஞான மறுத்துயர் சிவஞானத் தேவர்
பவுத்திர னெனவரு பவித்திரக் குரிசில்

ஆரிய முதலாஞ் சீரிய மொழிகளி
லுளவென வுரைக்கும் பளகறு சுவைசால்
பல்கலை களுமிகக் பல்கலை மருவ
வளித்தே புலமைநன் றாக்கிய தேக்கட்
டளித்தார்ப் பொன்னுச் சாமி வரோதயன்

பண்ணிய வளவில் புண்ணியப் பேற்றா
லன்னவ னெனவே நன்னர்வந் துதித்தோன்
தீதிகந் தோங்குஞ் சேதுநன் னாட்டுக்
காசா யமல பரசிவ பத்திக்
காகர மாயருட் சாகா மாய்வள

மகவையிற் றழீ இய முகவை மாநகரி
லொண்மைப் பாற்கர னொத்தொளிர் வெண்குடைத்
தண்மைப் பாற்கர சாமி சுரேந்திரற்
கண்ணிய வன்பன் புண்ணிய வின்பன்
எவ்வமி லருந்தமி ழின்சுவை யோடு
சைவவின் சுவைதெரி வையைமா நதியான்
சால வனத்தந் தருபவை யகற்றிப்
பால வனத்தம் பாலித் திடுவோன்
நேரியன் பரியைக் கோரமா மென்றும்
வீரவெஞ் சிலைக்கைச் சேரலன் பரியைப்
பாடல மென்று நீடுசீர்க் கவிஞர்
செப்புறக் கொட்புறு திட்பவெம் பரியான்
செந்தமிழ்ச் சோம சுந்தர விலாசன்
அமிழ்து றழினிய தமிழ்வலோர் தமக்கு
மருமறை நாவி னந்தணர் தமக்கு
மாற்றி காட்சிப் பேறுடை யார்க்குந்
திசைபோம் பெரும்புக ழிசைவல் லவர்க்குஞ்
செயரிலாத் தேர்ச்சி வயிரியர் தமக்கு
மற்றவை மரபிற் கற்றவர் திரட்கு
மாதுய ரொடுவரு மாதுலர் தமக்கு
மடையா வாயி லகன் கடை யுடையான்
வாய்ந்தநுண் ணூல்பல வாய்ந்து மகிழ்ந்தே
நாவலர் பல்லோர் பாவலர் பல்லோர்
சூழும் படிதழீஇ வாழும் பெருமையன்
அன்னமு மாவு மன்னவா ணவர்பலர்க்
கனமுந் தனமு மாடையு மேடையுங்
கொடுத்தே மீடியைக் கெடுத்தே மகிழ்வித்
தருந்தமிழ் பயிற்றிப் புரந்திடு மேன்மையன்
தீயவெம்பிணியா லாயபஃ றுன்பிற்
காற்றா மாந்தர்க் கருந்துணை யானோன்

இருவே றுலகத் தெனுங்குறட் கெதிரா
வருவே ளொழுக்க மாண்பினி லதிகன்
குளிரின் சொல்லொடு மிளிர்குலோத் துங்கன்
அகத்தூக் கேமுனந் தொகுத்தே மென்னு
மக்குறை யறவரு முக்கிர பாண்டியன்

வருத்த மகற்று திருத்தகு தேவன்
களங்க மிலாது விளங்குபொய் யாமொழி
மெச்சி யடைந்து நச்சினார்க் கினியன்
தீதிய லாதுசெய் நீதிநூல் பலவுந்
தெரிமே லவர்சொல் பரிமே லழகன்

பொடியார்க்கு மேனி யடியார்க்கு நல்லான்
புலவர்க டுயர்களைத் திலகு உற்பகம்
வந்தடை வோர்துயர் சித்துசித் தாமணி
மண்ணினு மீக்கிளர் விண்ணிலு மமைந்த
வண்மைய னெனவே யொண்மையி னாலுயர்

சீரியர் சொலமிளிர் பாரி சாதம்
தால மாந்தரின் றாலந் துறந்தெனத்
தாலந் துறக்குந் தமிழ்த் தொன் னூல்கள்
பழுதா காலணம் பரிசோ திப்பித்
தெழுதா வெழுத்தி லியைவித் திடுவோன்

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை
யாக நினைப்போர் சோக மகற்ற
வானினு மானினும் வழங்குசெங் கரத்தான்
தேனினும் பாலினுந் தித்தித் தோங்குந்
தண்பா மாலை சாற்றுவோன் புறப்பொருள்

வெண்பா மாலை வெளிவரச் செய்தோன்
திருந்து கவின்சே ரருந்தமிழ் மடந்தை
யணிமே கலையா மணிமே கலையை
யாவரும் பெறச்செய் மாவுப காரி
பண்ணமை விழுச்சீர்த் தண்ணுமை யொடுங்களத்

தேழிசை யோடும் யாழிசை யோடு
மெழுது மறைக ளிசைத்தே யன்பிற்
றொழுது பல்லோர் சூழ்ந்திருந் தேத்த
வுருத்திர சின்ன மருத்தியிற் றாங்கி
மனமொழி மெய்யிற் றினமொழி வின்றி

யீசனை யன்பிற் பூசனை புரிவோன்
சிவனடி யவரைச் சிவனென மதித்து
வேண்டிற் றுதவும் விழுச்சீர்ப்
பாண்டித்துரைப்பெயர் படைத்தகோ மானே.

## பாண்டித்துரைத் தேவரவர்களால் தொகுக்கப்பெற்ற 'பன்னூற் றிரட்டு' என்னும் நூலுக்குத் தேவக்கோட்டை வீர.லெ. சிந்நயச் செட்டியாரவர்கள் அளித்த சிறப்புப்பாயிரம்

பூமகள் கெழீஇய காவரு மார்பக்
கரியவன் செருக்கி விரிநிலங் கீள்பு
தன்னமு மெய்யாப் பொன்னடிக் கடவு
ளருமறை கிளந்த குருமலர் வாயாற்
பொருத்தபு கொங்குதேர் திருத்தகு மதிமலி
யென்றிம் முதலாத் துன்றுமுந் செய்யுளோ
டகப்பொரு ளியலை யுகப்பக் கழறியும்
தென்றல்வெற் புறுவற் கன்றறி வுறுத்தும்
அவைக்களத் தமரூஉச் சுவைத்திறன் றெரித்துங்
குரவர் நால்வர் பரவிசைப் பனுவல்
கேட்டாங் சுனையர் வேட்டாங் கருளியும்
விறந்தன மொழியிற் சிறந்தன் றதுவெனாப்
புலனறை போய கலரு முணர்பாக்
காராக் காதலிற் பாராட் டோவான்
முன்னி வளர்த்த கன்னி நறுந்தமிழ்
மின்பயி றேஎத்து மன்பதை யனைத்து
மிம்மை மறுமை செம்மைவீ டாய
நயன்குலா மும்மைப் பயன்பெறற் பொருட்டுநூல்
பலவற் றுள்ளுங் கலவிக் கிடந்த
வொழுக்க வகைநுவ விழுக்கறு பாவினங்
கோத்து நிரலே யோத்து முறைவகுத்து
இரங்கொலிப் பாற்கடற் பரம்பிய வமிழ்தினை
மாயோன் றிரட்டி மீயோர்க் களித்தெனத்
தெருணனி கொளுத்தும் பொருளொருங் கோருழி

மொண்டுநா வலர்கூட் டுண்டு மகிழிய
வின்னூற் றறாஅப் பன்னூற் றிரட்டெனும்
பெயர்த்தொன் றம்ம வியற்றி யுதவினன்
ஒளிமான் முன்னர்க் களிமயி லகவப்
பருவக் கொண்மூ வருகுலாய்த் தவழ்ச்சி
திருவா னைக்காப் பெருமா னுவப்பத்
தோட்டிமைப் பொறியை யாட்டிமா லூழல்வு
கடுக்கு மல்லற் றடுக்கற் குறிஞ்சியும்
வெள்ளிற் றிரள்கனி முள்ளிடைச் சேக்குதல்
தயிர்தக வாடவ ருயிர்கடை தொறுவியர்
பொன்றிணி முலைத்தலை வென்றிகோள் வெஃகி
மூசிய வைந்நுதி யூசி நடுவ
ணோன்பிழைப் புறமுங் கான்பொலி முல்லையும்
செந்தளிர் பொதுளி யுந்துதே மாவின்
மைக்குயிற் றொழுதி தொக்ககூஉம் பெற்றி
பளகுதீர் கடைசியர் கிளவியை வெந்நிட்
டுறந்தெழு மானத் திறந்துபா டுள்ளிக்
கொழுந்தழ னாப்பண் விழுந்துடல் கருகி
மேற்றா வுருப்ப மாற்றா தலறலைத்
துணைதரு கிற்கும் பணைகளுன் மருதமும்
உமண்டியர் வாள்விழிக் கமன்றதெம் முழுதுங்
கோறு மென்மரின் வீறுசால் பரதவர்
கயலுடங் கந்தோ மயிலைக் குலத்தை
வலையகப் படுத்து நிலைகுலைத் தட்டுவாய்ப்
பெய்திறு மாக்கு மொய்திரை நெய்தலும்
ஈண்டிச் சிறந்துள பாண்டிப் பரண்டில்வாய்
மாயிரு ஞாலத் தேயிருள் வளாகம்
பெரும்புறப் புணரி மருங்குசூழ் நேமிப்
பொற்றை நனந்தலை மற்றைய விலங்கல்
வேறுபஃ றிறத்த யாறென விவற்றைப்

படைக்கும் வண்ணமென் னடைத்தனி யோதிம
னாய்ந்துகை பழகியர் வேய்ந்தன பொருள்போற்
புடையுடுத் தீர்ம்பா சடைமிடை பொழிலுந்
தடம்பாம் புரியுஞ் சுடர்ந்தோங் கெயிலு
நீண்மணி மாடமுஞ் சேண்மலி ஞெள்ளலும்

வயங்கா நின்ற வியன்சீர் முகவைப்
பேரு ராளி போரு ராளி
கல்வி யுரத்தான் செல்வி யுரத்தன்
பொன்னுச் சாமி முன்னைப் பிறவிதோ
றாற்றற னுருக்கொடு தோற்றியாங் கவன்பா

விளைய பசுங்கான் முளையென முளைத்தசேய்
நோக்குமங் கையர்க்குப் போக்குபு கலன்கலை
யலர்பெரி தணிவித் திலகெழிற் செவ்வியன்
விண்ணந் தாங்கி கண்ணொன் றிரண்டா
னிமையாப் பார்ப்பினு மமையா தென்ன

வாயிர மெய்துமா மேயதொல் வளத்தான்
அறலே பொழிநீ னிறமுகில் வெள்கக்
காசும் பொலனுந் தூசு நீர்வீராஅய்
வறியார்க் கீத்கெதிர் குறியா வள்ளல்
எண்ணில்விம் மிதத்தொழில் பண்ணிவை வல்லுநன்

மன்றமி ழாசான் குன்றிமெய் குறுக
வில்லா தல்ல தெல்லா மரபுளி
யோதி நுனித்தோர்ந் தேதிலாக் கிசைத்துச்
செவ்வே தானு மவ்வா றியங்கியான்
மயற்கை னீங்கயி வியற்கைநுண் ணறிஞன்

பொறையரு ளின்சொ லுறுதி வாய்மை
யின்னை வுயர்ந்த வென்னபண் பிற்கு
நாட்டின ரெடுத்துக் காட்டுதற் கமைந்தகோ
நீறுகண் டிகையுந் தேறுமைத் தெழுத்து
மொருவா துளத்துமெய்ப் பொருளாப் பற்றிச்

செறிவுறு மாவியு மறிவொரூஉம் பண்டமுங்
கண்ணுதற் கடிமையவ் வண்ணல துடைமை
யென்ற வுண்மை நன்று தெள்ளியோன்
கூற்றடர் குரைகழல் போற்றினன் போதுதா
யொழிவொழி யன்பின் வழிபடு குரிசில்

உன்னு போழ்தெனக் கென்னினு மினியன்
தொழுதகை யுக்கிர வழுதிப் பேரான்
ஈண்டைத் துறுநர் பாண்டித் துரையென
வழங்கவெண் மாதிர முழங்கிசை யவனே.

திருச்சிற்றம்பலம்

# நமது சங்காபிமானம்

சென்ற ஐப்பசி மீ நமது மதுரைத் தமிழ் சங்கத்தின் வித்வத் கழகத்தின் அங்கத்திலுளொருவராக, கோலாலம்பூரில் வசிக்கும் வித்வான் காரை-ஸ்ரீமத்-சிவசிதம்பரையரயவர்கள் சேர்ந்துள்ளார்கள். இவ் வையரவர்கள் நமது சங்கசம்பந்தம் பெற்றகாலம் சிறிதேயெனினும் நம் சங்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாய ஏடுகள் அனுப்பியும், நம் 'செந்தமிழ்'க்கு இதுவரை பத்துச் சந்தாதார்கள் சேர்த்தனுப்பியும், நம் இந்துமதப் பிரசங்கமாகிய சத்கருமத்தையே தம் கருமமாக மேற்கொண்ட ஐயரவர்கள் அதுபற்றித் தாம் செல்லும் பலவிடங்களிலும் நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழியை ஆதரித்தல் நம் தமிழ்மக்கள் கடமை யென்பதைப் பல்லோருக்கும் அறிவுறுத்தியும் நம் சங்காபிமானமே. பெரிதும் மேற்கொண்டு செய்துவரும் காரியங்கள் பல.

இவ்வையரவர்களே போன்று நம் சங்கத்தின் அங்கத்தினராய் ஒவ்வொருவரும் கல்வி வகையானும் பொருள் வகையானும் தம்மாலும் பிறராலும் இயன்றவரை நம் சங்கத்திற்குச் செய்தும் செய்வித்தும் வருவரோ, புறவிருள் நீக்க வொளிக்கற்றை பரப்பி அத்தமிக்கும் செஞ்ஞாயிறு போன்றல்லாது நம் சங்கம் அகவிருள்நீக்கும் தமிழ்க் கற்றை பரப்பி என்றுமழியா ஞானபானுவாய் விளங்குமென்பது உண்மையே.

நம் சிவசிதம்பரையவர்களது நம் சங்காபிமானம் இம்மட்டோ! அன்று அன்று; இன்னும் பலவுள. அவற்றுள் ஒன்று கீழே காட்டுதும்.

மேற்படி ஐயரவர்கள் தம் நற்றாய் சிவபத மடைந்த ஞான்று நிகழ்த்திய தான தருமங்களில் ஒரு பகுதியாக வைத்து ரு 7-8-0 நம் தமிழ்ச் சங்கத்தின் உபயோகத்திற்காக நம்பால் வரவிடுத்துள்ளார்கள். அந் நன்கொடையை, நம் தமிழ் நாட்டுச் சுபாசுபங்களில் எவ்வளவோ பொருள்கள் விரயஞ்செய்யப்படுவனவற்றுள் தருமம் என்ற முறையில் செலவாகும் சில பகுதிகளில் இவ்வித்தியா தருமத்தையும் ஒரு பகுதியாக வைத்து உபசரித்து வரவேண்டுவது நம் தமிழ் மக்கள் அனைவர்க்கும் உரிய அரும்பெரும் கடமை யென்பதனை அறிவுறுத்தற் பொருட்டே

நமது ஐயரவர்கள் முன்னர்த் தாமே செய்து காட்டியதாக எண்ணுவதே இயைபுடைத்தே.

இவ் வையரவர்கள் இவ்வாறு காட்டிய அரிய பெரிய தமிழபிமானம் அறிவுடையார் எல்லாரானும் பெரிதும் பாராட்டத்தக்கது. இந்நெறியினைப் பின்பற்றி நம் தமிழ்மக்களனைவரும் தங்கள் தங்கள் கிரகங்களில் செலவாகும் சுபாசுப கருமங்களிலெல்லாம் பலவாறாக வியற்றற்குரிய தான தருமங்களில் இம்மதுரைத் தமிழ்ச் சங்க வித்தியா தானத்தையும் ஒன்றாக வைத்து அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு சிறிது சிறிது பொருளுதவி வரினும், அஃது இச் சங்க வளர்ச்சிக் குரியதோர் பெரிய மூலதனமாக விளங்கு மென்ப பதில் யாது மைய மின்று. இம் முறையே கொண்டு அரும் பெருங்காரியங்களை மேலை நாட்டு ஐரோப்பியர் பலர் கூடி எளிதில் முடிக்கின்றார்களென்பது பலரும் நன்கறிந்த விஷயமே. அவ்வாறே நமது இந்து தேச வாசிகளும் பொது நன்மையான இத்தகைய காரியங்களில் முயன்றுவரின் பலவகையானும் நமது தேசம் செழித்து யாவரும் ஒரு குறையுமின்றி வாழ்வாரென்பது சரிதமே.

*இங்ஙனம்,*

சங்காபிமானிகட்குத் தொண்டுபூண்டொழுகும்

**பொ. பாண்டித்துரை**

15-2-1905

அக்கிராசனாதிபதி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

# வைத்தியசாரசங்கிரகம் எனும் புத்தகத்திற்குப் பாண்டித்துரைத் தேவரவர்களின் முதற்பதிப்பின் முகவுரை

உ

திருச்சிற்றம்பலம்

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டம், பழமையான நாகரிகங்கள் பலவற்றினும் விருத்தி பெற்றிருந்தது போலவே, மானுட வாழ்க்கைக்கு இன்றியமையாத மருத்துவ முறையிலும் பெருஞ் சிறப்புடையதாயிருந்தது. நம் முன்னோர்கள் ஆயுள்வேத முறைகளைத் தம் சூக்ஷ்ம தரிசனத்தால் கண்டெழுதி யடைந்த பெருமையைப் போல, பழங்காலத்தில் வேறெந்நாட்டாரும் அடையவில்லை யென்பது திண்ணம். நம் சென்னைக் கவர்னராகவிருந்த ஆம்தில் பிரபு அவர்கள், வைத்தியசாலை ஒன்றைத் திறக்க நேர்ந்தபோது, ஆதியில் அரேபியாவிலும், அங்கு நின்று ஐரோப்பாக் கண்டத்தினும் பரவிய வைத்திய முறையெல்லாம், பழங்காலத்தில் இந்தியாவினிடத்தினின்று பெற்ற பெருஞ்செல்வங்களே என்று கூறிய விஷயம், பலருடைய நினைவிலும் இன்னும் மறக்கப்படாதிருக்கலாம். இவ்வைத்திய முறையில் நம் பெரியோர்கள் காட்டிய அற்புதப் பெருமை நம்மால் இங்கு அளவிடுந்தரத்தன்று பூர்வீகரால் எழுதப்பட்ட ஆயுள் வேத நூல்கள் வடமொழியினும் தென்மொழியினுமே மிகுதியாகவுள்ளன. நம் நாட்டுச் சிறந்த வைத்தியர்கள், அப்பெரியோர் எழுதிய முறையையே கையாளுகின்றனராயினும் பிற்காலத்திற்போலிவைத்திய நூல்கள் பல, முன்னோரியற்றிய பெயரை வைத்து வெளியிடப்பட்டமையால் பொதுவாக வைத்திய நூல்களெல்லாம் பெருங்குழப்பத்தைத் தருவனவாயின நூல்களென்று பொய்யும் புனைந்துரையுமாக இக்காலத்திலும் வெளியேறும் புத்தகங்களோ எண்ணிறந்தன. இவ்வாறு நம்மவர் செய்யும் பெருந்தவறுகள் உலகத்துக்குப் பெருந்தீங்கு தருவதோடு, நம் முன்னோர் கண்ட ஆயுள் வேதத்தின் உண்மைப் பெருமையை யெல்லாம் தலைகீழாக்கியும் விடுகின்றன. ஆதியில் நம் தேசத்தினின்று பரவிய வைத்திய முறை, ஏனைய நாடுகளில் அவ்வந்நாட்டாரது விடாமுயற்சியாலும் ஆராய்ச்சியாலும் மென்மேலும் பெருகிவளர, நாம் அதனைப் பேணிப் பேணிப் பெருமைப்படுத்தாமற் குறைவுபடுத்துவது, நமக்கே பெரிதும் வெட்கமும் துக்கமும் உண்டாக்கத்தக்கது.

என் அரும்பெறற் றந்தையாரவர்கள், நம் வைத்திய முறையின் பெருமையையும் அதன் பிற்கால நிலையையும் உள்ளத்திலுன்னி, முன்னோரது உண்மை வைத்திய முறைகளையெல்லாம் எளியோரும் தெளியவுணர்ந்து கொள்ள வேண்டி, இராமநாதபுரத்தில் தம்மிடத்தில் ரைட்டர் வேலையிலிருந்தவரும், தமிழ்வைத்தியர் பரம்பரையில் வந்தவரும், பிரபல அநுபவ சுதேச வைத்தியரும், இங்கிலீஷ் யுநாநி வைத்திய முறைகளுந் தெரிந்தவருமாகிய **ஸ்ரீமத் முத்துக் கருப்ப பிள்ளை** என்னும் ஒருவரைக் கொண்டு இவ் வைத்திய நூலையெழுதுவித்தார்கள். அவர்கள், இந்நூலுட் கூறிய மருந்துகளுட் பெரும்பான்மையும் தங்கள் பொருட் செலவிலே செய்வித்துப் பலருக்குங் கொடுத்து அநுபவமானவைகளையே இதனுட்சேர்க்கும்படி செய்வித்தார்கள். பின்னர் முதலிற்பதிப்பித்த புத்தகங்கள் யாவுஞ் செலவழிந்து போனமை தெரிந்து, அதனைத் திரும்பவும் பதிப்பிக்கவேண்டுமென்று யான்கொண்டிருந்த எண்ணத்தை அறிவித்தகாலத்து, சிவத்தைப் பேணுந் தவமிக்குடையரும், அண்டினர்க்காக்கும் அருண்மிக்குடையரும் என்னுள்ளிடங்காணா அன்பிற்குரியரும், எனதின்னுயிரனைய நன்னிலைத் துணைவரும், வரையாதளிக்கும் வள்ளலுமாகிய, இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் இராஜா **எம். பாஸ்கரசேதுபதியவர்கள்** தாமே அதற்கு வேண்டும் பொருளுதவி செய்து வெளியிடுவதாகச் சொல்லி, அவ்வாறே இற்றைக்கு 10 வருஷங்கட்குமுன் இதன் இரண்டாம் பதிப்பை அச்சிடுவித்துதவினார்கள். இவ்விரண்டாம் பதிப்பில் முதற்பதிப்பினிலும் அநேக விஷயங்கள் அதிகமாகச் சேர்த்துள்ளமை பலரும் நன்கறிந்ததே. இவ்விருமுறையிலும் அச்சிட்ட பிரதிகளனைத்தும் செலவாயினமையாலும், என் நண்பரிற் பலர் இப்புத்தகம் வேண்டினமையாலும் அதனையே மூன்றாம் பதிப்பாக அச்சிடக் கருதி இந்நூலியற்றிய வைத்திய முத்துக் கருப்பப்பிள்ளை அவர்களாலேயே தம்மனுபவ ஆராய்ச்சியால் எழுதி வைக்கப் பெற்றிருந்த மூலிகைகளின் சத்துக்கள், தைல வகைகள் முதலியவற்றை அப்பிள்ளையவர்களது புத்திரரும், பிரகிருதத்தில் வைத்தியருமாயிருக்கும் கிருஷ்ணசாமி பிள்ளையென்பவரிடமிருந்து பேற்று இதனுட்சேர்த்துத் தக்கவாறு ஆராய்ந்து **மதுரைத்தமிழ்ச் சங்கப்பதிப்பாக** இம்முறை பதிப்பிக்கலாயிற்று. இந்நூலுடைய அருமை பெருமைகளெல்லாம் இதனை முற்றும் நோக்குமிடத்து நன்கு வெளியாமாதலால் அதனை இங்கெடுத்தெழுதல் மிகையாம். நம் நாட்டார்க்கு இந்நூல் பெருநன்மை பயக்குமென்று உறுதியாக நான் நம்புகின்றேன்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் *இங்ஙனம்,*
பராபவ-ஹூ வைகாசி மீ 3உ **பொ. பாண்டித்துரை**

# திருப்பணிமாலை எனும் புத்தகத்திற்குப் பாண்டித்துரைத் தேவரவர்களின் முகவுரை

உ

திருச்சிற்றம்பலம்

திருவாலவாயுடையார் திருப்பணிமாலை என்பது, துவாதசாந்த க்ஷேத்திரமும், இறைவன் எண்ணென் திருவிளையாடல்களை இயற்றியருளிய ஸ்தலமுமாகிய திருவாலவாயிலுள்ள திருக்கோயில் திருக்கோபுரம், மண்டபம், பொய்கை, வாகன முதலிய சிவதர்மங்கள் இன்ன இன்ன காலத்து இன்னார் இன்னாரால் இவ்வாறு இயற்றப்பெற்றன என்பதை முறைப்படத் தமிழ்ப்பாவில் அமைத்துப் பாடப் பெற்றதொரு நூலாகும். இத்தகைய திருப்பணிமாலைகள் முக்கியமான சிவாலயங்கட்கெல்லாம் முன்னோரால் அமைக்கப்பட்டுள்ளன என்பர். இம்மதுரைத் திருப்பணிமாலை பெரும்பாலும் கட்டளைக் கலித் துறைகளாலும் சிறுபான்மை ஆசிரிய விருத்தங்களாலும் பாடப்பெற்றது; இம்மாலை இயற்றியவர் இன்னாரென்பது நிச்சயிக்கக்கூடவில்லை. தாண்டவமூர்த்திப் பண்டாரம் இதனையியற்றியவர் என்பர் சிலர். இந்நூற்பாடல்களிற் சில சிறந்தும் சில சிறப்பின்றியும் அமைந்திருத்தலை நோக்கும்போது இந்நூல், பலராற் பாடப்பெற்றதுபோலும் என்று கருதலாம். எங்ஙனமாயினும், மதுரைத் திருக்கோயில் சம்பந்தமான புராதன சரித்திரங்கள் பலவற்றை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இந்நூல் விளக்குவதென்பதிற் சிறிது மையமில்லை.

இந்நூலிற் சிற்சில பாடல்களைச் சிலர் வெளியிட்டிருப்பதன்றி நூன்முழுதும் இதற்கு முன்பு வெளிவந்திலது. இத்தகைய நூல் புராதனத் திருப்பணிகளை மட்டுமேயன்றி, அச்சிவதர்மங்களை நடத்திக் கீர்த்திபெற்ற புண்ணியசீலர் பலர் வைபவங்களையும் நன்கு விளக்குதலால், இந்நூலைப் போற்றிவைத்தல் இன்றியமையாததென்று கருதினேன். ஆனால் நூன்முழுதும் சுத்தமாக வமைந்த பிரதி கிடைக்கவில்லை. மதுரை ஸ்ரீ பரமசிவபட்டரவர்களாலும் மகா ா ா ஸ்ரீ மு. ரா. அருணாசலக் கவிராயரவர்களாலும் கிடைத்தனவும், இறுதியிற் சிதைந்தனவுமான இரண்டு பிரதிகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்து இந்நூல் பதிப்பிக்கலாயிற்று. எழுதியோரால் மிகுதியும் வழுப்பட்டுக்கிடந்த இப்பிரதிகளை வைத்துப்

பதிப்பித்த என் முயற்சியிலுள்ள குற்றங்குறைகளை அறிஞர் எனக்கறிவிப்பினும், நல்ல பிரதிகளுடையவர் அவற்றையனுப்பினும் அடுத்த பதிப்பில் திருத்தி வெளியிடுவதோடு, அன்னோர்பால் என்றும் நன்றியறிந்தவனுமாவேன்.

இந்நூலில், தருப்பணிசெய்த முன்னையோர் வரலாறுகளுள் கெல்ஸன் துரையவர்களது "மதுரை நாடு" (The Madura Country) முதலியவற்றாலும் வேறுசில தமிழ்நூல்களாலும் தெரியவந்த விஷயங்களை அவ்வப்பாட்டின் கீழ்க்குறிப்பில் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இம்மாலையிற்கண்ட திருப்பணியிடங்கள் சில இப்போது முற்றும் மாறிவிட்டன; இவை விளங்காது போயினும், வற்றத் திருப்பணியிடங்கள் பெரும்பாலும் கீழ்க்குறிப்பில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மதுரை ஸ்ரீ பரமசிவப்பட்டரவர்கள் இவை சம்பந்தமாகத் தெரியவேண்டிய விவரணங்கள் சிலவற்றை விளக்கி உதவிபுரிந்தார்கள்.

"மதுரைத்தலவரலாறு" என்னும் பெயர் கொண்டதும் அவ்வளவு சிறப்பில்லாத தமிழ்நடையில் அமைந்ததுமான சிறு நூலொன்றின் பழம் பிரதியும் இத்திருப்பணிமாலையுடன் கிடைத்தது. இதனுட்கண்ட சரித்திரங்களால் மதுரையைப் பற்றிய பல விஷயங்களைச் சுருக்கமாக நாம் அறியக்கூடும். பழைய சில சாஸனங்கள் பாஷை நயத்தில் தாழ்ந்தனவாயிருப்பினும், அவற்றைத் தமிழபிமானிகள் அறிந்து மகிழ்வதுபோல, இந்நடைநூலையும் விஷயநயம்பற்றிக் கொள்வார்களென்று நம்பி அதனை இம்மாலையின் முதலிற் பதிப்பித்திருக்கிறேன். இதனுள் திருப்பணி செய்தோர் பெயர் காலம் இடம் முதலியவை ஒரு கோவைப்பட எழுதியிருப்பது எல்லாருங் கவனித்தற்குரியது. இங்ஙனம் பெருஞ் சிவபுண்ணியங்களை நடத்திய தர்மவான்களுடைய திருப்பணி விவரங்களைத் தமிழகத்துக்கு அறிவித்து வெளியிடுந் திருப்பணியை எனக்களித்த ஆலவாயடிகளின் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

*இங்ஙனம்,*

பொ. பாண்டித்துரை

திருச்சிற்றம்பலம்

# தமிழ்ப்பழஞ் சரிதம்

தமிழ்மொழியின் ஆதிவரலாறு முழுவதும் அளந்தறிதல் அருமையான செய்கையாயினும் அம்முழுமங்கலான காலத்தின் நிலையை நாம் ஊகித்தறிதற்குப் பழந்தமிழ் நூல்களும் வேறுசில புறக்கருவிகளும் சிறுசிறு நக்ஷத்திர வொளிபோல விருந்து உதவுகின்றன. மிக்க இருட்சி கொண்ட நள்ளிரவில் சிற்றுடுக்களின் உதவியால் உலகத்துப் பொருள்நிலை எவ்வளவு சிறுபான்மையாக அறியப்படுமோ, அவ்வளவே பழங்கால நிலையைப் பற்றி நாம் அறியக்கிடப்பதும். ஆயினும், அவ்வொளியால் வெளியாகின்றவற்றை அதன் சிறுபான்மைகருதி விட்டொழியாது அவற்றை அறிவதற்கே நம்மனம் பேரவாக்கொண்டு முந்துதல் வழக்கே. மக்களின் இயற்கை நிகழ்ச்சியாகிய இவ்வவா எம்மையுந் தூண்டலால், அவ்விருண்டகால நிலையைப் பற்றி எம்மாராய்ச்சியிற் கண்டவைகளை முதலிற் கூறிப்பின்பு சந்திர சூரிய வொளிகலந்ததுபோன்ற காலநிலையைப் பற்றிப் பேசுவோம்.

தமிழ் மொழியின் மிகப்பழைய காலத்துச்சரித்திரம் அறிய வேண்டின் நவீன சாத்திரமாகிய பாஷாதத்துவ நூன்முறை அதற்குரிய கருவிகளில் சிறந்த தொன்றேயாம். அச்சாத்திரமானது, உலகத்து வழங்கும் பல மொழிகளையும் சீர்தூக்கியாராய்ந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கவல்லது. அவற்றால் ஒற்றுமையுடைய மொழிகளை வழங்கும் மக்கள், கணித்தற்காகக் காலமொன்றில் ஓரிடத்தில் ஒன்றாயிருந்தலரெனவும், வேற்றுமையுடையமொழிகளை வழங்கும் மக்கள் தொடர்பின்றிச் சேய்மையாய் வேற்றிடத்தில் வாழ்ந்தவர்கள் எனவும் நாம் அறியலாகும். தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளமென்னும் மொழிகள் இப்போது வெவ்வேறிடத்தில் வெவ்வேறு மக்களால் வழங்கப்படுகின்றனவாயினும் அவையெல்லாம் திராவிடம் என்னும் பொதுப் பெயர்பெற்றுத் தமிழின் சேய்மொழிகளென்று எவ்வாறு விளங்குகின்றதோ, அதுபோலவே, உலகத்து வழங்கும் மொழிகளெல்லாம், ஆரியம், செமிடிக், துரானியம் என்னும் மூன்று பெரும்பிரிவுகளாக ஆராய்ச்சிவல்லுநரால் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் வடமொழி, கிரீக், லாடின் என்பன ஆரியமொழிகளெனவும், ஆரமெயிக், ஹிப்ரூ, அரபி

என்பன செமிடிக் மொழிகளெனவும், தமிழ், மங்கோலியம், பின்னியம், போதியம், மலேயம் என்பன துரானிய மொழிகளெனவும் கூறப்படும். இவ்வாறு, உலகத்து வழங்கும் பற்பல மொழிகளும் இம்மூன்று பகுப்புள் அடங்குதலால், அம்மொழிகளையுடைய மக்களெல்லாம் ஒருகாலத்தில் மூன்று பிரிவினராயிருந்து காலாந்தரத்தில் அதினும் பல பிரிவினராயினரென்று பாஷாதத்துவ நூல் விளங்கக் காட்டுகின்றது. அவர்கள் மூன்று வகையினராய் ஒன்றாய் ஓரிடத்திலிருந்து பிரிந்தவரென்னுங் கொள்கையை மானுடவிகற்பநூலு (எத்னாலஜி)ம் பிறவும் ஆதரிக்கின்றன என்பர்.

இனி இம்முப்பிரிவுகள், நம் தமிழ் துரானியப்பகுப்பைச் சார்ந்துள்ளது. தமிழில் வழங்கும் நீ, நான், யாம், பெண் முதலாய பல மொழிகளும் ழகரப்பிரயோகமும் சீன மொழிகளில் வழங்குவனவென்றும், ஆஸ்திரேலியாவின் பழங்குடிகள் வழங்குந் துரானியபாஷை, தமிழோடு ஒருவாறு ஒற்றுமைகொண்டுள்ள தென்றும் சொல்லப்படுகின்றன. *ஆஸ்திரேலிய திராவிட பாஷைகளின் ஒற்றுமை முதலியவற்றைக் கண்டெழுதினவர் "நாரிஸ்" என்னும் பண்டிதர் ஆவர். அன்றியும் உடற்கூற்று வண்ணத்தால் திராவிடர் மங்கோலியப் பிரிவைச் சேர்ந்தவரென்பது "எத்னாலஜி" என்னும் மானுடவிகற்ப நூலாசிரியர் முடிபாகவிருக்கின்றது. இவ்வாறு தமிழ்மக்கள் துரானியப் பகுப்பினராயிருத்தலால், ஆரியக்கூட்டத்தைச் சார்ந்த மக்களோடு அவர்கள் முற்றும் வேறுபட்டவரென்பது தெளிவாம். இதுபற்றியே ஆரியமொழியும் தமிழ் மொழியும் ஆதியில் ஒன்றற்கொன்று யாதும் தொடர்பில்லையென்பது துணியக்கிடத்தலால், இம்மொழிகட்கு தொடர்புண்டென்று கூறுவோரது கூற்று முற்றும் பேதைமையின் பாலதே என்பது தெள்ளிதிற் தெளிந்த தொன்றாம்.

தமிழ் மக்களது புராதனநாடு மத்திய ஆசியாவென்று பலரும் இப்பரதகண்டமே யென்று சிலரும் கூறுவர். இவ்விருகொள்கைகளும் முன்னதே வலியுடைத்து. அஃது எது பற்றியோவெனின் தமிழர் மங்கோலிய வகுப்பைச் சார்ந்திருத்தலாலும், சீன தேயத்திலுள்ள உயர்ந்த மேட்டுத் தரையில் வசிப்பது பற்றிச் சீனர் தம்மை "வானவர்" (Celestials) என வழங்கும் பெயரையே அங்கு நின்று இங்குவந்த தமிழரசருள் ஒருவராய

* See Natural History of -Man —Astralians and Cromondalians. Vol. II; page 486-487

சேரரும் பெற்றிருந்தலாலும் சீன பாஷையில் "ழகர"ப் பிரயோகம் உண்மையாலும் சோழ வகுப்பைச் சேர்ந்த திரையரில் சில பிரிவினர் தம்மை சீனத் திரையர் என்னும் பேர் புனைந்து சாசனங்களில் வழங்குதலாலும், நீ, நான், யான் பெண் முதலாய தமிழ்மொழிகள் சீனபாஷையிலும் காணப்படுதலாலும் பிறவற்றாலும் தமிழரின் ஆதிநாடு சீனமேயாகுமென்று ஆங்கிலமும் தமிழும் கற்று நமது பாஷாபிமானமே மேற்கொண்டு அப்பாஷையைப்பற்றின சரித்திர நுட்பங்களை நம் அரும் பெரும் ஆராய்ச்சி கொண்டு எழுதிய நூலால் பிறரும் எளிதில் அர்த்தங் கொள்ளுமாறு செய்தமாவுபகாரியாய மகா -ா- ா- ஸ்ரீ வி. கனகசபை பிள்ளையவர்கள் வெள்ளிடைமலைபோல் விளக்கியிருக்கின்றனர். சரித்திரவாராய்ச்சிவல்ல அறிஞர் பலர் ஆரியர் இப்பரதகண்டத்தில் முன் இங்கு பழங்கிய பாஷையாதாம் என்றாராய்ந்துள்ளார். அவருட் பலர் தமிழ் மொழியே அதன் பூர்வபாஷையாகுமென்று சுட்டிக்காட்டுகின்றனர். "வடவேங்கிடந் தென்குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என்றும், "நெடியோன் குன்றமுந் தொடியோன் தெய்வமும், தமிழ்வரம்பறுத்த தண்புனனாடு" என்றும் எல்லைகூறிப் போந்தனவெல்லாம் பல்லாயிரமாண்டுக்குப் பிற்பட்டெழுந்ததுனிபாம். தமிழணங்கு ஆந்திரம் கன்னட முதலிய சேய்களைப் பிறறறியாது தனியிளமைப் பெற்று விளங்கிய காலத்திலே, அந்நங்கைக்கு ஆடரங்காகக் கொண்ட பிரதேசம், "வடவேங்கடந்தென்குமரியாயிடை" யன்று: வடவிமயந்தென்குமரி யாயிடையே. அவ்விளமை பெற்றிருந்த தமிழ் பின்பு ஆரியர் படையெடுப்புக்களால் அழிப்புண்டு, தன் ஆடரங்கைச் சுருக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. அன்றியும் அவ் வந்நியரது கூட்டுறவை வெறுத்து அத்தமிழ் நங்கையோடி யொளியுமிடங்கள் பலவற்றில், தான் பெற்ற சேய்களை அங்கங்கே விட்டுப் பிரியவும் நேர்ந்தது. இவ்வாறு தமிழணங்கு தம் மையஞ்சியோடி ஒளிவதுகண்ட ஆரியர் அந்நங்கைக்குத் "திராவிட என்னுங் காரணப்பெயரை வழங்கலாயினர். (திராவிடம் என்னும் மொழிக்கு வடமொழியில் ஒடுதலுடையதென்பது பொருள்) தமிழ்நங்கை ஆங்காங்கே விட்டொழிந்த சேய்மொழிகள் பரதகண்டத்தின் பலவிடங்களிலும் ஆதியிற் றாம்விடப்பட்ட நிலையில்நின்றும் சிறிது மாறுபட்டு இன்றுமுள்ளன. அவையெல்லாம் நம் ஆதித்தாயின் சொரூபத்தையே பெரும்பாலும் கொண்டிருக்கின்றன என்பர். அவற்றுள், பங்காளத்துக்கும் நேபாளத்துக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் வசிக்கும் "திமல்" என்னும் புராதனமக்கள் பேசும் பாஷை தமிழோடு பெரிதும் ஒத்துள்ளது. இதுவன்றி வடமேற்குச் சிந்து நதிச்சமவெளியில் வசிக்கும் ஒரு ஜாதியாரது

மொழியும், இராஜ்மஹால் மலைப்பிரதேசத்து வழங்கும் பாஷையும், விந்தியமலையின் கீழ்முனையிலுள்ள சூடியநாகப்பூரில் வழங்கும் மற்றொருபாஷையும் நம் தமிழின் பாகதங்களாகவே இன்றும் உள்ளனவென்று தெரிகின்றது. இவ்வரலாற்றால் நாம் தெளிவாக அறிவதென்னவெனில், காலவரம்பு தெரியாதநாளில், தமிழ்மொழி இப்பரத கண்டத்தின் வடபாலிற் பரவியிருந்த தென்பதேயாம். இவ்வாறு கூறுவது சிலர்க்கு புதுமையாகத் தோன்றுமாயினும், வேறுபல சான்றுகளும் இக்கொள்கையே உண்மையென்பதை வற்புறுத்துகின்றன. தமிழ்ப் பழங்குடித் தலைவராகிய சேர சோழ பாண்டியரையும் வேறு சில சிற்றரசவகுப்பினரையும் பற்றி ஆராயின் இதன் உண்மை விளங்கும்.

- பொ. பாண்டித்துரை

* * *

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

| | ரூ. பை. |
|---|---|
| சங்கத் தமிழர் வாழ்வியல் | .. 75.00 |
| தமிழக மேடைநாடகப் பெண் கலைஞர்கள் -குறிப்பேடு | .. 25.00 |
| A Grammar of Contemporary Literary Tamil | .. 80.00 |
| Cilappatikaram | .. 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | .. 125.00 |
| Tani Pacura Togai | .. 30.00 |
| Dedication | .. 25.00 |
| Temple Chimes | .. 20.00 |
| Nala Venba | .. 45.00 |
| Tamil Heroic Poems | .. 40.00 |
| Six Long Poems from Sangam Tamil | .. 30.00 |
| Kurinci-P-Pattu-Muttollayiram | .. 40.00 |
| Kuruntokai | .. 110.00 |
| Landscape and Poetry | .. 50.00 |
| Tamil Culture and Civilization | .. 60.00 |
| Tolkappiyam and Astadhyayi | .. 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | .. 50.00 |
| தமிழில் நவீன நாடகம் | .. 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | .. 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | .. 80.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி - 1 | .. 50.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி - 2 | .. 65.00 |
| சோதிடவியல் | .. 70.00 |
| மூலிகைக் கற்பங்கள் | .. 80.00 |
| அமிர்த மதன கூத்து நாடகம் | .. 90.00 |
| சித்த மருத்துவ மணிகள் | .. 75.00 |
| கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவனை (முதல் தொகுதி) | .. 85.00 |
| Tamil Scripts - Work Book | .. 50.00 |
| Work Book Written Tamil | .. 50.00 |
| விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள் | .. 30.00 |
| திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள் | .. 25.00 |
| தமிழ்க் காட்சி நெறியியல் | .. 46.00 |
| இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் | .. 30.00 |
| ஒப்பிலக்கியம்:கொள்கைகளும் செயல்முறைகளும் | .. 15.00 |
| கருணையம்மன் அந்தாதி | .. 22.00 |